21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

BANQUET & EVENT CENTER
IN GTA SQUARE MALL

- Birthday Party
- Special Events
- Upto 50 People
- Reasonable Price

Contact: 416.640.3535

நதி 21 பாலம் 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2011

# ஒன்ராறியோ மாகாணத்தேர்தல் ஒக்டோபர் 6, 2011

ஒன்ராறியோ மாகாணத்தின் 40ஆவது தேர்தல் ஒக்டோபர் 6, 2011 இல் நடைபெறவுள்ளது. 107 உறுப்பினர்களைக் கொண்ட ஒன்ராறியோ மாகாண சட்டசபையில் (Legislative Assembly of Ontario) தற்போது லிபரல் கட்சி 70 உறுப்பினர்களுடன் ஆளும் கட்சியாக இருக்கிறது. பழமைவாதக்கட்சி 25 உறுப்பினர்களுடன் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிறது. புதிய ஜனநாயகக் கட்சியில் 10 உறுப்பினர்களும் மற்றும் இரு உறுப்பினர்களுக்கான இடங்கள் வெற்றிடமாகவும் உள்ளன.



லிபரல் கட்சியின் தலைவராக தற்போதைய ஒன்ராறியோ மாகாண முதல்வர் Dalton McGuinty இருக்கிறார். எதிர்க்கட்சி தலைவராக பழமைவாதக் கட்சியின் தலைவர் Tim Hudak இருக்கிறார். புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக Andrea Horwath இருக்கிறார். இவர்களை விட பசுமைக்கட்சியும் ஒன்ராறியோ மாகாணத்தேர்தலில் போட்டியிடுகிறது. அதன் தலைவராக Mike Schreiner இருக்கிறார். நடைபெறும் தேர்தலில் ஒன்ராறியோ மாகாண சட்ட சபையில் பெரும்பான்மை பெற்று ஆளும் கட்சியாக வருவதற்கு ஒரு கட்சி 54 உறுப்பினர்களை கொண்டு இருக்க வேண்டும்.

ஒன்ராறியோ மாகாண தேர்தலுக்கான பிரசாரம் உத்தியோக பூர்வமாக செப்ரெம்பர் 07, 2011 இல் ஆரம்பமாகின்றது. ஆனால் கட்சிகள் எல்லாம் தங்கள் தேர்தல் பிரசாரங்களை ஏற்கனவே தொடங்கி விட்டன. பழமைவாதக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தை ஆகஸ்ட் 29, 2011 இல் தங்கள் தேர்தல் பிரசார பேருந்தை அறிமுகப்படுத்தி யதுடன் ஆரம்பித்துள்ளனர்.

ஆளும் லிபரல் கட்சி அண்மையில் அறிவித்த திட்டங்களான ரொரன்ரோ கிழக்கு பொது மருத்துவ மனையை விஸ்தரித்தல், Cambridge இலுள்ள வான்வெளி ஆய்வு நிலையத்திற்கு பண உதவி வழங்கல் பல்கலைக் கழகங்களிற்கான பண உதவி வழங்கல், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்க பண உதவி வழங்கல் போன்றவை தேர்தலை மனதில் கொண்டு அரசியல் ஆதாயத்திற்காக லிபரல் அரசு அறிவித்த திட்டங்கள் என பழமைவாத கட்சித் தலைவர் Tim Hudak தெரிவித்துள்ளார். இதை லிபரல் கட்சி நிதி அமைச்சர் Dwight Duncan மறுத்துள்ளார். இவை லிபரல் கட்சியன் மூன்று வருடத் திட்டத்தில் ஏற்கெனவே பதியப்பட்டுள்ள திட்டங்கள் என அவர் கூறியுள்ளார்.

## லிபிய அதிபர் கடாபியின் குடும்பம் அல்ஜீரியாவில் தஞ்சம்

அல்ஜீரிய பத்திரிகைகளின் தகவல்களின்படி லிபிய அதிபர் Moammar Gadhafi இன் குடும்ப உறுப்பினர்களான அவரது மனைவி Safia, மகள் Aisha, மகன்கள் Mohammed உம் Hannibal உம் அல்ஜீரியாவிற்கு ஓகஸ்ட் 29, 2011 இல் வந்து சேர்ந்தார்கள்.



அல்ஜீரிய அரசு இன்னமும் லிபிய போராளிகளினுடைய "தேசிய மாற்றம் கொண்டு வரும் சபையை" (National Transitional Council) லிபிய நாட்டின்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# லிபிய அதிபர்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உத்தியோக பூர்வமான அரசாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. லிபிய போராளிகளின் தேசிய மாற்றம் கொண்டு வரும் சபை கடாபியின் மற்றொரு மகனான Khamis சண்டையின் போது கொல்லப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளது.

லிபிய அதிபர் மோமர் கடாபி தற்போது எங்குள்ளார் என்று உறுதிப்படுத்தப்படக் கூடிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. தற்போதும் கடாபியின் சொந்த ஊரான Sirte இல் கடாபியின் ஆதரவுப் படைகளுக்கும் போராளிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெறுகின்றது. ஒகஸ்ட் 29, 2011 இல் கடாபியின் ஆதரவு பேச்சாளர் ஒருவர் மோமர் கடாபி லிபிய அரசினை லிபிய போராளிகளினுடைய தேசிய மாற்றம் கொண்டு வரும் சபைக்கு கையளிப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகளுக்கு தயாராக உள்ளார் என தெரிவித்தார். ஆனால் போராளிகளோ மோமர் கடாபியும் அவரது குடும்பமும் தங்களிடம் முதலில் நிபந்தனைகளும் இன்றி சரண் அடையவேண்டும் என்று கூறியுள்ளார்கள். போராளிகள் கடாபியை மனிதநேயத்திற்கு எதிரான குற்றம் இழைத்தவர் என குற்றம் சாட்டி நீதிமன்றில் நிற்பாட்ட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்கள்.

போராளிகளின் "தேசிய மாற்றம் கொண்டு வரும் சபை" தலைவர் Mustafa Abdul - Jalil தங்களுக்கு நேட்டோ படைகள் தொடர்ந்தும் உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். லிபியாவில் சண்டைகள் முற்றாக முடிவடைந்தாலும் தங்களுக்கு நேட்டோ படைகளின் உதவி நாட்டை நிர்வகிக்க தேவை எனக் கேட்டுள்ளார்.

## ராஜீவ் கொலை வழக்கின் குற்றிவாளிகளை தூக்கிலிட இடைக்காலத்தடை

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரின் கருணை மனுவையும் சமீபத்தில் குடியரசுத்தலைவர் பிரதீபா பட்டீல் நிராகரித்தார். இதையடுத்து இது தொடர்பான கடிதம் ஒன்றை மத்திய உள்துறை அமைச்சு தமிழக அரசின் உள்துறை முதன்மை செயலாளருக்கு அனுப்பியது. அதில்



மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறும் கூறியிருந்தது. இதை அடுத்து வேலூர் சிறை மூவருக்கும் தூக்குத்தண்டனையை நிறைவேற்ற செப்டம்பர் 9 ஆம் திகதியாக நாள் குறித்துள்ளது.

மூவரையும் காக்கக் கோரி தமிழகம் முழுவதும் பல்வேறு மட்டங்களில் போராட்டங்கள் வலுத்துள்ளன. இந்த நிலையில் மூன்றுபேரும் ஒகஸ்ட் 29, 2011 இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர். அதில் எங்களது கருணை மனுக்களை பரீசீலித்த முன்னாள் குடியரசுத் தலைவர்கள் கே. ஆர். நாராயணன், அப்துல் கலாம் ஆகியோர் உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை நிராகரித்துள்ளனர். இந்த நிலையில் குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டீல் எங்களது கருணை மனுவை நிராகரித்துள்ளார். 11 ஆண்டுகளுக்கு பின்னர் எங்களது மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எனவே இதை இரத்து செய்யவேண்டும் என்று கேட்டனர்.

மரண தண்டனையை நிறுத்திவைக்க வேண்டும் என்று கோரி ஒரு மனுவும், ஆயுள் தண்டனையாக மாற்றக்கோரி இன்னொரு மனுவும் ஆக இரண்டு மனுக்கள் மூன்று பேரின் சார்பிலும் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டன. இவ்மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் ஒகஸ்ட் 30, 2011 இல் விசாரித்து 8 வார கால இடைக்கால தடை விதித்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டுள்ள மூன்று பேரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் நிராகரித்திருப் பதால் அதில் தலையிடும் அதிகாரம் முதல்வருக்கு இல்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். இவர்களுக்கான தண்டனையை முதல்வராக இருந்தபோது கருணாநிதி நினைத்திருந்தால் குடியரசுத் தலைவர் முடிவு எடுக்கும் முன்னர் குறைக்குமாறு கேட்டு இருக்கலாம் என்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி மீது, ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார். ராஜீவ்கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கவேண்டும் என்று கோரி முதல்வர் ஜெயலலிதா ஒகஸ்ட் 30, 2011 இல் சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தீர்மானத்தை அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக ஆமோதித்து நிறைவேற்றினர். இந்த தீர்மானம் குடியரசுத்தலைவர் பிரதீபா பட்டீலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## அன்னா ஹஸாரேவின் 13 நாள் உண்ணாவிரதம் முடிவு



அன்னா ஹஸாரேவின் கோரிக்கைகள் ஏற்க்கப்பட்டு அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் அன்னா ஹஸாரே தனது உண்ணாவிரதத்தை ஆகஸ்ட் 28, 2011 காலை 10 மணியளவில் முடித்துக்கொண்டார்.

ஊழலுக்கு எதிராக சட்டமூலம் கொண்டு வரவேண்டும் என்று போராடி வெற்றி பெற்றிருந்தாலும் நாடாளுமன்றத்தால் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா ஆரம்பத்தில் அன்னா ஹஸாரே கேட்டுக்கொண்ட மாதிரி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய மசோதா அல்ல. ஆரம்பத்தில் அன்னா ஹஸாரே பிரதமர் மற்றும் சிபிஐ ஆகியவற்றையும் இந்த புதிய சட்டமூலம் கட்டுப்படுத்த வேண்டும் என கேட்டிருந்தார். ஆனால் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள இந்த ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தில் பிரதமரும் மற்றும் சிபிஐ யும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் இவ் ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தில் அரச அதிகாரிகள் உள்ளடங்குவர் என்பதால் இது ஒரு ஊழலுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் வெற்றியாகவே கருதவேண்டும்.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜே பாலன் |
| தட்டச்சு: | கலா |
| அலுவலக முகாமையாளர்: | நிலானி |
| பதிப்பு: | Can Media Publishing Inc. |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# அனைவரையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ள மர்ம மனிதன் விவகாரம்! மனிதனைச் சாட்டி நாவாந்துறை மக்கள் மீது காட்டுமிராண்டித்தனம்!

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

கிறீஸ் பூதம் அல்லது மர்ம மனிதனின் நடமாட்டத்தினால் இலங்கையின் சிறுபான்மை இன மக்கள் அனைவரும் இன்று அச்சத்தில் உறைந்து போயிருக்கின்றார்கள். பெண்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வரும் இந்த மர்ம மனிதர்கள் பொதுமக்களை இம்சித்து அவர்களின் நிம்மதியைக் குலைத்து வருகின்றனர்.

மலையகத்தில் இரத்தினபுரி பகுதியில் தோற்றம் பெற்ற கிறீஸ் மனிதன் அடுத்தடுத்து வயோதிபப் பெண்களைத் தாக்கிக் கொலை செய்து வந்தான். இதனால் மலையகப் பகுதியில் கிறீஸ் பூதம் தொடர்பாக பரபரப்பும் அச்சத்துடன் கூடிய பதட்டமான சூழ்நிலையும் தோன்றியிருந்தது. மக்கள் இரவிலும், பகலிலும் அச்சத்தில் உறைந்து போயிருந்தார்கள். ஆனால் பொலிசார் இந்த விடயத்தில் அசிரத்தையுடன் செயற்பட்டதையடுத்து, பொதுமக்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டதன் பின்னர் 47 பேரை பொலிசார் கைது செய்தார்கள். இராணுவத்தில் இருந்து விலகிய இருவர் உட்பட இந்தச் சந்தேக நபர்களில் மனநிலை சரியில்லாத சந்தேக நபர்களும் இருந்தார்கள். இவர்களில் மனநிலை சரியி ல்லாதவர்களே பெண்களைக் கொலை செய்ததாகப் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

இந்த கிறீஸ் மனிதனின் நடமாட்டமும், நடவடிக்கைகளும் பின்னர் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெண்களை இலக்கு வைத்து திரும்பியது. தனிமையில் இருக்கும் பெண்களைத் தாக்குவதுடன், அவர்களது முகம், மார்பு, வயிற்றுப் பகுதிகளில் கூரிய நகங்கள் போன்ற ஆயுதத்தினால் மர்ம மனிதர்கள் காயப்படுத்திச் செல்வதாக முறையிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு காயப்பட்ட பெண்கள் சிலர் மட்டக்களப்பு பிரதேசத்தில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் பகுதியிலும் வயதான பெண் ஒருவர் மர்ம மனிதனின் தாக்குதலுக்கு ஆளாகியிருப்பதாகவும், யாழ்ப்பாணத்தில் வயோதிபர் ஒருவர் பற்றைக்குள் வைத்து மர்ம மனிதனால் தாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப் பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற மர்ம மனிதனி ன் நடமாட்டத்தினால் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையையடுத்து, மர்ம மனிதன் என சந்தேகிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஊர் மக்களினால் அடித்துக் கொல்லப்பட்டார். இவர் சந்தேகத்திற்கிடமான முறையில் இரவு வேளைகளில் நடமாடியதைக் கண்டதையடுத்தே பொதுமக்களினால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மலையகத்திலும் வியாபாரத்திற் காகச் சென்ற அப்பாவிகளான இருவர் மர்ம மனிதர் என்ற சந்தேகத்தின்பேரில் பொதுமக்களினால் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது. மர்ம மனிதர்கள் தனியாக வந்து பெண்கள் மீது தாக்குதல் நடத்தும் அதேவேளை, சில இடங்களில் சந்தேகத்திற்கிடமான முறையிலும், பொது மக்களை அச்சுறுத்தும் வகையிலும் 3 பேர் கொண்ட குழுக்களாகவும் நடமாடி வருவது பற்றியும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இவ்வாறு காணப்படுபவர்களைப் பொதுமக்கள் துரத்திச் சென்றபோது, அவர்கள் இராணுவ காவலரண்கள், இராணுவ முகாம்கள் அல்லது



பொலிஸ் நிலையங்களுக்குள் ஓடிச் சென்று மறைவதையும் பொதுக்கள் கண்ணால் கண்டிருக்கின்றார்கள். இவ்வாறு துரத்திச் செல்லும்போது சிலவேகைளில் வழியில் இராணுவத்தினர் கூட்டமாக வந்து நின்று துரத்திச் செல்லும் பொதுமக்களை நிறுத்தி, மர்ம மனிதர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டு, மக்களை அச்சுறுத்தி திருப்பி அனுப்பி வைப்பதும் சாதாரணமாக நடைபெறுகின்றது. பல இடங்களில் இவ்வாறு செல்பவர்களைக் கலைப்பதற்காக அவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதும் வழமையாக இடம்பெற்று வருகின்றது. இதனால் மர்ம மனிதர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதாகப் பொதுமக்கள் கூறுகின்றார் கள். இதுவரையில் இடம்பெற்றுள்ள மர்ம மனிதனுடன் தொடர்புடைய பல சம்பவங்களில், மர்ம மனிதர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களைப் பொதுமக்களே கண்டிருக்கின்றார்கள், சுற்றி வளைத்துப் பிடித்துள்ளார்கள். ஆயினும் பொலிசாரோ, இராணுவத்தினரோ சுற்றி வளைத்துப் பிடித்ததாகத் தகவல்கள் எதுவுமே இல்லை.

மர்ம மனிதர்கள் என்பது கட்டுக்கதையே தவிர அதில் எந்தவிதமான உண்மையும் கிடையாது என பொலிசாரும், இராணுவத்தினரும், அரசாங்க அமைச்சர்களும்கூட கூறி வருகின்றார்கள். ஆயினும் மர்ம மனிதர்களைக் கண்டால் அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது, அவர்களைப் பிடித்துப் பாதுகாப்பாகத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்களுக்கு கிளிப்பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது போன்று கூட்டங்கள் கூட்டி அறிவுறுத்தி வருகின்றார்கள்.

மர்ம மனிதர்களாக இராணுவத்தினரே செயற்பட்டு வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை இராணுவத்தினர் தொடர்ச்சி யாக மறுத்து வருகின்றார்கள். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ச, மர்ம மனிதர்களுக்கும் இராணுவத்தினருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் மர்ம மனிதர்களின் பின்னணியில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களே இருக்கின்றார்கள் என்றும் அவர்கள் மர்ம மனிதனைச்சாட்டாக வைத்து, மூன்று இடங்களில் இராணுவ முகாம்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தியிருக்கின் றார்கள் என்றும் கூறியிருக்கின்றார்.

இவ்வாறான பயங்கரவாதச் செயற்பாடுகளை அனுமதிக்கப் போவதில்லை என்பதுடன் சட்டத்தை எவரும் தங்கள் கைகளில் எடுத்துச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் கடும் தொனியில் எச்சரிக்கை செய்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக முஸ்லிம் கிராமங்களில் பெண்கள் மீது மர்ம மனிதர்கள் தாக்குதல்கள் நடத்தி வருவதைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டு வந்து அங்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோருவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை முஸ்லிம் மதத் தலைவர்கள் சந்தித்திருந்தார்கள். இந்தச் சந்திப்பின்போது, முஸ்லிம் மதத் தலைவர்களது கருத்துக்களையும், அவர்கள் கூற வந்த விடயங்களையும் கூறுவதற்குச் சந்தர்ப்பமளிக்காமல், மர்ம மனிதர்கள் என்பது வெறும் கட்டுக்கதையே, அதில் எந்தவித உண்மையும் கிடையாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலியுறுத்திக் கூறியதுடன், சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு எவரும் செயற்படக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார்.

ஆயினும் மர்ம மனிதர்களைக் கண்டால் அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது, அவர்களைப் பிடித்துப் பாதுகாப்பாகத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்களுக்கு கிளிப்பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது போன்று கூட்டங்கள் கூட்டி அறிவுறுத்தி வருகின்றார்கள். இதனால் மர்ம மனிதன் விவகாரத்தில் பொதுமக்களின் கருத்துக்களுக்கு பொலிசார், இராணுவத்தினரும் மற்றும் அரசாங்கமும் செவிசாய்ப்பதே கிடையாது. அவர்களின் கருத்துக்கள் எதனையும் ஏற்பதற்கு மறுக்கின்ற போக்கும் அதனால் பொலிசார் மற்றும் இராணுவத்தீனர் மீது பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் அதி- கரித்துச் செல்கின்றது. அதேவேளை, அரசாங்கத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்ற போக்கும் காணப்படுகின்றது. மர்ம மனிதன் விவகாரத்தில் பொதுமக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு செயற்படுகின்றார்கள் என குற்றம் சுமத்தி

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# வாழ்க்கை சூழ்நிலைகளை சரியாகக் கையாள்வதால்தான் வெற்றி வருமே தவிர பிரார்த்தனைகள் செய்வதால் வெற்றிகள் நிகழாது



**சத்குரு வாசுதேவ்**

இன்று மனிதர்கள் பலரும் பைத்தியக் காரத்தனமாக சிலவற்றைச் செய்துவிட்டு பிரார்த்தனைகளின் மூலமாக அவற்றை சரி செய்துவிடலாம் என்று நம்புகிறார்கள். வாழ்க்கை ஒன்றும் அப்படி இயங்குவதில்லை. உலகியல் வாழ்க்கையை நீங்கள் உரிய முறையில் கையாண்டால்தான் உங்கள் வாழ்க்கையும் நன்றாக இருக்கும். உங்கள் புத்தியை பயன்படுத்தாமல் முட்டாள்தனமாக வாழ்ந்துவிட்டு எத்தனை பிரார்த்தனைகள் சொன்னாலும் எந்தப் பயனும் இல்லை. இதற்கு இந்தியாவே கண்கண்ட உதாரணம்!

சிலர் வாழ்க்கையில் வெற்றி பெற்றால், அவர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால், அவரது வாழ்க்கையை உன்னிப்பாக கவனித்தால், பற்பல விஷயங்களைச் செய்ய வேண்டிய விதத்தில் செய்ததாலேயே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது புலனாகும்.

பிரார்த்தனை என்பது ஒருவிதமான மன நிலை. அது ஒரு செயல் அல்ல. நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு எதையெதையோ யோசிப்பதற்கு பெயர் பிரார்த்தனை அல்ல. உங்கள் வாழ்க்கை பிரார்த்தனைத் தன்மையோடு நிகழத் தொடங்குமேயானால் அது மிகவும் அழகானது. நீங்கள் சுவாசிக்கும் முறை, உண்ணுகிற முறை, நடக்கிற முறை அனைத்திலுமே ஒருவித புனிதத்தன்மை ஏற்படுமேயானால் அதுதான் பிரார்த்தனை. எனவே பிரார்த்தனை என்பது உங்கள் வாழ்வுக்குள் நீங்கள் கொண்டுவர வேண்டிய ஒரு தன்மையாகும். அந்தத் தன்மை உங்கள் வாழ்வில் வருமேயானால் அனைத்தும் சிறந்த முறையில் செயல்படத் தொடங்குவதோடு உங்களைக் கடந்த ஒன்றின் கருணையும் உங்கள் வாழ்வில் இறங்கும்!

இந்தக் கலாச்சாரத்தில் கோயில் என்பது பிராத்தனைக்குரிய இடமாக எப்போதும் இருந்ததில்லை.

கோயிலுக்கு போவதே பிரார்த்தனை செய்யத்தான் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கலாச்சாரத்தில் கோயில் என்பது பிராத்தனைக்குரிய இடமாக எப்போதும் இருந்ததில்லை. கோவில் என்பது ஒரு சக்தி மையம். அங்கே செல்வதன் மூலம் உங்களுக்கு நீங்களே சக்தியூட்டிக் கொள்ளலாம். முன்பெல்லாம் கோவிலுக்குப் போனால் அங்கே அமர்ந்திருந்துவிட்டு வரவேண்டும் என்று சொல்வார்கள். அது ஒரு சம்பிரதாயம் என நினைத்து, இப்போதெல்லாம் மனிதர்கள் ஒரு விநாடி தரையில் உட்கார்ந்துவிட்டு எழுந்து விடுகிறார்கள். அங்கே சிறிது நேரம் அமரச் சொல்வதன் காரணமே அந்தக் கோயில் உருவாகியுள்ள விஞ்ஞானத்தின் அடிப்படையில் அங்கே அமர்கிற போது அங்கிருக்கும் சக்திமிக்க சூழ்நிலையை மனிதன் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதேபோல ஆன்மீகப் பாதையில் ஒரு மனிதன் நடையிடத் தொடங்கும்போது கோவிலுக்குப் போக அவசியமில்லை என்று இந்தக் கலாச்சாரத்தில் சொல்லப்படுகிறது. ஏனென்றால், அந்த மனிதருக்கு தனக்குத் தானே சக்தியூட்டிக் கொள்கிற தொழில் நுட்பம் தெரிந்திருக்கிறது.

கடவுளும் பிரார்த்தனையும் என்பது பற்றி பேசுகிறபோது எது கடவுள் என்று சொல்கிறோம் என்பது பற்றி யோசிக்க வேண்டும். உங்கள் தாயின் கருப்பையிலிருந்து இந்த பூமிக்கு வந்து கண்விழித்து பார்க்கிறீர்கள். உங்களைச் சுற்றிக் காணப்படுகிற படைப்பின் அம்சங்களைப் பார்க்கிறபோது இவற்றை யாரோ படைத்திருக்க வேண்டும் என்று உணர்கிறீர்கள். நிச்சயமாக நீங்கள் அவற்றை படைக்கவில்லை. எனவே, மேலேயிருக்கிற யாரோ படைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறீர்கள். சுருங்கச் சொன்னால், இந்தப் படைப்பைப் பார்த்தபோதுதான் படைத்தவன் என்று யாரோ இருக்க வேண்டும் என்று முடிவு செய்தீர்கள். எனவே கடவுளைப் பற்றிய எண்ணம் உங்களுக்கு வந்திருக்கிறது.

> ஆன்மீகத்தின் அடிப்படையே உங்களை உள்முகமாகத் திருப்பி படைப்பின் மூலத்தோடு உங்களை தொடர்பு கொள்ளச் செய்வதுதான்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

உங்களுக்குள்ளேயே கடவுள் இருந்தும், அவரை உணரமுடியாமல் போகிற சோகம் உங்களுக்கு நிகழ வேண்டாம்.

உங்கள் உடம்பு என்பதே படைப்பின் ஒரு துளிதான். இது எங்கே யாரால் படைக்கப்பட்டது? பிறந்தபோது சின்னஞ்சிறியதாய் இருந்த உடல் இப்போது பெரிதாக வளர்ந்திருக்கிறது. படைப்பின் மூலம் எதுவோ அது உங்களுக்குள்ளேயே இருந்து அந்த உருவாக்கத்தை நிகழ்த்தியிருக்கிறது. அப்படியானால் படைப்பினுடைய மூலம் உங்களுக்குள்ளேயே இருந்து செயல்படும் போது அதனை வேறெங்கோ உணர வாய்ப்பில்லை. நீங்கள் உங்களுக்குள்ளே அதனை உணராதபோது வேறெங்கும் உணர இயலாது.

அப்படியானால் படைப்பின் மூலம் என்றும், கடவுளென்றும், நீங்கள் அழைப்பதை உணர்வதற்கு என்ன வழி? உள்முகமாக திரும்புவதுதான் வழி. ஏனென்றால் இதுவரை நீங்கள் அனுபவித்த அனைத்துமே ஐம்புலன்கள் வழியாகத்தான் உணர முடிந்திருக்கிறது. ஐம்புலன்கள் எப்போதுமே வெளியுலகை நோக்கியவை. எனவே உள்முகமாக நீங்கள் திரும்பினால்தான் இந்த ஐம்புலன்கள் கடந்த ஒன்றை உங்களால் உணரமுடியும். ஆன்மீகத்தின் அடிப்படையே உங்களை உள்முகமாகத் திருப்பி படைப்பின் மூலத்தோடு உங்களை தொடர்பு கொள்ளச் செய்வதுதான். படைப்பின் மூலம் உங்களுக்குள்ளேயே இருந்தும் உங்களால் அதனை உணர முடியவில்லை என்றால் அதைவிட பெரிய சோகம் எதுவுமில்லை. கடவுள் எங்கேயோ சொர்க்கத்தில் இருக்க அங்கே போக உங்களுக்கு விருப்பமில்லை என்றால் எனக்குப் புரிகிறது. ஆனால் உங்களுக்குள்ளேயே கடவுளிருந்தும், அவரை உணர முடியாமல் போகிற சோகம் உங்களுக்கு நிகழ வேண்டாம்.

மனிதன் மட்டுமே தன் பிழைப்புக்கு கடவுளின் உதவியை எதிர்பார்க்கிறான்.

நீங்கள் இப்போது செய்கிற பிரார்த்தனைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று முதலில் பாருங்கள். கடவுளிடம் “அது கொடுப்பா! இது கொடுப்பா! காப்பாத்துப்பா!” என்று கேட்பதுதான் உங்கள் பிரார்த்தனையே. இது கடவுளை சார்ந்ததல்ல. உங்கள் பிழைப்பைச் சார்ந்தது. உயிரினங்களிலேயே உயர்ந்த இனம் என்று கருதப்படுவது மனித இனம். தாவரங்களும், புழு பூச்சிகளும் விலங்குகளும் தங்கள் பிழைப்புக்கான வழிகளைத் தாங்களே தேடிக் கொள்கின்றன. ஆனால் மனிதன் மட்டுமே தன் பிழைப்புக்கு கடவுளின் உதவியை எதிர்பார்க்கிறான். பிழைப்புக்கு வழிதேட வேண்டுமென்றால் கை கால்களும் மூளையின் சில செல்களுமே போதும். தங்கள் உடலையும் மனதையும் சரியாகப் பயன்படுத்த தெரிந்தவர்கள்தான் இந்த உலகில் நன்றாக வாழ்கிறார்கள். இந்தியாவில் நமக்குத் தெரிந்த கடவுள்களின் எண்ணிக்கை உலகில் வேறெவருக்கும் தெரியாது. நமக்குத் தெரிந்த அளவு பிரார்த்தனையின் வகைகளும் மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனாலும் இந்த தேசத்தில் 50 சதவீதம் மக்களுக்கு உண்ண உணவு கிடையாது. எனவே பிழைப்புக்காக பிரார்த்தனை செய்து எந்தப் பயனும் இல்லை!

பிழைப்பு ஒன்று மட்டுமே வாழ்வின் நோக்கம் இல்லை என்ற நிலைக்கு நீங்கள் எப்போது வருகிறீர்களோ அப்போது கடவுளைப் பற்றி பேசுங்கள்.

இந்த வாழ்க்கையை நன்றாக வாழ்ந்து அதிலெல்லாம் நிறைவு பெறாமல் படைப்பின் மூலத்தை உணர்ந்து பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் உங்களுக்கு எப்போது மேலிடுகிறதோ அப்போது நீங்கள் கடவுளைப் பற்றி பேசலாம். பிழைப்புக்கு உங்கள் உடலையும், மனதையும் சரிவரப் பயன்படுத்தினாலே போதும். அதுவரை கடவுள் உங்கள் வாழ்க்கைக்கு அவசியமில்லை.

நீங்கள் பிரார்த்தனை பூர்வமாக மாறும்போது வாழ்க்கையே மேலும் அழகாகிறது. பிரார்த்தனை தன்மையோடு வாழ்தல் என்றால் உங்களுக்குள் இருக்கும் ஒன்றின் அளவிடற்கரிய மதிப்பை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள் என்று பொருள். அந்நிலை வந்தால், அனைத்தின் மதிப்பையும் நீங்கள் உணரத் தொடங்குவீர்கள். ஒரு மலரில் இறைவன் இருக்கிறான், மலரின் அசைவில் அவன் நடனமிடுகிறான் என்று ஒவ்வொரு செடியையும் நீங்கள் அணுகத் தொடங்கினால் உலகின் மிகச் சிறந்த தோட்டக்காரராய் நீங்கள் உருவாக முடியும். உங்கள் தோட்டத்தில் மலர்கிற மலர்களின் தன்மையும் முற்றிலும் வேறானதாக இருக்கும்.

இன்று காலை நீங்கள் சாப்பிட்ட உணவு மாலையே மனிதனாக மாறிவிட்டது.

உங்கள் உடலும், மனமும் உங்கள் வாழ்வின் தரத்தை நிர்ணயிப்பதில்லை. எல்லைகள் கடந்த ஒன்று உங்கள் அனுபவத்திற்குள் வருகிறபோதுதான் உடலையும், மனதையும் கூட விருப்பு, வெறுப்பின்றி நீங்கள் பயன்படுத்த முடியும். ஏனெனில் மனிதனுக்கு துன்பமென்பது உடல் வழியாகவும், மனம் வழியாகவும் தான் வரும். இவற்றைக் கடந்த ஒன்று உங்கள் வாழ்க்கைக்குள் வரும்போது துன்பமடைதல் பற்றிய அச்சம் முழுதாக நீங்கி விடுகிறது. அதுவரையில் துன்பம் குறித்த அச்சம் காரணமாக நீங்கள் எடுத்து வைக்கிற அடி ஒவ்வொன்றுமே அறைகுறையாகத்தான் இருக்கும்.

படைப்பின் மூலம் உங்களுக்குள் இயங்குவதை எப்படி கண்டுகொள்வது? ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன். இன்று காலை நீங்கள் சாப்பிட்ட பொங்கல் மாலையே மனிதனாக மாறிவிட்டது. உங்களில் ஒரு பகுதியாக ஆகிவிட்டது. ஒரு பூச்சி, பரிணாம வளர்ச்சியில் மனிதனாக வேண்டுமென்றால் பல இலட்சம் ஆண்டுகள் பிடிக்கும். ஆகவே பொங்கலை மனிதனாக்குவது சாதாரண வேலையல்ல. ஆனால் உங்களுக்குள் அது ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே படைப்பின் மூலம் அல்லது நீங்கள் சொல்கிற கடவுள் உங்களுக்குள்ளேயே ஒவ்வொரு நாளும் இயங்குகிற போதும் நீங்கள் அதைப் பார்க்கவில்லை. ஆனால் நான் பார்த்திருக்கிறேன். எனக்குள்ளும் என்னைச் சுற்றியும் ஒவ்வொரு நாளும் படைப்பின் மூலம் செயல்படுவதை என்னால் உணர முடிகிறது!

பல இலட்சம் சிந்தனைகளை உருவாக்கினாலும் அவை ஏற்கெனவே நீங்கள் திரட்டிய தகவல்களுக்குள்தான் இருக்கும்.

இந்தச் செயல்முறை வளர்ச்சியை அனுபவ ரீதியாக உங்களால் உணர முடிந்தால், ஆன்மீகத்தை நீங்கள் உணரத் தொடங்கி விட்டதாக அர்த்தம். இப்போதைக்கு ஐம்புலன்கள் வழியாக மட்டும் நீங்கள் எல்லாவற்றையும் உணர்கிறீர்கள். ஐம்புலன்கள் வழியாக திரட்டப்பட்டிருக்கும் தகவல்களைக் கொண்டு எல்லாவற்றையும் யோசிக்கிறீர்கள். சில தகவல்களை வைத்துக் கொண்டு பல இலட்சம் சிந்தனைகளை உருவாக்கினாலும் அவை ஏற்கெனவே நீங்கள் திரட்டிய தகவல்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# சமூகப் போராளியின் வீரமரணம்

## *Jack Layton - July18,1950 - August 22, 2011*


**‘சாவதா தேசத்துக்காக? இல்லை!
அதற்காய் வாழ்வதே வீர வழி’**
**- சில்லையூர் செல்வராஜன்**

மே மாதம் 2 ம் நாள் அதிகாலை ஒரு வயது முதிர்ந்தவர் 70 வயதிருக்கும் தேர்தல் சாவடியை நோக்கி நடந்து செல்கின்றார். ஒரு பத்திரிகை நிருபர் அவரையணுகி யாருக்கு வாக்களிக்கவுள்ளீர்கள் என சாதாரணமாகக் கேட்கின்றார். அதற்கு அவரளித்த பதில் யக் லேற்றன் கட்சிக்கு என. நிருபரின் அடுத்த கேள்வி கட்சி எது? அவர்களுக்கு ஏன் நீங்கள் வாக்களிக்க வேண்டும். அதற்கும் அவர் ‘யக் லேற்றன் கட்சி, அவருக்கு எங்களுக்கு என்ன செய்ய வேண்டும் எனத் தெரியும்’ என உறுதியாக பதிலளித்துள்ளார். தேர்தல் முடிவுகள் அதனை உறுதி செய்தன. 101 தொகுதிகளில் யக் லேற்றன் கட்சி வெற்றி பெற்றது. முதன் முதலாக தமிழை தாய் மொழியாகக் கொண்ட பிரதிநிதி ஒருவர் தேர்வு செய்யப்பட்டார். ராதிகா வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். வட அமெரிக்காவில் இடது சாரி கருத்துக்களை மையமாகக் கொண்ட கட்சி ஆட்சி அமைப்பது என்பது இலகுவான காரியமல்ல. மாநிலங்களில் தேசிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. தேசியளவில் இது சாத்தியமானதல்ல. அந்தச் சாதனையை மாற்றி தேசிய ஜனநாயகக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் திறன் உள்ளது என்பதை மக்களை

**- ரதன் -**

சொல்ல வைத்த பெருமை அண்மையில் மறைந்த தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவரும், கனடிய எதிர் கட்சித் தலைவருமான யக் லேற்றனையே சாரும். இவ் விடத்தில் மற்றொரு விடயத்தையும் கூற வேண்டும். இலங்கையில் தமிழ் மக்கள் இடது சாரிக் கட்சிகளுக்கு வாக்களித்தமை மிகமிகக் குறைவே. பொன். கந்தையா போன்ற ஒரு சிலரே தமிழ் பகுதிகளில் இருந்து நாடாளுமன்றம் சென்றுள்ளனர். அப்படிப்பட்ட தமிழ் மக்களையே மாற்றி தேசிய ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்கச் செய்தவர் யக் லேற்றன் என்றால் மிகையாகாது.

எனது வாழ்க்கையில் இரண்டு மணித்தியாலங்கள் காத்திருந்து ஒரு தலைவருக்கு அஞ்சலி செலுத்தியது யக் லேற்றனுக்கே. நான் சிறுவனாக இருந்த பொழுது தந்தை செல்வாவின் உடல் வீரசிங்கம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்று வந்த பலர் கூறிய கதைகளை கேட்டதுண்டு. இங்கு நேதன் பிலிப் சதுரத்தின் வெளியில் பலர் சுவர்களில் எழுதிய அஞ்சலிகள் லேற்றனின் பல சாதனை-களை வெளிப்படுத்துகின்றன. மக்கள் இவரை எவ்வளவு தூரம் நேசித்துள்ளார்கள் என்பதற்கு இவை சாட்சியங்கள். தமிழிலும் ஒருவர் எழுதியிருந்தார். இவ் வாசகங்களை பார்ப்பதற்கே பல இடங்களில் இருந்து மக்கள் வருகின்றார்கள்.




2011 தேர்தலுக்கு முன்பாக ஒரு கணிப்பு ஒன்றை பத்திரிகையொன்று நடத்தியிருந்தது. நீங்கள் விரும்பும் தலைவர் யார்? என்பதே அது. பெரும்பாலான மக்கள் யக் லேற்றனையே விரும்பினார்கள். இன்று மக்கள் திரளாக செல்வதில் இருந்து இதனை காணலாம். மொன்றியல் பெரும்பாகத்தில் அமைந்துள்ள கட்சன் என்ற இடத்தில் 1950 யூலை 18ம் நாள் பிறந்தார். இவரது தாயார் Doris Elizabeth Steeves. தந்தை றெபொட் லேற்றன் கொன்சவேற்றிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர். இவர் Brian Mulroney ன் அமைச்சரவையில் சுரங்க அமைச்சராக 1984-1986 வரை கடமையாற்றியுள்ளார். றொபொட்டின் தந்தையார் Gilbert Layton கியுபெக் மாநிலவையில் அமைச்சராக இருந்துள்ளார். Gilbertd பெற்றோர்கள் பங்குதாரர்களாக இருந்த நிறுவனம் Layton Audio என்ற பெயரில் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. Gilbert இரண்டாம் உலகப் போரில் கியுபெக்கின் மிகக் குறைந்த பங்களிப்பை எதிர்த்து தனது பதவியை இராஜினாமாச் செய்தார். யக் லேற்றன் தனது அரசியல் விஞ்ஞான பாடநெறிக்கான பட்டப்படிப்பை மொன்றியலில் உள்ள McGill பல்கலைக் கழகத்தில் படித்தார். அதே அரசியல் விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டத்தை ரொரன்ரோவில் உள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் பெற்றார். பின்னர் ரொரன்ரோவில் உள்ள Ryerson பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றினார்.

1969ம் ஆண்டு தன்னுடன் உயர் கல்வி கற்ற Sally Holfrd ஐ மணந்தார். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. Mike, Sarah ஆகியவர்களே இவர்களது பிள்ளைகள். மைக் தற்சமயம் ரொரன்ரோ மாநகர கவுன்சிலராக வுள்ளார். Sally உடனான யக்கின் திருமணம் 14 வருடங்களின் பின்னர் முடிவுக்கு வந்தது. யக்கும் ஒலிவியாவும் முதலில் ஒரு ஏலத்தில் 1985ம் ஆண்டு சந்தித்தனர். ஒலிவி யாவின் தாய் யக்கை முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் இருவரும் யூலை 9, 1988ல் திருமணம் செய்தனர். அப்பொழுது ஒலிவியா ரொரன்ரோ நகர கல்விச் சபை Trustee ஆக இருந்தார். யக் கவுன்சிலராக இருந்த காலகட்டத்தில் பல போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். Eaton Centre வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்களுக்காக போராடினார். தற்சமயம் Roger Centre என அழைக்கப்படும் Skydome கட்டப்படுவதை எதிர்த்தார். அதே போல் ரொரன்ரோவில் ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுவதையும் எதிர்த்தார். யக் 1991ல் ரொரன்ரோ நகர மேயர் தேர்தலில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து June Rowlands போட்டியிட்டார். தேர்தல் முடிவுகள் June Rowlands 113,993 (58.53%) Jack Layton 64,044 (32.88%). இவரது தேர்தல் தோல்விக்கு பிரதான காரணமாக இரு காரணங்கள் கூறப்பட்டன. முதலாவது அப்போதைய ஒன்ராரியோவின் தேசிய ஜனநாயக அரசிற்கு எதிராக கிளம்பிய விமர்சனங்களும் ஆதரவின்மையும், இரண்டாவது ரொரன்ரோவின் ஒலிம்பிக் Bid தோல்விக்கான காரணங்களில் யக்கின் பெயரும் பிரதானமாக இருந்தது. கிறீஸ் நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கு முன்வைக்கப்பட்ட காரணங்களும், ஒலிம்பிக் போட்டி நடத்தியமையும் காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளமை இங்கு நினைவு கூறவேண்டியுள்ளது. 1993ல் Rosedale தொகுதியில் போட்டியிட்டு தோல்விகண்டார். பின்னர் 1997 தேர்தலிலும் தோல்விகண்டார். 2003ல் தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு முதல் சுற்று வாக்களிப்பிலேயே 53.3 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இத் தேர்தலில் தேசிய அளவில் பெரும் மதிப்புள்ளவரும், முன்னாள் தேசிய ஜனநாயகக் கட்சி தலைவருமான Ed Broadbent தனது ஆதரவை இவருக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்ற உறுப்பினராகமால் தேசியளவில் ஒரு கட்சியை வழிநடத்துவது மிகக் கடினமான காரியம். ஆனால் யக் தனது எதிர்ப்புத் தன்மையை வெவ்வேறு வடிவங்களில் வழங்கி பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். 2004ல் நடைபெற்ற தேர்தலில் தன்னை முன்னர் தோற்கடித்த வேட்பாளரையே தோற்கடித்து நாடாளுமன்ற உறுப்பினரானார். இத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கட்சி வெறும் 19 இடங்களிலேயே வெற்றி பெற்றது. 2008ல் சற்று அதிகமாக 37 இடங்களில் வெற்றி பெற்றது. 2011 மே மாதம் 2ம் நாள் தேர்தலில் 103 இடங்களை கைப்பற்றி பிரதான எதிர்க்கட்சியாகியது. இத் தேர்தலில் முதன் முதலாக இரண்டு கட்சிகளின் தலைவர்கள் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்தவர்கள். லிபரல் கட்சியின் தலைவரும், தேசிய ஜனநாயகக்கட்சியின் தலைவருமான யக் லேற்றனுமே அவர்களாவர்கள்.

லேற்றன் தனது காலத்தில் பல சாதனைகளை புரிந்துள்ளார். பெண் வன்முறைகளுக்கு எதிராக வெள்ளை துண்டு போராட்டத்தை ஆரம்பித்துவைத்தார். இன்று இது பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. 1989ல் ரொரன்ரோ மாநகரம் ஒரு பாலியலாளர் ஊர்வலத்தை நடத்துவதற்கு பிரதான காரணியாக செயல்பட்டார். ரொரன்ரோ சுகாதார சபையின் தலைவராக இருந்த பொழுது முதன் முதலாக எயிட்ஸ்க்கான நிதி உதவி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ரொரன்ரோ மாநகரத்தில் துவிச்சக்கரவண்டி(சைக்கிள்) பாதைகள் போடப்படுவதற்காக போராடினார். இன்று அது சாத்தியப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என போராடினார். ரொரன்ரோவின் முதல் காற்றாலை அமைக்க காரணமாயிருந்தார். வீடுகளற்றோருக்காக போராடினார். அவர்களின் மறுவாழ்வுத் திட்டத்துக்காக மூன்று அரசுகளுடனும் (மாநகர, மாநில, தேசிய) போராடினார். இவர்களைப் பற்றிய The Making and Unmaking of a Crisis என்ற நூலை எழுதினார். 2005ல் போல் மாற்றினின் லிபரல் அரசுக்கு ஆதரவைக் கொடுத்த பொழுது, அதற்கு பரிகாரமாக பல சமூக நல் வாழ்வுத்திட்டங்களை அரசைக் கொண்டு செய்வித்தார். போக்குவரத்து, Affordable Housing, வேலை பெறுவதற்கான பயிற்சிகள், வெளிநாட்டு உதவிகள் போன்றவற்றை அரசைக் கொண்டு செய்வித்தார். ஈராக்கின் போரில் பணிபுரிந்த அமெரிக்க போர்வீரர்கள் கனடாவில் தஞ்சம் கோருவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என குரல் கொடுத்தார். Deep lakewater cooling of downtown office buildings, celebrated by environmentalist Robert Kennedy Jr., The Healthy Cities model, adopted by the WHO and emulated in cities around the world, The White Ribbon Campaign, which became a global movement of men speaking out against violence against women, The first urban wind turbine in Canada, cooperatively owned – and generating enough clean electricity to light 250 homes, The largest building renovation project in Canadian history, the Better Buildings Partnership, which paid for energy retrofits through future energy savings போன்றவை இவரின் சாதனைகளில் சில. கடந்த பல சகாப்தங்களாக கியுபெக் பிரிவினைவாத கட்சிகளின் ஆதிக்கத்தில் இருந்தது.

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



**சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.**

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# விளையாட்டுத் தகவல்கள் 313

## இங்கிலாந்திடம் படுதோல்வி அடைந்த இந்திய அணி




இந்திய அணியுடனான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது. லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்பிற்கு 591 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 300 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் பொலோஒன் நிலைக்குத் தள்ளப்பட்ட இந்திய அணி போட்டியின் 4 ஆவது நாளான நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. அன்றைய ஆட்டமுடிவின் போது 3 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி இன்று 281 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 100 ஆவது சர்வதேச சதத்தை பெற காத்திருந்த சச்சின் டெண்டுல்கர் 91 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அமித் மிஸ்ரா 84 ஓட்டங்களைப் பெற்றார். இந்திய பந்துவீச்சாளர்களில் கிறேம் ஸ்வான் 106 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து அணி 4-0 விகிதத்தில் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய அணி 1990-91 இல் அவுஸ்திரேலியாவிடம் டெஸ்ட் தொடரொன்றில் 3-0 விகிதத்தில் தோல்வியுற்ற பின்னர் அவ்வணி டெஸ்ட் தொடரொன்றின் அனைத்து போட்டிகளிலும் தோல்வியுற்றமை இதுவே முதல் தடவையாகும். இத்தொடரின் 4 ஆவது போட்டியின் சிறப்பாட்டக்காரராக இயன்பெல் தெரிவானார். இங்கிலாந்தின் கிறிஸ் புரோட்டும் இந்தியாவின் ராகுல் திராவிட்டும் தெரிவாகினர். இச்சுற்றுப்போட்டி ஆரம்பமாகுவதற்கு முன் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதலிடத்திலும் இங்கிலாந்து 3 ஆவது இடத்திலும் இருந்தன. ஆனால் இத்தொடரில் இங்கிலாந்து அணி பெற்ற வெற்றி மூலம் அவ்வணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ள நிலையில் இந்தியா 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஐ.சி.சியின் டெஸ்ட் 'தண்டாயுதமும்' இங்கிலாந்து அணிக்கு வழங்கப்பட்டது.

இந்தியா டெஸ்ட்டிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

இங்கிலாந்துக்கு எதிரான தொடரை மிகப்பெரிய தொடர் என்று வர்ணித்தனர் ஆனால் அது கடைசியில் புஸ்வாணமானது. உலகின் நம்பர் 1 அணி 0 - 4 என்று அடிவாங்கியுள்ளது. இனியாவது இந்திய கிரிக்கெட் வாரியமும் வீரர்களும் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று ஷேன் வோன் தெரிவித்துள்ளார். இந்திய துடுப்பாட்டக்காரர்கள் ஷாட் பிட்ச் பந்துகளுக்குத் திணறுகின்றனர் என்றும் ஷேன் வோன் தெரிவித்துள்ளார். 'இந்தத் தொடரில் ஒருதலைச் சார்பாக இந்தியா அணியைத் தேர்வு செய்தது. இந்த இழிவுதரும் வெள்ளைச் சலவைத் தோல்விக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் தனது முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்வது நல்லது. சர்வதேச கிரிக்கெட்டிற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் பொறுப்புடையது, அதாவது அனைவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் பங்கேற்பதை பி.சி.சி.ஐ. உறுதி செய்ய வேண்டும். இந்திய வீரர்கள் நிறைய முதல்தர கிரிக்கெட் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டை விளையாட வேண்டும். இந்திய வீரர்கள் ஷாட் பிட்ச் பந்துகளில் அதிகம் திணறுகிறார்கள். பந்து வீச்சாளர்கள் விக்கெட்டுகளை வீழ்த்த திணறுகிறார்கள். அவர்களது நடுவரிசை வீரர்களின் வயதைக் கவனிக்க வேண்டும். ஆனால் ராகுல் திராவிட் அபாரம். இந்திய வீரர்கள் ஐ.பி.எல். கிரிக்கெட்டிற்கு அதீக முக்கியத்துவம் அளிக்கின்றனர். மேற்கிந்திய தீவுகள் தொடரை புறக்கணித்தனர், சிலர் இங்கிலாந்தையும் புறக்கணித்தனர் ஆனால் ஐ.பி.எல். விளையாட்டில் மகிழ்ச்சியடைகின்றனர். ஐ.பி.எல்.மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டிற்கு ஒரு பங்கு உள்ளது. ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்தான் அனைத்து வீரர்களின் முன்னுரிமையாக இருப்பதை பி.சி.சி.ஐ. உறுதி செய்யவேண்டும். இந்திய அணி சிறப்பாக விளையாடுவது உலக டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு அதிக வலு சேர்க்கும். ஐ.பி.எல். ஒரு நல்ல கிரிக்கெட் தொடர்தான், ஏப்ரல்-மே மாதங்களில் அதற்கென ஒரு 4 வாரங்கள் ஐ.சி.சி. ஒதுக்கிவிட்டால், உலகின் அனைத்து வீரர்களும் அதில் பங்கேற்க வாய்ப்பிருக்கும். இந்தியா டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு அதிக முன்னுரிமை அளித்தால் மற்ற நாட்டு வீரர்களும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பங்கேற்பார்க அந்த நாட்டு வாரியங்கள் அனுமதியளிக்கும். அதாவது கொடுக்கல், வாங்கலில் சமநிலை இருக்கவேண்டும். ஒருநாள் கிரிக்கெட் மற்றும் B20 கிரிக்கெட்டில் இந்திய அணி சிறப்பாக உள்ளது காரணம் அந்த போட்டிகளில்தான் அதிகம் விளையாடி வருகின்றனர். இந்திய அணி சில வேகப்பந்து வீச்சாளர்களை அணியில் சேர்த்து நல்ல சுழற்பந்து வீச்சையும் கண்டுபிடித்துக் கொண்டால் அந்த அணி மீண்டும் நம்பர் 1 இடத்தைப் பிடிக்க முடியும். இங்கிலாந்தில் இந்தியா மோசமாக விளையாடியது. ஏனெனில் இங்கிலாந்து இந்திய அணியை செட்டில் ஆக விடவில்லை. இங்கிலாந்து அணியினர் ஆதிக்க உணர்வுடனும், சவாலாகவும் விளையாடினர்" என ஷேன் வோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் படுதோல்விக்கு பி.சி.சி.ஐ மற்றும் ஐ.பி.எல் போட்டிகளே காரணம்:

இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு வாரியமும், ஐ.பி.எல் போட்டியுமே இந்தியாவின் படுதோல்விக்குக் காரணம் என்று இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுனா ரணதுங்கா குற்றம்சாட்டியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: இந்திய கிரிக்கட் வாரியம் ஐ.பி.எல் போட்டிகளை நடத்தியதன் மூலம் இந்திய வீரர்களை இங்கிலாந்து தொடருக்கு தயாராகவிடாமல் தடுத்துவிட்டது. பி.சி.சி.ஐ எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஐ.பி.எல் போட்டிகளை நடத்தி வருகிறது. இதன் மூலம் பி.சி.சி.ஐ.யே இந்திய கிரிக்கட்டை அழித்து வருகிறது. உலகக் கோப்பையை வென்ற இந்திய அணி இப்போது மோசமான தோல்வி கண்டுள்ளதற்கு போதுமான பயிற்சி இல்லாததே முக்கியக் காரணம். உலகக் கோப்பைக்கு பிறகு இந்தியாவின் முன்னணி வீரர்கள் நேரடியாக ஐ.பி.எல் போட்டிக்கு சென்றனர். அதன்பிறகு சிலர் மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் இருந்து விலகினர்கள். அவர்களில் சிலர் காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தும் கூட ஐ.பி.எல் போட்டியை இழந்துவிடக்கூடாது என்பதற்காக சிகிச்சையையே தாமதப்படுத்தினார்கள். அதன்பிறகு பாதி உடற்தகுதியோடே அவர்கள் இங்கிலாந்துக்கு பயணித்தனர் என்றார். ராகுல் திராவிட்டை பாராட்டிய அவர் போட்டிக்காக நல்ல முறையில் தாயராகியிருந்ததால் மிகச் சிறப்பாக விளையாடினார். உதாரணத்துக்கு இலங்கையின் பிரசன்ன ஜெயவர்த்தனா ஐ.பி.எல் போட்டியில் விளையாடவில்லை. அதனால் அவர் சிறப்பாக தயாராகியிருந்ததால் இங்கிலாந்து தொடரில் தொடர்நாயகன் விருதை வென்றார். ஆனால் ஐ.பி.எல் போட்டியில் விளையாடிய குமார் சங்ககரா இங்கிலாந்தின் சூழலுக்கு மாறுவதற்கு ஒரு மாத காலம் ஆனது. மகிளா ஜெயவர்த்தனா இங்கிலாந்து தொடரில் ஒரு சதம்கூட அடிக்கவில்லை. இங்கிலாந்து தொடரில் வெற்றிபெறுவதற்கு போதிய பயிற்சி முக்கியமானது. ஆனால் இந்தியா அதை செய்யவில்லை என்பது தான் ஆச்சரியமானது என்றார்.

100மீ தடகளம்: உசைன் போல்ட் அரையிறுதியில்

தென்கொரியாவின் டேகூவில் நடைபெறும் உலக சாம்பியன்ஷிப் தடகளப்போட்டிகளின் முக்கியமான 100மீ ஓட்டத்தில் ஜமைக்காவின் தங்க மனிதன் உசைந் போல்ட் 10.10 வினாடிகளில் இலக்கை எட்டி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். 10 வினாடிகளுக்குள் தொடர்ந்து ஓடி வரும் மற்றொரு ஜமைக்கா வீரர் அசஃபா போவெல் கடைசி நேரத்தில் காயம் காரணமாக வியாழனன்று விலகினர். மற்றொரு வீரர் டைசன் கேயும் இதில் பங்கேற்கவில்லை. இவர் அமெரிக்கர். 2004 ஒலிம்பிக் சாம்பியனான ஜஸ்டின் கேட்லின் 10.31 வினாடிகளுடன் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். இவர் ஊக்க மருந்து விவகாரத்தில் 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டன் வீரர் டிவைன் சாம்பர்ஸ் 10.28 வினாடிகளில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். இவர் ஊக்க மருந்திற்காக 2 ஆண்டுகள் தடை செய்யப்பட்டு மீண்டும் வந்துள்ளவர். மற்ற ஜமைக்க வீரர்களான யோஹன் பிளேக், மைக்கேல் பிரேட்டர், நெஸ்டா கார்ட்டர், மற்றும் அமெரிக்க வீரர்களான வால்டர் டிக்ஸ், டிரெல் கிமன்ஸ், பிரான்சின் கிறிஸ்டோபி லெமாய்ட்டர் ஆகியோரும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றனர். பிளேக் முதன் முறையாக உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

உலக சாம்பியன்ஷிப் போட்டி முதல் தங்கம் வென்றார் எட்னா கிப்லாகட்

தென் கொரியாவில் துவங்கிய தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் மராத்தான் ஓட்டத்தில் கென்ய வீராங்கனை எட்னா கிப்லாகட் தங்கம் வென்று இந்தத் தொடரில் முதல் தங்கத்தைப் பதிவு செய்தார். 2 மணி நேரம் 28 நிமிடம், 43 வினாடிகளில் எட்னா கிப்லாகட் இலக்கை எட்டி தங்கம் வென்றார். கடைசி குடிநீர்ச் சாவடிக்கு இரண்டு சாவடிகளுக்கு முன்னால் கிப்லாகட் கீழே விழுந்தார். அவர் அப்போதுதான் மற்றொரு வீராங்கனையான ஷெரோன் செரோப்பை முந்தினார். ஆனால் மீண்டு எழுந்த கிப்லாகட் முதலிடம் பெற்றார். செரோப் 17 வினாடிகள் பின் தங்கி வெள்ளி வென்றார். இவரும் கென்யா வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. லண்டன் மராத்தானில் பங்கு பெற எட்னா கிப்லாகட் இப்போதுதான் முதல் முறையாக உலக சாம்பியன்ஷிப் தடகளத்தில் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய 3 பதக்கங்களையும் கென்ய வீராங்கனைகள் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஓபன் தொடக்கம்


கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயார்க் நகரில்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# எலி வளை தனிவளை; முதல் இல்லம்

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 348

நம் சான்றோர் முதுமொழி, எலி வளையானாலும் தனிவளை வேண்டும். சொந்தமாகவும் தனியாகவும் வைத்துக் கொள்வதே சிறந்ததாகலாம் என்ற பொருள்பட தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதே முதியவர்கள் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. ஒரு மரம் தோப்பாகாது என வெவ்வேறு முதுமொழிகள் ஒன்றிற்கு ஒன்று, முரண்பாடாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கூறப்பட்டுள்ளது. நமக்கென ஒரு வீடு வாங்குவது நீண்டகாலத்தில் சிறந்ததாகவே இருக்கும். எதற்காக சொந்தமாக வீடு வாங்கவேண்டும்.

- இருப்பதற்கு இடம் நிச்சயம் தேவை. அது ஏன் சொந்தவீடாக இருக்க கூடாது.
- வீட்டு உரிமையாளரின் தொல்லை கிடையாது.
- வருடா வருடம் ஏற்படும் அதிகரிப்பு இருக்காது.
- RRSP இளைப்பாறுவதற்காக சேமித்த பணம் இருந்தால் அதனை பாவிக்க கூடிய சந்தர்ப்பம் உண்டு.
- குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை இடம் மாறவேண்டிய தேவை இருக்காது.
- சொந்தவீடு வாங்கும் போது, எமக்காக, சிறிது சிறிதாக பணத்தை சேமிக்க கூடிய சந்தர்ப்பம் உண்டு.
- இதுவரையில், சரித்திரத்தை திரும்பிப் பார்க்கும் போது ஆண்டுக்கணக்கில் வீட்டின் விலை அதிகரித்தே செல்கின்றது. (ஒருவகையில் நீண்ட கால முதலீடாகக் கூடக் கொள்ளலாம்)
- முதல்தடவை வீடு வாங்குபவர்களிற்கு அரச சலுகைகளும் உள்ளன.

குறிப்பு:- வீடு வாங்குவது என தீர்மானித்தால் தகுந்த முகவரைத் தேர்ந்து, சிறந்த இடத்தில் (Location-Location-Location) வசதிக்கேற்ற அடமானக்கடன் பெறுவதை...கவனத்தில் கொள்ளவும். இதில் என்னுடைய அனுபவத்தை மட்டுமே கூறியுள்ளேன். முடிவு உங்களுடையது. தனிப்பட்டவர்கள்/குடும்பத்தின் தேவைகளிற்கேற்ற தனிப்பட்ட முடிவுகளே சிறந்தது. எது எப்படியிருப்பினும், நீண்டகால முதலீடாக அசையாச் சொத்தாகக் கொள்ளப்படும். ஆதனம் சிறந்ததே.

**சில கவனங்களும் தேவை.**

- 20% ஆரம்பமுதலீடு செய்து ஆதனம் வாங்கினால், காப்புறுதி செலுத்த தேவையில்லை, என்பதற்காக 20% முதலீடுதான் தேவை என்று இல்லை. 5% முதலீட்டுடனும் வாங்கலாம் என்பதனை தெரிந்திருக்கவும்.
- அடமானக்கடனை (Mortgage) திருப்பி கொடுக்கும் காலத்தை (Amortization) திருப்பி செலுத்தும் வசதிக்கேற்ப தெரிவுசெய்யவும்.
- வாங்கிய வீட்டிற்குரிய காப்புறுதி (Home Insurance) தவறாமல் வைத்திருக்க வேண்டியது மிகமிக முக்கியம்.

(குறிப்பு:- (1) Mortgage Insurance என்றும் உள்ளது. இது Home Insurance ஐ விட வேறுபட்டது என்பதனை கவனிக்கவும். Mortgage Insurance பற்றிய தகவல்களை அடமானக்கடன் பெற்றுதரும் முகவர் அல்லது உங்களது அனுபவமான வீட்டு முகவர் அல்லது காப்புறுதி முகவருடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கவும்)

2. அனுபவமிக்க சட்ட வல்லுனரின் உதவியுடன் வாங்கிய ஆதனத்தை உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். 100% சகலதும் சிறந்ததான வீடு எப்பவும் கிடையாது, என்பதனையும் கருத்தில் கொள்ளவும். இன்றைய காலகட்டத்தில் வீடு வாங்கும் போது சில சில திருத்த வேலைகள் இருக்ககூடிய சந்தர்ப்பம் உள்ளன. காலப்போக்கில் திருத்தி கொள்ள முடியும். வீடு அமைந்துள்ள இடமே மிகவும் முக்கியமானதாகும். (Location)



**மனை புகுமுன் கவனத்திற்கொள்ள வேண்டியவிடயங்கள்**

1. நண்பர்கள், வேண்டியவர்கள், சொந்தக்காரர்கள், வியாபார

**தொடர்ச்சி 08ஆம் பக்கம்**


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

**CONDO. FOR SALE**



SHEPPARD & MCCOWAN
2 Bedroom + 1 parking condo for sale.
Asking Price $154,900.

**HOUSE FOR SALE**


JUST NORTH OF NEWMARKET
5 Acre land + home.
Raised bungalow. Walk-out bsmt , renovated 3 washrooms

**CONDO. FOR SALE**



WARDEN & FINCH
3 Bedroom condo fer sale. Asking price $139,900

**FOR LEASE**



FINCH & MIDDLEFIELD
1000 sq.ft. 2nd floor,
3rd floor, main floor
Next to Embassy Restaurant.
$15 Gross Rent.

**CONDO FOR SALE**

MCCOWAN & ELLESMERE
Brand new 1 bedroom + den. (Den can be bedroom). condo for sale.Walking distance to Scarborough Town Centre. Spectacular view. 2 Minutes to hwy 401.
Asking $249,900

**STORE FOR LEASE**

KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease.
1000 sq.ft
Suitable For Various Kind Of Uses, Close To Kennedy Subway Station.

**COMMERCIAL CONDO. SALE OR LEASE**

MARKHAM & STEELES
Builders blow-out sale
Red colour building.
Price starts from $250,000

**FOR LEASE**



FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall.
Renovated unit.

# அனைவரையும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வருகின்ற அரசாங்கம், அதற்காக அவர்களுக்கு எதிராகக் கடும் போக்கில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு நிதர்சனமாக யாழ்ப்பாணம் நாவாந்துறையில் வெளிப்பட்டுள்ளது, நாவாந்துறை கத்தோலிக்கத் தேவாலயப் பகுதியிலும் ஊர்மனைக்குள்ளேயும் நடமாடிய மர்ம மனிதர்களைத் துரத்திச் சென்ற ஊர் மக்கள், அவர்கள் நாவாந்துறையில் உள்ள இராணுவ முகாமினுள் ஓடிச் சென்று மறைந்ததைக் கண்ணால் கண்டுள்ளனர்.



இவ்வாறு சென்ற மர்ம மனிதனைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என நாவாந்துறை இராணுவ முகாமின் நுழைவாயில் சோதனை நிலையத்தில் இருந்த இராணுவத்தினரிடம் கோசமிட்டு கோரிக்கை விடுத்தனர். எனினும் இராணுவத்தினர் அவர்களை அங்கு நிற்க வேண்டாம் கலைந்து போகவேண்டும் என அதிகாரத் தோரணையில் கூறியிருக்கின்றனர். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் ஆக்ரோசத்துடன் சத்தமிட்டு கோஷங்கள் எழுப்பினர். இவர்களைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் மேல் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து, ஆத்திரமுற்ற மக்கள் கற்களாலும் போத்தல்களினாலும், கையில் கிடைத்தவற்றினாலும் இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

மர்ம மனிதர்களுக்கு கொடுத்ததைக் கண்ணால் கண்ட மக்கள் கூட்டம் கோபத்துடன் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தை நோக்கி பொலிஸார் வாகனங்களில் கூக்குரலிட்டு சத்தமிட்டபடி வந்துள்ளார்கள். இவர்களைக் கண்டதும் ஆத்திரம் மேலிட மக்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் மோதல்கள் மூண்டது. பொலிஸ் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. கூட்டம் அதிகமாக-யிதை யடுத்து, காயமடைந்தவர்களையும் அழைத்துக் கொண்டு பொலிசார் திரும்பிச் சென்றார்கள்.

இதனையடுத்து வீடுகளுக்குத் திரும்பிய மக்கள் நித்திரை கொள்ளச் சென்ற போது நள்ளிரவ-ிற்குப் பின்னர் ஊருக்குள் வந்த இராணுவ கோஷ்டியொன்று வீட்டுக்க கதவுகளை அடித்து நொறுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்து வீடுகளில் காணப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கி தரதரவென்று இராணுவ முகாமுக்கு இழுத்துச் சென்றார்கள்.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட ஆண்கள் மறுநாள் பொலிசாரினால் நீதிமன்றத்திற்கு வாகனங்களில் ஏற்றி வரப்பட்டிருந்தார்கள். இவ்வாறு கொண்டு வரப்பட்டிருந்தவர்கள் அனைவரும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டிருந்தார்கள். மண்டைகள் உடைக்கப்பட்டு கைகால்கள் முறிக்கப்பட்டிருந்தன. இளைஞர்கள், நடுத்தரவயதினர் என்ற வித்தியாசமின்றி படுமோசமாக அவர்களை இராணுவத்தினரும் பொலிசாரும் தாக்கியிருந்தார்கள்.

இவர்களைக் கண்டு பதட்டமடைந்த உறவி-னர்கள் அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்று அச்சமடைந்திருந்தார்கள். நாவாந்துறையில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து அன்றிரவும் அடுத்தநாட்காலையும் அங்கு சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறப்பினர் சரவணபவன் மற்றும் முக்கியஸ்தர்கள், நடந்து முடிந்த விடயங்களையும் அதன் பின்னர் இராணுவத்தினர் வந்து வீடுகளை உடைத்து ஆண்களைப் பிடித்துச் சென்றதையும் எடுத்துக் கூறி, காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனையடுத்து காயமடைந்தவர்களைப் பார்வையிட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், அவர்களை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்திருந்த பொலிசார், அவர்கள் அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள், அமைதிக்குப் பங்கம் விளைவித்து சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க விடாமல் பொலிசார் மீது தாக்குதல் நடத்தினார்கள் என குற்றஞ்சாட்டி, அவர்களை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து. ஆகஸ்ட் 26 ஆம் திகதிவரையில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டதுடன், காயமடைந்தவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

காயமடைந்தவர்களில் 18 பேர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிக்கொண்டிருந்த மாணவர்கள் என்ற காரணத்தினால் அவர்களை வீடு செல்வதற்கு பொலிசார் அனுமதித்திருந்தனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவில்லை. கைது செய்யப்பட்டிருந்தவர்களில் ஒருவர் கண் தெரியாதவர். மற்றுமொருவர் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு உடலியக்கம் பாதிக்கப்பட்டவர். இவர்கள் உட்பட 25 பேர் கடுமையான எலும்பு முறிவுடன் கூடிய காயங்களுக்கு உள்ளாகி இன்னும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி இரண்டாவது தடவையாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது என்றும், அவ்வாறு பிணை வழங்குவதற்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்றும் பொலிசார் முரட்டுத் தனமாக வாதாடினார்கள். ஆயினும் 34 சட்டத்தரணிகள் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் எழுப்பியதுடன், கைது செய்யப்பட்டுள்ளவர் களை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என நீதிமன்றத்திடம் கோரினர். இந்த சட்டத்தரணிகள் சார்பில் வாதங்களை முன்வைத்த சட்டத்தரணி சிறிகாந்தா, கைது செய்யப்பட்டவர்கள் மிருகங்களைப் போல தாக்கப்பட்டுள்ளார்கள். நிராயுதபாணிகளான அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அவர்களது வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. தங்க நகைகள் உட்பட வீடுகளில் இருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எனவே, சம்பவ இடத்திற்கு நேரில் சென்று கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சட்டத்தரணி சிறிகாந்தாவின் கூற்றை ஆதாரமற்றது என தெரிவித்த பொலிசார் படையினரோ பொலிசாரோ துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என அடியோடு மறுத்தனர். இதனையடுத்து சம்பவ இடமாகிய நாவாந்துறை பகுதிக்குச் சென்று பார்வையிட்ட நீதிபதி அங்கு பொதுமக்களிடம் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து கேட்டறிந்தார். அதன் பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரையும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை ஒத்திவைத்தார்.

மர்ம மனிதன் விவகாரத்தையடுத்து, படையினருக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட மோதல்களில் கிழக்கு மாகாணத்தில் 18 பேரும், புத்தளத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்ட சம்பவத்தில் 48 பேரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆயினும் பொலிசாரினாலும், படையினராலும் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமாக தாக்குதல்களுக்கு எவரும் கைது செய்யப்படவில்லை. அதுகுறித்து படையினராலோ அல்லது பொலிசாரினாலோ எந்தவிதமான விசாரணையும் மேற்கொள்ளப்படவும் இல்லை. இதனால் அரசாங்கத்தின்மீதும் படையினர் பொலிசார் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை இழந்து கசப்புணர்வு கொண்டிருக்கின்றார்கள். அத்துடன் யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் மர்ம மனிதர்களின் நடமாட்டம் தீவிரமடைந்து மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளைப் போல் வைத்திருக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தைக் கொண்டதாகவே மர்ம மனிதன் விவகாரம் பூதாகரமாக்கப்பட்டுள்ளது என்று பலரும் சந்தேகிக்கின்றார்கள். மர்ம மனிதனின் நடமாட்டம் அரசியல் மர்மங்கள் நிறைந்ததாகவும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

# எலி வளை...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலையங்களிற்கு புதிய முகவரியை தெரியப்படுத்துதல்.

2. தபால் கந்தோரில் (Post Office) உங்களின் முகவரி மாற்றத்தை தெரியப்படுத்துதல்.

3. Gas, Electricity, Calbe, TV, தொலைபேசி போன்ற அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு முகவரி மாற்றங்களை ஏற்படுத்துதல்.

4. ஏதாவது Pre-Authorized Cheque கொடுத்து இருந்தால் அவற்றை இரத்துச் செய்யலாம்.

5. Gardening, Dry Cleaning, Trash Pick போன்ற சேவை செய்பவர்களிற்கு அறிவித்தல்.

6. பத்திரிகை விநியோகம் இருப்பின்முகவரி மாற்றத்தைத் தெரியப்படுத்தல்.

7. Home Appliances சேவை செய்பவர்களிற்கும் தெரியப்படுத்துதல்.

8. புத்தக விநியோகம், Credit Card நிறுவனங்கள் Department Stores, Finance Companies, Stock Brokers, Accountant's, BookKeepers ஆகியவர்களிற்கு முகவரி மாற்றத்தை தெரியப்படுத்தல்.

9. Bank Account / securities என்பவற்றுடன் புது விலாசத்தை அறியத்தருதல்.

10. Social, Athletic, Civic, Religious or Business மற்றும் Membership ஆகியவற்றை நிறுத்தலாம். அல்லது புது விலாசத்திற்கு மாற்றலாம்.

11. Dirving License, Medical, Dental, Optical Records களை புதிய முகவரிக்கு மாற்றல்.

12. துப்பரவு செய்யக் கொடுத்திருக்கும் ஆடைகளை திருத்தக் கொடுத்திருக்கும் பொருட்களை பெற்றுக்கொள்ளல்.

13. புதிதாக வாங்கிய வீட்டிற்குரிய சாவிகளை பெற்றுக் கொள்ளல்.

14. இடம்மாறும் போது பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

15. பொருட்களை வேறுபடுத்தக்கூடிய பெட்டிகளில் வித்தியாசமான நிறங்களால் குறித்துக் கொள்ளலாம்.

16. எரியக்கூடிய பொருட்களை தனியாக வைத்து இடம்மாற்றுவது பாதுகாப்பாக இருக்கும்.

***Happy Moving & Wish You All the Best.***

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct: 416-276-1225
Sell your home faster and more money
When you list your home with Mike, you receive these Guarantees
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it *
RE/MAX
Brimley/Brimorton
$315,000
3+1 Bed Rooms, 1 W Rooms
Broadloom Hardwood Floor
Whitelaw & Townline
$319,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic Floors
Morningside / Finch
$369,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Kennedy/Steeles
$369,000
3+1 Bed Rooms, 3 W Rooms
Laminate/Broadloom Floors
Markham / Golden / Highglen
$395,900
3 Bed Rooms, 2 W Rooms
Ceramic Backsplash
9th Line/Hoover Park Drive
$419,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic floors
16th Ave/9th Line
$468,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Mccowan /Denison
$479,000
3 Bed Rooms, 3 W Rooms
Broadloom Eat-In Kitchen
Hwy 48 & Hoover Park
4_+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Staines/Steeles
$509,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Broadloom
Main/Sandale
$519,900
4+2 Bed Rooms, 5 W Rooms
Wood/Hard floors
Bur Oak /Morning Dove
$529,000
3 Bed Rooms, 3 W Rooms
Laminate Floor
Markham/Highglen
$529,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Mccowan/14th Avenue
$543,900
4 Bed Rooms, 3 W Rooms
Open Concept Combined W/Living
16 Th Ave& Markham Rd (Hwy 48)
$589,000
4+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Woodfloors
Kennedy / Bur Oak
4+3 Bed Rooms 5 W Rooms
Pot Lights /Ceramic Backsplash
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
9th Line/Castlemore
4 Bed Rooms, 4 W Rooms
Coffered Ceiling/Breakfast Bar
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
30/60/Tba
ESSO
$459,000
Gas Station
வாழ்க்கை சுவர்க்கமானது
இனிய இல்லமென்றில்
KZ Graffic- 647-200-5833
PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com
RE/MAX
Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated
I can also assist you Mortgage Financing,
Home Inspection, Real Estate Lawyer

# நினைவு மறந்து வீதியில் அலையும் முதியவர்களுக்கு கனடாவில் ஒரு முற்பாதுகாப்பு

## SAFELY HOME REGISTRATION FOR WANDERING PERSONS

## கனடிய தகவல் தொடர் 155

வீட்டினை விட்டு கண்காணிப்புகள் எதுவுமேயில்லாது வெளியே போகும் முதியோருக்கு சில நேரங்களில் நினைவுகள் மறந்து எங்கே நிற்கின்றேன்? என்ன செய்கின்றேன்? எப்படி எந்த வழியால்? வீட்டுக்கு திரும்பி போவது என தெரியாது வீதியில் அலைவது!

போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் தமிழர்களுக்கு மட்டுமல்ல பல்லின மொழி பேசும் பலருக்கும் பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு வருவதும், தொடர்ந்து அவர்களை காணவில்லை என முறைப்பாடுகள் பொலிசில் பதிவதும் அது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வருவதும் இடைவிடாத ஒரு நிகழ்வாக கனடாவில் காணக்கூடியதாகவுள்ளது.

பலருக்கு மொழி என்ற தொடர்பு சாதனம் ஒரு பாரிய பிரச்சினை! அந்த மொழி என்பது தெரியாது அலைபவர்கள் ஏன் அலைகின்றனர் என்பதனை புரிந்துகொள்ள முடியாது. பார்ப்பவர்களும் விலகி போய் விடுவார்கள். கடந்த ஜனவரி 17. 2011 இல் கனடிய ஆங்கில ஊடகமொன்றில் (CBC NEWS) 'Toronto Woman dies after calls for help ignores' (பலரை உதவிக்கு அழைத்தும் உதாசீனம் செய்யப்பட்டதால் ரொறொன்ரோ நகர பெண் மரணம்) என்னும் தலைப்பில் வீதியில் அலைந்து திரிந்த சற்று வயோதிபமான பெண் உறையும் பனியில் அமுங்கி பலியானார் என்ற செய்தி வெளியாகியிருந்தது. இது உதாரணத்திற்கு ஒரு சம்பவம்! இப்படியான ஏராளமான செய்திகள் தொடர்ந்து கனடாவின் ஆங்கில ஊடகங்களில் வந்து கொண்டுள்ளன. ரொறொன்ரோ பொலிஸ் பிரிவின் இணையத்தளத்திலும் காணாமல் போவோர் பற்றிய முறைப்பாடுகள் அவர்களின் குடும்பத்தினால் மேற்கொள்ளப்பட்டு பதிவாகியிருப்பதனையும் தினமும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மூளையின் நினைவு ஆற்றல்களை அறுந்து கொண்டு போகும் 'அல்ஸைமேர்' (Alzheimer) என்னும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் பாதிக்கும் ஆரம்ப நிலைக்கு உள்ளாகுபவர்களே இப்படியான அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்நோயால் பாதிக்கப்படும் 90% வீதமானோர் 65வயதுக்கு மேற்பட்டோர் எனவும் ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்நோய் பற்றிய மருத்துவ புள்ளி விபர அறிக்கை தெரிவிக்கின்றன. மனித மூளையின் கலங்களில் ஏற்படும் சீரழிவுகள் தொடர்ந்து நரம்புகளில் சீரழிவுகளை ஏற்படுத்தி நினைவாற்றலை படிப்படியாக குறைத்து வாழ்வில் எந்த தீர்வும் எடுக்க முடியாது. சமூகத்தோடு சுமூகமாக வாழ முடியாத, ஒரு மாறாட்ட நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.

ஏற்கெனவே ஆரோக்கியமாக இருக்கும் ஒரு மனிதன் காப்புறுதி கம்பனி ஒன்றில் 'கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில்'



(Critical Illness Insurance) ஏற்கெனவே சேர்ந்திருந்தால் இந்நோய் உறுதிப்படுத்தப் படும் போது நட்டஈடு வழங்கும் அளவுக்கு ஒரு கொடிய நோய்களில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. இத்தகைய நோயின் தன்மையால் பாதிக்கப்பட்டவர்களே நினைவு மறந்து வீட்டுக்கு திரும்பி வரும் வழி தெரியாமல் வீதியில் அலையும் நிலைமைக்கு தள்ளப்படுபவர்கள். ஆனால் கனடாவில் இதே மாதிரியான மாறாட்டங் களினால் பாதிப்புகளில் உள்ளவர்களுக்கு ஒரு நிறுவனம் ஒரு சிறு பாதுகாப்பினை வழங்கி வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா? அந்த நிறுவனத்தின் விபரங்கள் பின்வருமாறு!

ALZHEIMER SOCIETY OF CANADA
20, Eglinton Ave, West, Suite1600
Toronto, ON M4R 1K8
தொலைபேசி 1.800.616.8816
416.488.8772
தொலைநகல் - 416.488.3778
இணையத்தளம் - www.alzheimer.ca

மேற்குறிப்பிட்ட நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இத்தகைய நினைவு மறந்து வீடு திரும்பி வர முடியாதவர்கள் என சந்தேகப்படுபவர்களின் விபரங்களை முதலில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். இந்நிறுவனத்தின் இணைய தளத்தினுள் போய் 'பாதுகாப்பாக வீடு திரும்பும் விண்ணப்பப்படிவம்' (Safely home registration form) என்னும் படிவத்தினை பூர்த்தி செய்து இந்நிறுவனத்தில் இவரை பராமரிக்கும் குடும்பத்தில் உள்ளவர்கள் (Caregiver for their family members) எவரேனும் பொறுப்பெடுத்து சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் பதிவு செய்யும் கட்டணமாக $35 டொலருக்கு காசோலை எடுத்து ஒருமுறை மட்டும் செலுத்தும் கட்டணமாக அனுப்புதல் வேண்டும். மின் அஞ்சல் மூலமாகவும் (Online registration) பதிவு செய்யலாம். விண்ணப்பம் கிடைத்து நான்கு கிழமையினுள் பதிவுகள் முடிவடைந்து விடும். நினைவு ஆற்றல்களினால் பாதிக்கப்பட்டவரின் பெயர், விலாசம், படம், உருவங்களின் அமைப்பு, சுபாவங்கள் இவர் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் முகவரிகள் யாவும் இந்நிறுவனத்தில் பதிவு செய்யப்படுவதுடன் கனடிய தேசிய பொலிஸ் நிறுவனத்தின் தகவல் வங்கியிலும் (RCMP - Personal Information Bank) பதிவு செய்யப்பட்டு எந்நேரமும் தகவல்களை வெளிகொணரும் தயார் நிலையில் இந்நிறுவனங்களின் தொடர்பு சாதனங்களின் பதிவில் இருக்கும்.

சகல விபரங்களும் பதிவு செய்யப்பட்ட பின்பு இந்நிறுவனம் என்றுமே துருப்பிடிக்கும் நிலைமைக்குள்ளாகாத ஒரு உலோக வளைய காப்பு (Stainless Steel Wrist Bracelet) ஒன்றினை நினைவு இழந்தவரின் கையில் பொருத்தி விடுவார்கள். (இவ் உலோக காப்பினை தற்சமயம் தொலைத்தாலும் $15 டொலர் செலுத்தி இன்னொன்று பெறலாம்)

ஒவ்வொருவர் கையிலும் பொருத்தப்படும் இவ் உலோக காப்பில் ஒவ்வொவருக்கும் ஒரு பதிவு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும். வீதியில் நினைவு இழந்து அலையும் இவரை எதிர்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு இவரை பற்றிய தகவல்களை பெற இப்பதிவு இலக்கம் ஒன்றே போதும். தொடர்பு கொள்ள பாஷை தெரியாத பிரச்சினைகள் பொலிசாருக்கு இருந்தாலும் கையில் கட்டியிருக்கும் இவ் இலக்கத்தினை வைத்து இவர் யார்? இவரது விலாசம்? இவர் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் விபரங்கள் என சகலதினையும் பெற்று நேரடியாக வீட்டிற்கு போய் சேர பொலிசாரே உதவி செய்வார்கள். இவ் அடையாள வளைகாப்புடன் அடையாள அட்டைகள் பேர்ஸில் வைத்து சட்டை பையில் கொண்டு திரிய மேலதிகமாக வழங்குவார்கள். இவ் அடையாள அட்டையிலும் தகவல்கள் இருக்கும். அத்துடன் இவரை 'பராமரிப்பவருக்கு வழிகாட்டும் தகவல்கள்' (Caregiver hand book) என ஒரு சிறு புத்தகம் போன்றவற்றையும் வழங்குவார்கள். விலாசங்கள், தொடர்பு கொள்ள வேண்டியவரின் விபரங்கள் போன்ற வற்றினை மாற்ற வேண்டியிருந்தால் அதனை எப்படி காலத்துக்கு ஏற்றவாறு எப்படி மாற்றிக்கொள்வது போன்ற விபரங்களையும் பதிவு செய்யப்படும் போது வழங்குவார்கள்.

சரி! இவ்வாறு எதுவித அடையாளமும் தெரியாது வீதியில் அலைபவர்களை எந்த மொழி பேசும் சமூகத்தில் இருந்து வந்திருக்கின்றார்? இவருக்காக எவருடன் தொடர்பு கொள்வது? என்பது தொடர்பாக பல்லின மக்கள் வசிக்கும் ரொறொன்ரோ நகரில் பொலிஸ் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பது ஏராளம் ஆகும். எனவே எல்லோருடைய வேலையினையும் இலகுவாக்கி இவ்வாறு நினைவு மாறி அலைய வேண்டிய முதியவர்கள் பாதுகாப்பாக எந்த இடத்திற்கு திரும்பி வர வேண்டுமோ? அந்த இடத்திற்கு திரும்பி வர வேண்டுமாயின் முதலில் தவறாமல் செய்ய வேண்டியது இந்நிறுவனத்தின் ஊடாக பொலிஸ் மின்கணினி தகவல் மையத்தில் பதிந்து வைப்பது ஆகும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

அமெரிக்க மத்திய வங்கி அரையாண்டு வரை வட்டிவீதங்களைக் கூட்டப் போவதில்லை என்று அறிவித்து உலகத்தவரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

S&P யின் அமெரிக்க பெறுமதி குறைப்பினால் AAA இலிருந்து AA+ ஆனது பற்றி சென்றமுறை குறிப்பிட்டிருந் தோம். ஆட்டம் கண்டு போன சந்தை மீண்டும் விரைவாகப் புத்துணர்ச்சி பெற்று எழுந்தது. ஆனால் மக்களின் பயமும், நம்பிக்கையும் மாறி மாறி சந்தையில் பிரதி பலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. பயம் வரும் போது சரிவதும், திரும்ப ஒரு நல்ல சேதி வரும் போது நம்பிக்கை பிறந்து பங்குச் சந்தை மேலே ஏறுவதும் ஒன்றும் புதிது அல்ல. என்றாலும் ஒரே நாளில் 640 புள்ளிகள் விழுவதும் 480 புள்ளிகள் ஏறுவதும் அடிக்கடி நடப்பவை அல்ல. அந்த விதத்திலே சராசரிக்கும் மேற்பட்ட பயமும் நம்பிக்கையும் மாறி மாறி சந்தையில் நிலவுவதாகவே தோன்றுகின்றது. சரி பங்குச் சந்தையை விட்டு வட்டி வீதங்களை ஆராய்வோம். அமெரிக்கா 2 வருடங்களுக்கு வட்டி வீதங்களை கூட்டப் போவதில்லை என்று அறிவித்தபின் கனடா மட்டும் வட்டிவீதங்களை கூட்டுமா என்ன? நடப்பதற்கான வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவே.

வீட்டுக் கடனை மாறும் வட்டியில் வைத்திருப்போர் பெரும் பயன் அடையப் போகின்றனர், என்றே தோன்றுகின்றது. நிலையான வட்டியில் நிம்மதியைத் தேடி வீட்டுக்கடனை வைத்திருப்போர் குறைந்த நிலையில் இருக்கும் மாறும் வட்டியைப் பார்த்து நிம்மதி இழக்காமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். வங்கிக்குச் சென்று வட்டியைப் மாற்ற விரும்பினால் எண்ணிப் பார்க்க முடியாத தொகையை அபராதத் தொகையாகக் கட்டச் சொல்வார்கள்.



தொடர்ந்து கனடாவில் வட்டிவீதங்கள் குறைந்த நிலையில் இருக்கும் போதே வீடுகளின் விலைகளிலும் ஏற்ற நிலையே தென்பட வேண்டும். வீடு வாங்கும் சக்தி பலருக்கும் இருக்கும். அதனால் வாங்கப் போட்டி தொடரும் என்று நம்பலாம். அதற்காக கடன் வாங்கி கண்டதிலும் பணத்தை போட வேண்டும் என்று கருதக்கூடாது.

முதலீடா, கடன்குறைப்பா என்று குழப்பம் வருமானால் முன்னுரிமை அளிக்க வேண்டியது கடன் குறைப்புக்கே. பணத்தை கடனைத் திரும்பிச் செலுத்தப் பயன்படுத்தும் போது வட்டியில் சேமிப்பது நிச்சயம். முதலீட்டில் சேமிப்போமா என்றால் குறிப்பாகப் பங்குச் சந்தையில் பயமும், நம்பிக்கையும் மாறி மாறி நிலவும் காலத்தில் உறுதி படச் சொல்ல இயலாது.

‘ரிஸ்க்’ எடுக்கத் தயாரா? எவ்வளவு ரிஸ்க் எடுக்கத் தயார்? புரிந்து செயல்படுங்கள். ஆசை என்பது வாழ்வின் அங்கம், பேராசை என்பது உடலையும் மனத்தையும் அரிக்கும் நோய். நோய்க்கு இடங்கொடேல். அளவோடு செய்யும் எதுவும் நாளடைவில் நல்ல பலனைத் தரவே செய்யும்.

வாழ்வில் பல சமயங்களில் சூழ்நிலைகள் மாறுகின்றன. சந்தர்ப்பங்கள் மாறுகின்றன. முன்பு சரியென்று நினைத்தவை மாறிய சூழ்நிலைக்குப் பொருத்தாமலும் போகலாம். திருமணம், விவாகரத்து, குழந்தைப்பிறப்பு, குடும்பத்தில் இறப்பு, புதிய வேலை அல்லது வேலை இழப்பு என்று இப்படிப் பலப் பல மாறும். சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் வாழ்க்கையில் கூறலாம்.

யாரோ சொன்னதைப் போல அனுபவம் என்பது கடினமான ஆசான். அவர் முதலில் தருவது தேர்வு, படிப்பினை பின்பு தான் வருகின்றது. எல்லாவற்றையும் நம் அனுபவத்தின் வாயிலாகக் கற்க முற்படும் போது காலமும், செலவும் கூட ஆகும். மற்றவர் அனுபவத்தின் வாயிலாக செயல்படும் போது நேரமும், பொருளும் மிச்சமாகின்றது. ஆனால் தக்கோரின் அனுபவத்தை தேர்ந்தெடுத்து வழிகாட்டி யாகவோ, ஆசானாகவோ கொள்ளலாம்.

இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற தொலைபேசி எண் 416.473.6100. மின் அஞ்சல்: perrii@dreamsandmoney.com, இணைய தள முகவரிகள்: www.dream-sandmoney.com, www.perrii.com



பெரி. முத்துராமன்

# சித்திரை 1 தமிழ்ப் புத்தாண்டு
# தமிழக சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றம்

சித்திரை மாதம் முதல் நாளை மீண்டும் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாட வகை செய்யும் மசோதா தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. முந்தைய திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட ‘தை முதல் தேதியே தமிழ்ப் புத்தாண்டு’ என்ற நடைமுறையை ரத்து செய்து தமிழக சட்டப்பேரவையில் ஆகஸ்ட் 23, 2011 இல் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இதன் மூலம், ஏற்கெனவே இருந்த வழக்கத்தின்படி, சித்திரை முதல் தேதியை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடுவதற்கு வகை செய்யப்படுகிறது. இந்த மசோதாவை சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் தாக்கல் செய்தார். 2011ம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நீக்க சட்ட முன்வடிவின் விவரம்: 2008ம் ஆண்டு தமிழ் நாடு தமிழ்ப் புத்தாண்டு சட்டமானது தமிழ் திங்களான தைத் திங்கள் முதல்நாளை தமிழ்ப்புத்தாண்டு நாளாக கொண்டாட வேண்டும் என்று கூறுகிறது. பொதுமக்களும், தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களும், வானியல் வல்லுனர்களும், மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் உள்ள அறிஞர்களும் 2008ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு சட்டமானது தமிழ் திங்களான சித்திரை திங்களின் முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாக கொண்டாடிவரும் வழக்க நடைமுறைக்கு மாறாக உள்ளது என்று கருத்துக்கூறி உள்ளனர். தங்களது கருத்துக்களை வெவ்வேறு ஊடகங்களின் வாயிலாகவும் வெளிப்படுத்தி உள்ளனர். மேலும் மேற்சொன்ன சட்டத்தை நீக்கம் செய்யுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழ்த் திங்களான சித்திரை திங்கள் முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாக கொண்டாடும் பழமை வாய்ந்த வழக்கத்தை மீட்டுத் தருமாறும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனவே, மேற்சொன்ன சட்டமானது தமிழ் திங்களான தைத்திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக பின்பற்றுவதை பொறுத்த அளவில் பொதுமக்களிடையே நடைமுறை இடர்பாடுகள், தடை, எதிர்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்தி உள்ளது.

எனவே தமிழ் திங்களான சித்திரை திங்கள் முதல் நாளை தமிழ் புத்தாண்டாக கொண்டாடும் காலத்தால் முந்தைய வழக்கத்தை மேற்கொள்ள சட்டத்தை நீக்கம் செய்வதன் மூலம் மீட்டளிக்க முடிவு செய்துள்ளது. இந்த சட்ட முன்வடிவு, மேற்காணும் முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்க விளைகிறது," என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா மீதான விவாதத்தில் இந்திய குடியரசுக் கட்சி மாநிலத் தலைவர் செ.கு. தமிழரசன் பேசியது: பகுத்தறிவாளர்களுக்கு என்று ஒரு நம்பிக்கை இருக்கலாம். ஆனால், அந்த நம்பிக்கை மற்றவர்களின் நம்பிக்கையைப் புண்படுத்துவதாக இருக்கக் கூடாது. அக்டோபர் 1ல் புத்தாண்டா, ஜனவரி 1ல் புத்தாண்டா என ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாடுவதிலும் நீண்டகாலமாக சர்ச்சை இருந்து வருகிறது. பலநூறு ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை வழக்கத்தைக் காப்பாற்றும் வகையில் மீண்டும் சித்திரை முதல் நாளில் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்படும் என்ற சட்டத்தைப் பாராட்டி வரவேற்கிறேன் என்றார். பின்னர், இந்த மசோதா விவாதத்துக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது.



முன்னதாக, முன்னாள் முதல்வர் கருணாநிதியால் சுயவிளம்பரத்துக்காக இயற்றப்பட்ட தமிழ்ப் புத்தாண்டு சட்டம், தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்துகின்ற வகையில் உள்ளதால் அது ரத்து செய்யப்படுகிறது என்று முதல்வர் ஜெயலலிதா விளக்கம் அளித்துள்ளார்.

முந்தைய தி.மு.க ஆட்சியில் கொண்டுவரப்பட்ட ‘தை முதல் தேதியே தமிழ்ப் புத்தாண்டு’ என்ற நடைமுறையை ரத்து செய்து தமிழக சட்டப்பேரவையில் மசோதா தாக்கல் நிறைவேற்றப்பட்டதன் மூலம், ஏற்கெனவே இருந்த வழக்கத்தின்படி, சித்திரை முதல் தேதியை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடுவதற்கு வகை செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா பேசுகையில், ‘தமிழ் மொழி மீதும், தமிழர்கள் மீதும், தனக்கு மட்டுமே அக்கறை இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை பொதுமக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக, முன்னாள் முதல்வர் கருணாநிதியால் தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு சட்டம், 2008 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

இந்தச் சட்டம், ஒரு சுய விளம்பரத்துக்காக இயற்றப்பட்டதே தவிர, இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு, எந்த வித நன்மையும் இல்லை. மாறாக, ஆண்டாண்டு காலமாக சித்திரை மாதப் பிறப்பை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டு இருக்கும் தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

ஒரு நாட்டிலே, ஒரு சட்டம் இயற்றப்படுகிறது என்றால், அந்தச் சட்டம், அந்த நாட்டு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சித்திரை தமிழ்ப்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்களுக்கு பயன்பட வேண்டும் அல்லது, இது போன்ற சட்டம் தேவை என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், அந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் தெளிவாக தெரிவிக்கப்பட வேண்டும். இவை எதுவுமே இல்லாமல், யாருக்கும் பயன-ளிக்காத ஒரு சட்டத்தை முந்தைய தி.மு.க. அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டதையடுத்து, உடனடியாக சென்னையில் கருணாநிதிக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. கருணாநிதியின் துதிபாடிகள் அனைவரும் அவரைப் போற்றினர். இதைத் தவிர, வேறு யாருக்கும் எந்த வித நன்மையும் இந்தச் சட்டத்தினால் ஏற்படவில்லை. தமிழக மக்கள் மத்தியில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக, தமிழுக்கு மிகப் பெரிய சிறப்பினை செய்தது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்காக, இது போன்ற சட்டத்தினை கருணாநிதி இயற்றியுள்ளார்.

தமிழர் காலக் கணிப்பு முறையின்படி, ஒரு ஆண்டுக்குரிய 12 மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாகும். இது சூரியனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. சூரியன், மே' ராசிக்குள் நுழைவதிலிருந்து, அந்த ராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதம் ஆகும். ஆண்டின் தொடக்கம் வசந்தமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், சித்திரை மாதத்தை ஆண்டுத் தொடக்கமாக நம் மூதாதையர்கள் கணக்கிட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. பல்லாண்டு காலமாக, சித்திரை முதலாம் நாளையே புத்தாண்டாக தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தொடங்குவது என்பது, வான நூலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, பருவங்களின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையை ஒட்டி, சித்திரை மாதத்தைத் தொடக்க மாதமாகக் கொண்டமைந்த ஆண்டு கணக்கீடு தான் பூர்விகத் தமிழ் மரபாக இருக்க முடியும். கோடை காலமே முதலாவது பருவம் என சீவக சிந்தாமணியில் வருணிக்கப்பட்டுள்ளது.

சித்திரையே வா! நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க வா! என்று சொல்லும் மரபு இருக்கும் காரணத்தால், சித்திரை மாதமே தமிழ் புத்தாண்டுக்கு உரிய, பொருத்தமான நாள் ஆகும் என மதுரை ஆதினம் குறிப்பிட்டுள்ளார். சித்திரைத் திங்கள் முதல் நாளை ஆண்டின் துவக்க நாளாகக் கொண்டாடலாம் என பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பண்டைத் தமிழர் வானவியல் ஆதாரப்படி, தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் சித்திரை மாதம் தான்.

சங்க இலக்கியத்தின் மிகப் பழைய இலக்கியமான, பத்துப்பாட்டு இலக்கியத்தின் நெடுநல்வாடையில், சூரியன் மே மாதத்தில் சஞ்சாரம் செய்து சுழற்சியைத் தொடங்கும் உண்மையை நக்கீரனார் தெளிவுபடுத்தி இருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1912 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் பேரகராதியிலும் சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல் வி. ராமலிங்கம் பிள்ளை அவர்களும், சித்திரை மாதத்தில் புத்தாண்டு தெய்வம் திகழும் திருநாட்டில் என்ற தனது வாழ்த்துப் பாடலின் மூலம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் சித்திரை மாதம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும், பல்வேறு கல்வெட்டுகளும், எண்ணற்ற இலக்கியங்களும், சித்திரை மாதம் முதல் நாளன்று தமிழ்ப் புத்தாண்டு தொடங்குவதை உறுதிப்படுத்துகின்றன.

இந்தச் சட்ட முன்வடிவு, சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட போது, இதை வரவேற்று பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், என். நன்மாறன், தமிழ்ப் புத்தாண்டை மாற்றி அமைத்ததற்கான காரணங்கள் இருந்தால் அதை தெளிவுபடுத்த வேண்டும் என்று கூறி இருக்கிறார். ஆனால், கடைசி வரையில் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. மேற்படிச் சட்டம் இயற்றப்படும் போது, அதற்கான நோக்கக் காரண விளக்க உரையில், தை திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால், தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட அரசு முடிவு செய்துள்ளதாகவும், அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு சட்டம் இயற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும், சித்திரை திங்கள் முதல் நாளையே கோடான கோடி தமிழ் மக்கள் தமிழ்ப் புத்தாண்டு தினமாக கொண்டாடி வருகின்றனர். இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக மக்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. மக்கள் நம்பிக்கையை சட்டம் மூலம் மாற்றுவது சரியல்ல. எனவே, தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், யாருக்கும் பயனளிக்காத, காலங்காலமாக போற்றி பாதுகாத்து வந்த மரபுகளை மீறுகின்ற, தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்துகின்ற, இந்தச் சட்டத்தினை ரத்து செய்வது தான் பொருத்தமாக இருக்கும்," என்று முதல்வர் ஜெயலலிதா பேசினார்

## தமிழ் புத்தாண்டு தினம் மாற்றம்: கலைஞர் கருத்து

கடந்த தி.மு.க ஆட்சியில் தை முதல் நாளே தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தற்போது அ.தி.மு.க ஆட்சியில் ஆண்டுதோறும் சித்திரை முதல் நாள் தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படும் என்றும், தை முதல் தேதி தமிழ் புத்தாண்டு என்பதை ரத்து செய்து தமிழக சட்டமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொல்லியல், வானியல் நிபுணர்களின் கருத்தை ஏற்று புத்தாண்டு தினம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பல்லாண்டுகால வழக்கத்துக்கு மாறானது என தொல்லியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். 2008ஆம் ஆண்டு சட்டத்தை ரத்து செய்யவும் கோரியிருந்தனர் என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. தமிழ் புத்தாண்டு தினம் மாற்றம் குறித்து தி.மு.க தலைவர் கலைஞர் கூறியிருப்பதாவது, தமிழ் புலவர்கள் கோரிக்கையின்படியே தை முதல் நாள் புத்தாண்டாக அறிவிக்கப்பட்டது. 1921ல் மறைமலை அடிகள் தலைமையில் 500 புலவர்கள் கோரிக்கை வைத்திருந்தனர் என்று கூறியுள்ளார்.

விளம்பரம் ஜனவரி 15, 2011, பெப்ரவரி 01, 2011 மற்றும் பெப்ரவரி 15, 2011 இதழ்களில் (www.vlambaram.com) தை முதல் திகதி தமிழ் புத்தாண்டு தினமாக ஏன் வராது என விரிவான கட்டுரைகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

அக் கட்டுரையில் கலைஞர் கருணாநிதி திரும்ப, திரும்ப கூறும் மறைமலை அடிகளும் அவரை சேர்ந்தவர்களும் ஏன் 1921 இல் தை முதல் திகதி தமிழ் புத்தாண்டு தினமாக வரும் என்று கூறியது விபரிக்கப்பட்டிருந்தது. 1921 இல் தமிழ்நாட்டில் வ. உ. சிதம்பரப்பிள்ளை (கப்பலோட்டிய தமிழன்) சுப்பிரமணிய சிவம் போன்ற பழுத்த அரசியல்வாதிகள் இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டி ஆங்கில அரசுக்கு எதிராக "இந்திய தேசிய காங்கிரஸ்" என்ற அமைப்பின் மூலம் பொதுமக்களை திரட்டி போராடி வந்தார்கள்.

ஆங்கில அரசு இவர்கள் பிராமணர்களாக இருப்பதை தெரிந்துகொண்டு தமிழ் மக்களை ஒன்று சேரவிடாமல் பிரிப்பதற்காக தமது கை வந்த கலையான பிரித்தாளும் கொள்கையை கையாண்டார்கள். பிராமணர் அல்லாத மறைமலை அடிகள், கல்யாண சுந்தர முதலியார் போன்ற சிலரை சேர்த்து ஆங்கில அரசிற்கு சார்பாக "Justice Party" என்ற அமைப்பின் மூலம் பிராமணர்கள் தமிழரிற்கு எதிரானவர்கள் என்று பிரசாரம் செய்யவே "தை முதலாம் திகதி தமிழ் புத்தாண்டு தினம்" என்றும் "வள்ளுவர் பிறந்தது ஜனவரி 15" என்று ஒரு கற்பனை திகதியையும் கூறவைத்தார்கள்.

ஆகவே தை முதல் திகதி தமிழ்ப்புத்தாண்டு என்பது சுதந்திர வேட்கையை அடக்கி ஆங்கில ஆட்சியை ஆதரிப்பதற்காக பிராமணர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நிகழ்வே அல்லாமல் தமிழ் மக்களுக்காக சரித்திர ஆதாரங்களுடன் எடுக்கப்பட்ட முடிவு அல்ல.

தற்போதைய தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அரசியல் சட்டமூலத்தை திருத்தி கலைஞர் கருணாநிதி 2008இல் செய்த பிழையை நிவர்த்தி செய்துள்ளார்.

தகவல்: சிவ. ஞானநாயகன்

நன்றி: விகடன்

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தோல்வியின் தோழர்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 128

நாம் வாழும் ஒவ்வொரு கணப்பொழுதும் வாழ்வியலின் முன்னோக்கிய நகர்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நமது அனுபவங்கள், அறிவியல் சிந்தனைகள், மற்றவர்களது ஆக்கபூர்வமான கருத்துக்கள், வழிகாட்டல்கள் எனப்பல நிகழ்வுகள் நமது வாழ்வில் நாளாந்தம் இடம்பெறுகின்றன. நமது வாழ்வியல் சம்பந்தமான ஒவ்வொரு நகர்வும் முன்னேற்றப்பாதையில் அமையவேண்டும் என்பதே நமது முக்கிய குறிக்கோளாகும். இந்த நகர்வுகள் நம் ஒவ்வொருவரையும் தற்போதைய நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு முன்னேற்றிச் செல்வதற்கு வழிவகுப்பதாக அமைய வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பாகவும் அமைகின்றது. இந்த முன்னேற்றத்திற்கான மாற்றங்கள் நமது குடும்பம், பொருளாதாரம், குழந்தை வளர்ப்பு எனப் பல துறைகளாக அமைவதும் அடிப்படையே. ஒவ்வொரு மனிதனும் பிறப்பிலிருந்து இறப்புவரை எதிர்பார்ப்புக்களின் பெறுபேறுகளைக் குறி வைத்தே நகர்கின்றான். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒன்றில் தன்னை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்கான தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணப்பொழுதையும் பயன்படுத்து கின்றான். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைத் தேடுவதும் ஓடுவதுமாக நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நகர்வானது ஒவ்வொருவருக்கும் தனித்துவமான தாகவும் மற்றவர்களின் நகர்வுகளில் இருந்து வேறுபட்டதாகவும் அமைகின்றன. இவ்வாறு அமைவதற்கு நாம் ஒவ்வொருவரும் தனித்துவ மானவர்கள் என்பதும் நமது இலட்சியங்கள் நமது தனித்துவத்தின் பிரதிபலிப்பாக அமைவதும் காரணங்களாகின்றன. நாம் ஒவ்வொருவரும் நமது நாளாந்த வாழ்வியலில் முன்னோக்கிய நகர்வை மேற்கொள்கின்றோம்.

இந்த நகர்வுகளில் பல நிர்ப்பந்தங்களுக்குட்பட்டவையாகவும் சில நமது உள்ளம் சார்ந்த தெரிவுகளாகவும் அமைகின்றன. இந்த நகர்வுகள் நமது தனிப்பட்ட குடும்பம் சார்ந்த சமூகம் சார்ந்த தேவைகளின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. அதாவது ஒவ்வொருவரும் நமது சுயதிருப்திக்காகவோ அல்லது பிறர் திருப்திக்காகவோ பல செயற் பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். அடிப்படையில் நாம் உடலியல், உளவியல் ரீதியாக முன்னோக்கி நகரும் இயல்பைக் கொண்டு ஒரு உயிரினம் என்பது மறுக்க முடியாததும் மறைக்க முடியாததுமாகும்.

குறிப்பாக கூறுவதாயின் ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு வெற்றியாளனாக வேண்டும் என்ற அடிப்படை மனநிலையைக் கொண்டவன். தனது ஒவ்வொரு செயற்பாடும் அதன் விளைவும் மற்றவர்களுக்குத் தான் ஒரு வெற்றியாளன் என்பதை உணர்த்த வேண்டும் என்பதில் வெளிப்படையான அல்லது மறைமுகமான எதிர்பார்ப்பைக் கொண்டவன். இந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணப்பொழுதையும் பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றோம். இந்தப் பயன்பாட்டின் பிரதிபலிப்பே நாம் வாழும் நிலையைப் பிரதிபலிக்கின்றது.

நாம் ஒவ்வொருவரும் வெற்றியாளராக வேண்டும் என்பதே நமது வாழ்வியல் கனவாக அமைகின்றது. குழந்தைப்பருவத்தில் இருந்த படிப்படியாக நாம் நகர்ந்து செல்லும் ஒவ்வொரு காலப்பாதையும் பல வெற்றிகளின் சுவடுகளைக் கொண்டவனவாக அமைகின்றன. நமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப எமது வெற்றிச் சுவடுகள் காலத்திற்குக் காலம் பதியப்படுகின்றன. இந்தப் பதிவுகளே நமது வாழ்க்கையின் அடுத்த நிலையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைய வேண்டியவைகளாகும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது கடந்த கால வெற்றிகள் நமக்குப் பணிவையும் துணிவையும் தருவதாக அமையும் போது எதிர்கால வெற்றிகள் இலகுவாக்கப்படுகின்றன.

ஒருவரது வெற்றிக்கும், தோல்விக்கும் அடிப்படையாக அமைபவை அகக்காரணிகளா அல்லது புறக்காரணிகளா என்பது விவாதிக்கப்பட வேண்டிய விடயமல்ல. ஆண்டாண்டு காலமாக உலக வரலாற்றில் வெற்றியாளர்கள் என இன்றும் நம்மால் மதிக்கப்படுபவர்கள் ஒவ்வொருவரும் அவர்களது உயர்ந்த மனோ பாவத்தினாலும் சுய ஒடுக்கத்தினாலும் தளராததும், நேர்மையானதும் உறுதியானதுமான உழைப்பினாலும் தான் அந்த வெற்றியை அடைந்துள்ளார்கள். எனவே நமது வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதும் நாம் முன்னோக்கி நகர்வதற்கான வாய்ப்பைக் கொடுக்கின்ற போதிலும் பலர் வயதால் மட்டுமே முன்னோக்கிச் செல்கின்றார்களே தவிர வாழ்க்கையில் எந்தவிதமான பொருளாதார, குடும்ப, சமூக முன்னேற்றங்களை அடைவதில்லை.

ஒருவரது வெற்றியும் தோல்வியும் அவரது மனோபாவம், சுய ஒழுக்கம், விடாமுயற்சி எனப்பல காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. சரித்திரநாயகர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவமான மனோபாவமா அல்லது பழக்கவழக்கங்களா அவர்களை அந்த நிலைக்கு எடுத்துச் சென்றது என்பதை ஆராய்வது காலத்தை விரயமாக்குவதாகும். ஏனெனில் இவர்கள் ஒவ்வொருவரது வாழ்வியல் முறையும் மற்றவர்களில் இருந்து வேறுபட்டதாகவே அமைகின்றது. அவர்கள் பிறந்த இடம், பெற்றோர், மதம், மொழி எனப் பலகாரணிகள் அவர்களது வாழ்வியல் நகர்வுகளுக்கு வடிவமைத்துள்ளன. அதே நேரத்தில் உலக நாயகர்கள் எனப்படுபவர்கள் ஒரே பெற்றோருக்குப் பிறந்தவர் களாகவோ, ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களாவோ ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாகவோ, ஒரே மொழியைப் பேசுபவர்களாவோ இல்லை என்பது எவரும் வெற்றியாளர்களாகலாம் எனும் உறுதியைத் தருகின்றது. இந்த உறுதிப்பாடு பற்றிய புரிந்துணர்வு ஒருவருக்கு உந்து சக்தியாக அமையும்போது அவர் ஏதோ ஒரு துறையில் ஏதோ ஒரு அளவில் தன்னை முன்னிலைப்படுத்தும் நிலையை அடைகின்றார். இதுவே ஒருவரது வெற்றிக்கான முதற்படியாக அமைகின்றது. உண்மையில் நாம் ஒவ்வொருவரும் வெற்றியாளர்களே. நமது வெற்றியின் அளவு ஒப்பீட்டு ரீதியில் ஏற்றத்தாழ்வாக அமைந்துள்ளதேயன்றி நாம் வெற்றியடைந்து கொண்டுதான் இருக்கின்றோம். இந்த வெற்றியின் வேகம் அதன் விளைவுகள் என்பன ஒவ்வொருவருக்கும் வேறுபடினும் அந்த வேறுபாட்டிற்கான காரணிகள் எவை என்பதை அறிந்து கொள்வதே வேகமான முன்னேற்றத்திற்கான வழியாகும். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று வெற்றியாளர்கள் ஒவ்வொருவரதும் வாழ்வியல் வரலாற்றை தனித்தனியாகப் படித்து அதன் மூலம் நமது வெற்றி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு நமக்குரிய வாழ்காலம் போதாது. எனவே வெற்றிக்குத் தடையானவை எவை என்பதைப் புரிந்து கொள்வதன் மூலம் மிக இலகுவாக அவற்றை நீக்கி அல்லது கட்டுப்படுத்தி நமது வெற்றியின் வேகத்தைத் துரிதப்படுத்தலாம்.

ஒருவரது வெற்றியைத் தடை செய்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்றவர்கள் தோல்வியின் தோழர்களே. இந்தத் தோழர்கள் மனித உருவில் உள்ள மற்றவர்கள் அல்ல வாசகர்களே. நம் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருந்து கொண்டு அதுவும் நமது அனுமதியுடன் இணைந்து கொண்டு நமது ஒவ்வொரு செயற்பாட்டின் உயர்வைத் தடுக்கும் மூன்று தோழர்கள் இவர்கள். இந்த உருவமற்ற ஆனால் உணர்வு சார்ந்த தோழர்கள் அதிபெரும்பான்மையானவர்களை அவர்கள் அனுமதியுடன் அடிமைப்படுத்தி அவர்களது வெற்றியின் வேகத்தை மட்டுப்படுத்துகின்றார் கள். இவர்களை இனங்கண்டு அவர்களின் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுகின்ற ஒவ்வொருவரும் உயர்ந்த வெற்றியாளர்களே. இவர்கள்தான் மற்றவர் போற்றும் சிறப்பான வாழ்க்கையின் சிற்பிகளாவர்.

**KG Master-kgmaster@rogers.com**

இப்போது இந்த மூன்று தோல்வியின் தோழர்களை ஒவ்வொருவராகப் பார்ப்போம். முதலாவது தோழன் நமது காரியத்தைப் பின்தள்ளிப்போடும் மனப்பாங்கு (Procrastination) ஆகும். இது மிகவும் பாரதூரமான விளைவுகளைத்தரும் மனப்பாங்கு. ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கான சூழலும் காலஅளவும் சாதகமாக இருந்தும் கூட இந்த உணர்வைக் கொண்டவர்கள் அந்தக் காரியத்தைப் பின்தள்ளிப்போட்டுக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு பின்தள்ளிப் போடுவதால் கிடைக்கும் நேரத்தை வீணாகச் செலவு செய்வார்கள். அவசியமில்லாததும் அவசரமல்லாததுமான விடயங்களைத் தமது சுயதிருப்திக்காக நியாயப்படுத்திக் காலத்தை வீணடிப்பார்கள். இவர்களால் வீணடிக்கப்பட்ட காலம் மீளப்பெறமுடியாதது மட்டுமல்ல அவ்வாறு வீணடிக்கப்பட்ட காலத்தில் மேற்கொண்ட செயற்பாடுகள் பயனற்றவையாக இருப்பதுடன், வீணடிக்கப்பட்ட காலம் எதிர்காலத்தின் தரமான செயற்பாடுகளுக்கான காலத்தையும் கொள்ளையடித்து விடுவதால் மிகவும் தாழ்வான செயற்திறனுக்கு வழிவகுத்துவிடுகின்றது.

இரண்டாவது தோல்வியின் தோழன் சாக்குப்போக்குச் சொல்லும் மனப்பாங்கு (Excusitis) மனிதர்களில் அதிபெரும்பான்மை யானவர்களின் வாழ்க்கை வெற்றி நடை போடாமைக்கு முக்கியமான காரணியாக இருப்பது இந்த மனப்பாங்குதான். ஒரு காரியத்தைச் செய்வது நன்மை தரும் என்று உள்மனம் உறுத்தினாலும் கூட அகம்பாவம், தற்பெருமை எல்லாம் தெரியும் என்ற தன்மை மற்றவர்களை மதிக்காத அல்லது நம்பாத இயல்பு என்பன இந்த மனோபாவத்தை வளர்க்கின்றன. இதனால் வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய அரிய பெரிய வாய்ப்புக்களைக் கூட இவர்கள் இழந்து அனாதைகளாகி விடுகிறார்கள். கடவுள் இவர்கள் முன்தோன்றி ஒரு காரியத்தைச் சொன்னாலும் அதைச் செய்யமுடியாது என்பதற்குச் சாக்கு கூறித் தட்டிக் கழித்து விடுவார்கள். இதனால்தான் இவர்களுக்குக் கடவுள் கூடக் கைகொடுக்க முடிவதில்லை.

மூன்றாவது தோழன் ஒருவிடயத்தை அளவுக்கதிகமாக ஆழமாக ஆராய்வதில் காலத்தை விரயமாக்குதல். பலர் இந்த மனப்பான்மையால் காலத்தை வீணாக்குவது மட்டுமல்ல அவர்களது ஆராய்ச்சிக்கு ஒரு முடிவில்லாமல் தொடருவார்கள். இவர்களது இந்த வகை ஆராய்ச்சியானது கொடுக்கப்பட்ட விடயம் சம்பந்தமான தேவையான விடயங்களையும் மாற்றியமைத்து முற்று முழுதான தடுமாற்றத்துக் குள்ளாகி கிடைக்க வேண்டிய பலனையும் இழந்து விடுகிறார்கள். இவர்கள்தான், குடிப்பதற்கு கொடுத்த பாலைப் பருகுவதற்குப் பதிலாக அதன் நிறத்தை கொக்கின் நிறத்துடன் ஒப்பிட்டுப் பின்னர் கொக்குக்கு நீண்ட சொண்டு இருப்பதால் ( பால் இப்போது கொக்கின் சொண்டாக மாறிவிட்டது) அது தொண்டைக்குள் குத்தி அதனால் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குப் போய்...... முடிவில்லாமல் மூளையின் சக்தியை விரயமாக்கிவிடுகிறார்கள்.

தோல்வியின், மூன்று தோழர்களும் ஒவ்வொரு மனிதனிடமும் நட்புக் கொண்டுள்ளார்கள் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதே. ஆனால் வெற்றிமனோபாவம் கொண்டவர்கள் இவர்களைக் கட்டுப்படுத்தி அல்லது அவர்களுக்கு விலங்கிட்டு அல்லது ஆயுள் தண்டனை கொடுத்து அவர்களின் செல்வாக்கு வளரமுடியாமல் தடைசெய்து விடுகிறார்கள். அதாவது மிகமிகக் குறைந்த அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு உயர்ந்த மனவலிமையும், மனோபாவமும் கொண்டு வெற்றி நடைபோடுகிறார்கள். மாறாக இந்த மூன்று தோழர்களையும் முழுமையாக வாரி அணைத்துக் கொண்டு மிகக்கடினமாக முயற்சி செய்பவர்களுக்கு ஓர் அறிவித்தல். 'உங்கள் முயற்சிக்கான வெற்றி இமயமலைக்கு வயிறு நொந்து எலிக்குஞ்சு பிறந்ததாகத்தான் இருக்கும்.'

**ஆம் வாசகர்களே!**

வெற்றி நமது நண்பனாக்கப்பட வேண்டும். வெற்றிக்கு எதிரி தோல்வி. தோல்வியின் தோழர்களும் வெற்றிக்கு எதிரிதான். எனவே வெற்றிக்கு எதிரியான தோல்வியின் தோழர்களை நாமும் எதிரியாக்குவோம். ஏனெனில் எதிரியின் எதிரி நண்பனல்லவா. அப்போதுதான் நாமும் வெற்றிக்கு நண்பனாக முடியும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20


Bell Express vu Channel - 219

# சமூகப் போராளியின்

05 ஆம் பக்கத்தொடர்ச்சி

இதனை முறியடித்தார். கடந்த தேர்தலில் பிரிவினைவாதக் கட்சிகள் மிக மிக குறைவான ஆசனங்களையே பெற்றன. பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்தார். வெற்றி பெற்ற 103 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 75 வீதமானோர் பெண்களும், இளைஞர்களுமேயாகும்.

அடிப்படையிலே போர் குணாம்சம் கொண்ட இவர் தந்தையின் ஒழுக்க நெறிகளை பின்பற்றினார். ஆனால் தந்தை ஒரு வலது சாரி அரசியலை ஏற்றுக் கொண்டவர். இவர் அதற்கு மாறாக இடது சாரி அரசியலை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார். அடிமட்டத் தொண்டர்களுடன் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறினார். பல முதலாளிகளும் பெரிய நிறுவனங்களும் இவரை தங்களது எதிரியாகவே பார்த்தனர். அதுவே தனது சேவைக்கான வெற்றியாக கருதினார். மாநகர அரசியலின் போதும் சரி தேசிய அரசியலின் போதும் மக்களை சந்திப்பதை ஒரு போதும் தவிர்க்கவில்லை. இவரை எவரும் இலகுவாக அணுகி உரையாடமுடியும். இரு தடவைகள் இவர் பிரதமர்களை ஆட்சி செய்த பிரதமரல்லாத பிரதமராவார். போல் மாற்றினின் மற்றும் காப்பரின் சிறுபான்மை அரசுகளுக்கு ஆதரவு கொடுத்து அவர்களை தனது திட்டங்களுக்கு பணியச் செய்தார். இவ்விரு சிறுபான்மை அரசுகள் இவரின் கீழ் இயங்கின என்பதே உண்மை. காப்பர் சிறுபான்மை அரசு அமைத்த பொழுது வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக நம்பிகையில்லா தீர்மானம் கொண்டு வந்து அரசு கவிழும் நிலையில் இருந்தது. அப்போதைய லிபரல் கட்சித் தலைவர் டியோன் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு புதிய தலைவருக்காக காத்திருந்தார். லிபரல் கட்சி இவருடன் ஒத்துழைத்திருந்தால் காப்பரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டிருக்கும். லேற்றனும் பிரதமராகியிருக்கலாம். ஆனால் எந்த எதிர்பார்ப்புமின்றி மக்களுக்கான சேவைக்காக போராடினார். இறக்கப் போகும் சமயத்திலும் மக்களுக்காக இவர் செய்தி அனுப்பியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. தனது இறப்பின் இறுதி நிமிடம் வரை மக்களைப்பற்றியே சிந்தித்த தலைவரை காண்பது அரிது. இவர் Greg Farries அளித்த பேட்டியில் இருந்து முக்கியமான சில பகுதிகள் இவை.



***Greg Farries (MLW): A leader of a major political party in Canada is faced with numerous challenges, both within their party and from without. As leader of the NDP, what do you believe are some key qualities of good leadership?***

***Jack Layton:*** Good leaders blend pragmatism and principle without sacrificing either. They set a clear direction, lead by example and hold themselves accountable for results. For me, the mechanism of that leadership is team building. After all, that's the very idea of social democracy: citizens coming together, as a team with a vision, to get things done. That holds whether you're leading a caucus or a country. I continually re-learn three lessons about team-based leadership. First, it requires a great deal of active listening, constantly testing the team's direction against a breadth of ideas and experiences. Second, you need to balance listening with a relentless commitment to action, continually re-earning trust that process drives results. Finally, leadership itself is a team project—the best part of my job is supporting exceptional leaders at work within our caucus, our party and in the wider community.

***Greg Farries (MLW): Some might argue that western social democratic parties have gone through a significant evolution since the 1980s. As leader of the largest social democratic party in Canada, do you see a change in the policies and behaviour of left-wing parties? If so, what sorts of changes?***

***Jack Layton:*** Well, one clear change is the growing strength of those large corporate interests most threatened by social democracy. They're consolidating control over cultural and political resources. Their think-tanks have excelled at framing regressive policies in compelling moral terms. Their political parties are feeling freer to slide further right. All of this has some progressives wondering if they must shift to "the centre" to stay competitive. While I reject that idea, I won't pass sweeping judgement on so-called Third Way governments. Governing is a difficult local balancing of principles and pragmatics. In practice, many of these Third Wayers have been much better for ordinary people than available alternatives. Others have clearly left their principles behind. I can tell you that Canada's NDP is proudly and firmly grounded in the principles of social democracy. This party knows what it stands for. You will see no movement towards a mushy middle ground. The NDP already reflects the mainstream on most of the issues people use to describe what Canada stands for. Our challenge is to continue articulating those policies in terms of their underlying values—fairness, safety, compassion, community—values that most Canadians share.

யக் லேற்றனின் மறைவு பல அரிசியல் தலைவர்களை உருவாக்காது. பல சமூகப் போராளிகளை உருவாக்கும்.. இன்றைய பொருளாதாரத்தைப் பற்றி யக் லேற்றனின் கூற்று இது "They're about dimes and dollars. A few dimes to you in tax cuts, many, many dollars to banks and oil companies." இன்றைய உலக பொருளாதார நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இவரது இறப்பு ஈடு செய்ய முடியாது ஆனால் இவர் எடுத்து வைத்த அடிகள் நம்பிக்கையூட்டுகின்றன. "What we need to do is stand up for ourselves when we're unfairly treated." - Jack Layton

'அனைவருக்காகவும் கேட்கின்றேன்
யாரோ கேட்கிறார்கள்
நான் சொல்வதை
அவர்களுக்குத் தெரியாமல்
எனது பாடலின் பொருளானவர்களோ
பிறந்து கொண்டேயிருக்கின்றார்கள்
இவ்வுலகை நிரப்புகிறார்கள்'
பாப்லே நெருடா

# தலைவனுக்குச் செய்தியை அனுப்புகின்றாள்

தலைவி காதல் கடிதம் ஒன்றை எழுதவில்லை. அதனைச் செய்தியாக மறைக்குறிப்பாக உணர்த்திவருமாறு தனது தோழியிடம் பணிக்கின்றாள் தலைவி.

களவு வழியிலே மிக இரகசியமாகக் காதலனும் காதலியும் முதன் முதலிலே தனிமையிலே சந்திக்கின்றனர். இருவர் உள்ளத்தும் அணைகட்டுமடியாத இளமைத் துடிப்பு, காதல் வயப்பட்ட நிலை. ஒருவரை ஒருவர் கூடாது பிரிந்த செல்கின்றனர். பார்த்த பார்வையிலேயே தன்மை முழுமையாக மறந்துவிட்டாள். கண்டாள் கொண்டாள் காதல், தலைப்பட்டால் தலைவன் தாளே எனத் தலைவனின் நினைவாகவே வாழுகின்றாள் தலைவி.


எடுத்துக் காட்டாக ஒரு காதலி தலைமகன் மீது தான் வைத்துள்ள காதலைப் பற்றித் தனது தோழிக்கு எடுத்துக்கூறுவதாக அமைகின்றது கீழே வரும் பாடல்:

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவு இன்றே – சாரல்

**- த. சிவபாலு-**

கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் அழைக்கும் நாடனொடு நட்பே

பெற்றோர் திருமணத்திற்கு வரன் பார்க்கின்றார்கள். அதற்குத் தனது மகள் விரும்புவாளா இல்லையா என்பதனை அறிந்துகொள்வதில் அவர்களுக்கு மிகுந்த அக்கறை. மகளிடம் நேரடியாகக் கேட்டுவிட முடியாத ஒரு நிலை. அவர்கள் தங்கள் புதல்வியின் தோழிதான் இதற்கு ஏற்றவள் என நாடி அவள் மூலம் விருப்பத்தை அறிய முனைகின்றனர். தோழி பெற்றோரின் விருப்பத்தை எடுத்துரைக்கின்றாள். அதற்கு தலைமகள் தோழிக்கு எனக்குப் பொருத்த மானவர் எனது காதலனே. அவர் மீது நான் கொண்ட காதல் சாதாரணமானது அல்ல என மேலே உள்ள குறுந்தொகைப் பாடலிலே



குறிஞ்சிநிலத்துக்குரியவன். எனது தலைவன் மிக அழகான மலைச்சாரலின் கண்ணே நிறைந்த அழகைத்தருகின்ற மலர்வனத்தில் உள்ள மலர்களை நாடிவந்து அவற்றின் தேனைப் பெற்று மிகப் பெரிய அளவில் தேனைச் சேகரித்து வைக்கின்ற இனிமை நிறைந்த குறிஞ்சி நாட்டையுடைய அழகிய காளை எனது காதலன். அவன் மீது நான்கொண்ட காதலை எப்படிச் சொல்லுவது. இந்தப் பூமியிலும் பெரியது நான் அவர்மீது கொண்ட காதல். வானிலும் உயர்ந்தது. வற்றாத நீர். நிலையாகவுள்ள ஆழியிலும் ஆழமானது எனது காதல் நெஞ்சம். என்று தலைவி தனது தோழிக்கு தனது மனதைத் திறந்து காட்டுகின்றாள். காதலின் உண்மை நிலையை உணர்த்தும் நிலையினை இப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது. காதலை என்ன இதுதான் என்று எடுத்துக்காட்டவா முடியும். கண்ணால் பார்க்கமுடியாத மனத்தின் ஆழம், உயரம், அகலம் எதனையுமே அளந்து இவ்வளவுதான் என்று வரையறை செய்யப்படமுடியாது தூய்மையான காதல். பிரிந்து சென்ற தலைவனை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகும் நிலைமை. சங்க இலக்கியங்களில் அக்காலத்து மங்கையரின் சிறப்பம்சங்கள் விபரிக்கப்படுகின்றன.

தனது பிரிவு ஆற்றாது அல்லலுறும் தலைவி தோழிக்கு உணர்த்தியது பின்வரும் பாடல். அவள் எவ்வளவிற்கு தலைமகனைப் பிரிந்து துயரந்தாங்காது துடிக்கின்றாள் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது இந்தக் காட்சி.

நோம்எம் நெஞ்சே, நோம்என் நெஞ்சே,
இமைதீய்ப்பு அன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்தநம் காதலர்
அமைவுஇலர் ஆகுதல், நோம்என் நெஞ்சே.

என்ற ஆற்றாது அழுதுபுலம்பும் மனத்தினளாகத் தனது தோழிக்குக் கூறுகின்றாள் என்றால் அவளது உள்ளக் கிடக்கை எத்துணை தனது தலைவனை நினைந்து ஏங்குகின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. எனது மனம் எத்துணை வேதனைப்படுகின்றது என்பதனை எனது ஆருயிர்க் காதலர் அறிவாரோ? அவருக்கு எடுத்துரைப்பாயாக எனத் தோழியைப் பணிக்கின்றாள் தலைவி. காமநோய்க்கு ஆட்படாதோர் இவ்வுலகில் யாருளர். அண்டமா முனிவர்கள் அனைவருமே காதல் வயப்பட்டு காமத்தால் அழிந்தவர்கள். இந்திரன் கூடக் காமநோய்கு விதிவிலக்கல்ல என்றால் மனிதர்கள் எவ்விதம் விதி விலக்காவர். நெஞ்சம் வலிக்கின்றது, கண்ணீர் கொதிக்கின்றது, என்னைப்பிரிந்து சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை அவருக்கு என்மீது உள்ள அன்பு குறைந்துவிட்டது. அது ஏன் என்பதுதான் தெரியவில்லை. அதனால் வருந்துகின்றாள். உடல் நலிவடைகின்றது. உற்சாகம் இழந்து மூலையில் முடங்கி விட்டாள். பெற்றமனம் பித்தும் பிள்ளைமனம் கல்லும் என்பார்கள். ஆமாம் பெற்றவளால் தாங்கமுடியுமா? அவளின் தாய் குறிபார்ப்பவளிடம் போய் கேட்பதற்குச் செல்கின்றாள். தலைவிக்கோ தவிப்பு அந்த நிலையில் பின்வரும் பாடல் அமைகின்றது.

தலைவனிடம் சென்ற தோழி தலைவனுக்கு நும்பிரிவினால் தலைவி பெருந்துயரில் வாடுகின்றார். அவர் உண்பதில்லை, உறக்கமில்லை, உடல் நலிந்துவிட்டது என்றெல்லாம் எடுத்துரைத்தேன் என்று சொன்ன தோழியிடம் தலைவி பின்வருமாறு கூறுகின்றாள்.

அதுகொல், தோழி! காம நோயே?
வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை
உடைதிரைத் திவலை அரும்பும் தீம்நீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தென
பல்இதழ் உண்கண் பாஒல் லாவே.

இது காமநோய்தான் வேறொன்றும் இல்லை, நீ உரைத்தது சரிதான்.

# நினைவாற்றல் - MEMORY - 16

அன்பான வாசகர்களே!

உடலில் உள்ள ஏனைய உறுப்புக்களைப் போலவே மூளையும் நாம் உட்கொள்ளும் உணவுவகையால் பாதிக்கப்படுவதோ அல்லது முன்னேற்றமடைவதோ இயற்கை யானது. நினைவாற்றல் நமது மூளையுடன் தொடர்புள்ள செயற்பாடு என்ற வகையில் இது வலுவடைவதற்கு ஆரோக்கியமான உணவு அவசியம். எனவே எவ்வாறான உணவுகளைத் தேடி நாம் உண்ணுவதன் மூலம் எமது நினவாற்றலை அதிகரிக்கச் செய்யலாம் என்ற விடயத்தையும் முக்கியமானதெனக் கருதி இந்தத் தொடர் கட்டுரையில் ஆராய்ந்து கொண்டோம். நாம் ஆராய்ந்து கொண்ட பல தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகின்றேன்.

எமது கவனத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய இன்னுமோர் விடயம் உள்ளது. நமது உடலில் உள்ள பல உறுப்புக்களுக்கு இடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்பதே இவ்விடயம் ஆகும். இதன் காரணமாக எமது நினைவாற்றல் அல்லது மூளையின் ஆரோக்கியமான நிலைக்கு எமது ஏனைய உடல் உறுப்புக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும் உடலில் ஏற்படும் நோய்களின் பக்க விளைவாக நினைவாற்றல் பாதிக்கப்படலாம். ஏனைய நோய்களுக்கு எடுக்கப்படும் மருந்துகளால் கூட சில பக்க விளைவாக எமது நினைவாற்றல் பாதிக்கப்படலாம். அநேகமான நேரங்களில் இந்தப் பாதிப்பு தற்காலிகமானதாக இருக்கலாம். இந்த விடயங்களில் மிகவும் கவனம் தேவை என்பதை மட்டும் இங்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நேரங்களில் நாம் செய்யக்கூடிய நடவடிக்கை யாெ-தனில், இவ்விடயத்தில் கவனமாக இருப்பதோடு, தேவை ஏற்படின் காலம் தாழ்த்தாது வைத்தியரின் உதவியையும் நாடவேண்டும்.



நினைவாற்றலுக்கு உகந்ததாக நாம் குறிப்பிட்ட பல உணவுகள் எமது ஏனைய உடல் உறுப்புக்களுக்கும் ஆரோக்கியமான உணவுகளாக அமைந்து விடும். 'உங்கள் மருந்தே உங்களுக்கு உணவாகட்டும் உங்கள் உணவே உங்களுக்கு மருந்தா கட்டும்' ("Let your medicine be your food and your food be your medicine") என்ற மேலைத்தேய மருத்துவத்தின் தந்தை ஹிப்போக்கிரட்டிஸ் அவர்களின் கூற்றினை நினைவில் கொள்வோம். ஒருவரின் உடல் நலத்தில் உணவின் அளவும் அதன் தன்மையும் முக்கிய பங்கை எடுக்கின்றன என்ற விடயத்தை ஹிப்போக்கிரட்டிஸ் அவர்கள் அன்று அழகாக கூறி வைத்திருக்கின்றார். உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்களையும் தனித்தனியே பிரித்துப் பார்த்து வைத்தியம் செய்யாது முழு உடலையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும் என்ற கருத்தையும் சொன்னவர் ஹிப்போக்கிரட்டிஸ் ஆவார்.

தேவையான ஊட்டச்சத்து கிடைக்காது விட்டால் நோய்களை எதிர்க்கும் சக்தி குறைகின்றது. அளவுக்கு மேலாக உண்ணும்பொழுது பல நோய்கள் தோன்றுகின்றன. தேவைக்கு அதிகமாக மாச்சத்து (காபோவைதரேற்) சேரும்போது கொழுப்பாக மாற்றம் பெற்று உடலின் அடிவயிறு, பின்பக்கம் போன்ற இடங்களில்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# நினைவாற்றல்…

15ஆம் பக்கத்தொடர்ச்சி

சேமிக்கப்படுகின்றன. ஒருவரது வயதையும், அவர் உயரத்தையும் பொறுத்து அவர் உடல் நிறை எவ்வளவு வரை செல்ல முடியும் எனத் தீர்மானிக்கப்படுகின்றது. எமது வைத்தியர் ஒரு அட்டவணையில் பார்த்து இதைச் சரிபார்ப்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். நாம் உண்ணும் உணவின் அளவை அளவிடுவது கலோரி எனப்படும் வெப்ப சக்தியை அளவிடும் அலகு. நாம் செய்யும் வேலையின் தன்மைக்கேற்ப நாளொன்றுக்கு 1200 முதல் 1800 வரையான கலோரிகள் உணவு தேவை எனக் கூறப்படுகின்றது. உடல்நிறையைக் குறைக்க வேண்டும் என எண்ணுபவர்கள் நாள் ஒன்றுக்கு 500 கலோரிகள் உணவைக் குறைத்தால் ஒரு வாரத்தில் ஒரு இறாத்தல் நிறைக்குறைவு ஏற்படலாம். உடற்பயிற்சி மூலம் தேவைக்கதிகமான கலோரிகளை எரிக்க வேண்டும். பல்வேறு உணவுகளின் கலோரிப் பெறுமானத்தை அறிந்து வைத்திருத்தல் முக்கியமானது.

நினைவாற்றலை வலுவூட்டுவதில் மூளைக்கு ஆரோக்கியமான உணவுகளின் பங்கு பெரியது என்பதை நாம் எல்லோரும் அறிந்து கொண்டோம் அல்லது ஏற்கெனவே தெரிந்த விடயத்தை மேலும் ஒருமுறை அலசி ஆராய்ந்து கொண்டோம். அறிந்ததை நாளாந்த வாழ்வில் கைக்கொண்டு பலன் பெறுவோம் என்று கூறிக்கொண்டு எமது ஆய்வினை வேறுதிசையில் திசை திருப்புவோம் வாசகர்களே.

புதிய ஆய்வுகளில், நினைவாற்றலுக்கும் எமது பற்களின் ஆரோக்கியத்திற்கும் உள்ள தொடர்புகள் அதிகம் வலுப்பெற்று வருகின்றன. எமது பற்களைப் பிடுங்குவதால் நினைவாற்றலும் பாதிக்கப்படுகின்றது. பல் பிடுங்க வேண்டிய நிலைக்கு வந்ததும் பல்லைப் பிடுங்காமல் இருக்க முடியாது. முற்கூட்டியே நடவடிக்கை எடுத்துப் பற்களை ஆரோக்கியமாகப் பேணுவதன் மூலம் நினைவாற்றலையும் சீராக வைத்திருக்க முடியும். பற்களின் ஆரோக்கியக் குறைவிற்கும் அல்சீமேர்ஸ், இருதயநோய், பக்கவாதம், நீரிழிவு, சுவாசம் தொடர்பான நோய்களுக்கும் கூட தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒழுங்காகப் பற்களைப் பேணி வருதல், உரிய காலங்களில் தவறாது பல் வைத்தியரிடம் சென்று வருதல் போன்ற நடவடிக்கைகள் பற்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதோடு ஏனைய நோய்களுக்கும் பற்கள் காரணமாகி விடாது இருக்கும் அல்லவா. மேலும் நினைவாற்றலும் பற்களால் பாதிக்கப்படாது இருக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் பல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் எடுப்பது மிகவும் முக்கியம். சுவீடனில் உள்ள உமியாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இணைப்பேராசிரியர் ஜான் பேர்க்டால் ‘எமது பற்கள் நினைவாற்றலுக்கு மிகவும் முக்கியமானவையாகத் தெரிகின்றன’ என்று கூறியிருக்கின்றார். ஆனால் ஒருவர் ஒரு சில பற்களை இழக்கும் பொழுது எவ்வளவு தூரம் நினைவாற்றலைப் பாதிக்கும் என்ற கேள்விக்கு விடை கொடுக்கக் கூடிய நிலையில் ஆய்வுகள் விரிவாக அமைய வில்லை எனக் கருதப்படுகின்றது.

2009ம் ஆண்டு ‘நாளாந்த விஞ்ஞானம்’ (Science Daily) என்ற சஞ்சிகையில் வந்த கட்டுரையில் பற்களின் ஆரோக்கியத்திற்கு பச்சைத் தேனீர் (Green Tea) மிகவும் நல்லதெனக் கூறப்பட்டுள்ளது. ஜப்பானில் உள்ள குயிசுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கலாநிதி யொசிகிரோ சிமாசகி அவர்கள் 940 ஆண்களில் நடத்திய ஆய்வினை ஆதாரமாகக் கொண்டு இந்தக் குறிப்பு வெளியாகி இருந்தது.



பச்சைத் தேனீரில் உள்ள அன்றிஒக்சிடன்ற் கேற்சின் (Antioxidant Catechin) இதற்கான காரணி எனக் கூறப்படுகின்றது. மேலும் பச்சைத் தேனீரில் உள்ள புளோரைட் (Fluoride) பற்களின் ஆரோக்கியத்திற்குத் தேவையானது. சிறுவர்களுக்கும், வயது வந்தவர்களுக்கும் பச்சைத் தேனீர் பற்களின் ஆரோக்கியத்திற்கு உதவும் என நம்பலாம். வாய் நாற்றம் நீங்கவும் பச்சைத் தேனீர் உதவும். கறுப்புத் தேனீராலும் (Black Tea) குறிப்பிட்டளவு பலாபலன்கள் உண்டு. தேனீர் சூடாக அல்லது குளிர்த் தேனீராக (Iced tea) பருகலாம் எனக் கூறப்படுகின்றது. எனவே காலநிலை குளிர்காலமோ அல்லது கோடைகாலமோ என்று பாராது பச்சைத் தேனீரைப் பருகிப் பலன் பெறுவோம்.

அமிலத்தன்மையுள்ள உணவுப் பொருட்களை அதிகம் உண்ணும் பொழுது பற்கள் தேய்வு அடைவதைத் தவிர்ப்பதற்கு விதைகள் சீஸ் (Cheese); போன்ற உணவுகளைச் சேர்த்து உண்ணுவதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். வாயில் உள்ள அமிலத்தன்மையைக் குறைப்பதற்கு பேக்கிங் சோடாவை (Baking powder) நீரில் கரைத்து வாயில் விட்டுக் கழுவிக் கொள்ளலாம். சோடியம் புளோரைட் கொண்ட பற்பசைகளைப் பாவிப்பதன் மூலம் எமது பற்களில் உள்ள எனாமல் (Enamel) பாதுகாக்கப் படுவது மிகவும் முக்கியம். எல்லாவற்றிற்கும் மேலாக பல் வைத்தியரின் ஆலோசனைகளைக் கேட்டு அதற்கேற்ப பற்களின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துவது நினைவாற்றலைச் சீராக வைத்திருக்க உதவும் என்ற கருத்தை உங்கள் கவனத்தில் கொண்டு வருவதற்கு விரும்புகின்றேன்.

உடல் உறுப்புக்கள் பலவும் வெவ்வேறு தொழிற்பாடுகளைச் செய்து கொண்டாலும் அவற்றிற்கிடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. பல சந்தர்பங்களில் அவை இணைந்து செயற்படுகின்றன. இவ்விதத்தில் பற்களுக்கும் நினைவாற்றலுக்கும் உள்ள தொடர்பு சற்று ஆச்சரியத்தைக் கொடுத்தாலும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வாறான விடயங்களை அறிந்து நினைவாற்றல் வலுவினைக் கூட்ட நாம் எடுக்கும் நடவடிக்கைகளை மேலும் விரிவு படுத்துவோம். மேலும் பல தகவல்களுடன் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்…..

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
SECOND CAREER
DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்
QUICK BOOKS, SIMPLY ACCOUNTING & ACCPAC
Classes By Experienced Instructors
இலவச ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

YARL WINDOW
BLINDS & DRAPERY

WE ARE SPECIALIZED
IN CUSTOM MADE
Drapery & Blinds
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience
to make your home
more beautiful
CALL: N.SELVAM

YOGA - MEDITATION CLASSESS
யோகா, தியான வகுப்பு
Scarborough இல் யோகா தியான வகுப்பு
பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
416.273.2200


# உட்கட்டாசனம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய



யோகா என்பது ஒரு யோகக் கலைதான். யோகம் என்பது ஒரு மனிதனின் ஆரோக்கியம்தான். இதனால்தான் முன்னோர்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றார்கள். மருந்தில்லா மருத்துவம் தான் யோகா. ஒரு மனிதன் முறையாக யோகா, தியானம் செய்து வந்தால் அவன் உடலும், உள்ளமும் சீராகும். உடல் உறுப்புக்கள் அனைத்தும் பலம் பெறும். ஒரு சிலர் ஏதோ நேரமின்றியிருப்பது போல் சொல்வார்கள். உலகில் உள்ள அனைவருக்கும் 24 மணி நேரம் தான் உள்ளது. இதில் நமக்கு மட்டும் நேரமில்லை என சிலர் சொல்வது அபத்தம். உண்மை என்னவென்றால், சோம்பேறித்தனம் தான். சோம்பேறித்தனமே நோயின் வழிகாட்டி.

குருவின் ஆலோசனை பெற்று யோகாசனம் செய்வது சாலச் சிறந்தது.

### உட்கட்டாசனம்

இவ் ஆசனத்தை சிறியவர் முதல் பெரியவர்வரை அனைவரும் செய்யலாம். தரையில் விரிப்பை விரித்து அதன் மேல் நின்று கால்களை 1 அடி அகலம் வைத்துக்கொள்ள வேண்டும். நேராக நிமிர்ந்து நிற்க வேண்டும். கைகள் இரண்டையும் மார்புப் பகுதிக்கு நேராக கொண்டு வரவேண்டும். பின்னர் கைகளை அப்படியே மேலே தூக்க வேண்டும். அப்போது கால் மூட்டுகளை வளைத்து பாதி உட்கார்ந்த நிலைக்கு வர வேண்டும். இப்போது கைகள் இரண்டும் காதுகளைத் தொட்டபடி நீண்டு இருக்க வேண்டும். மூட்டுவலி அதிகமானால் சிறிது ஓய்வெடுக்கலாம். இவ் ஆசனத்தை 3 நிமிடங்களுக்கு மேல் செய்ய கூடாது. உடல் நெகிழ்ந்த நிலையில் இருக்க வேண்டும். மூச்சை நன்றாக உள்ளிழுத்து வெளிவிட வேண்டும்.

இந்த ஆசனம் மற்ற ஆசனங்கள் செய்யும் முன் செய்வது நல்லது. ஏனென்றால் மற்ற ஆசனங்கள் செய்வதற்கு ஏதுவாக உடல் நிலை மாறிவிடும்.

### பயன்கள்

நாடி நரம்புகளுக்கு இளக்கம் கொடுத்து புத்துணர்வு ஏற்படுத்தும். அடிவயிறு, தொடைப்பகுதிகள் இளகுவதால் அதன் தசைப்பகுதிகளை வலுவடையச் செய்கிறது.

இடுப்பு வலியைப் போக்கி இடுப்பை பலப்படுத்தும். முதுகுத் தண்டு வலி நீங்கும்.

கால் மூட்டில் நீர் கோர்த்தல், மூட்டில் வறட்சி போன்றவற்றைப் போக்கும்.

தினந்தோறும் 5 மைல் நடந்தால் கிடைக்கும் பலன் இந்த ஆசனத்தில் கிடைக்கும்.

மூட்டுகளில் அறுவை சிகிச்சை செய்தவர்கள் இவ் ஆசனம் செய்வதைத் தவிர்க்கவும்.



ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

Diploma in Yoga Therapy (India)

**416.289.2033** after 7:00pm


# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

***www.mahahindu.org***

All kind of community, religious and cultural services are available in Tamil, Hindi, Punjabi and English in Scarbrough, Toronot, Brampton and Mississauga areas.

புதிதாகக்கனடாவுக்கு குடியேறியவர்களுக்கும் இருக்க இருப்பிட வசதியற்றவர்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இலவச அத்தியாவசிய உபகரணங்களும் வழங்கப்படும்.

Those who are having problem in getting social assistance, ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.

வேலை செய்யமுடியாதவர்களுக்கு ஆயுட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும் உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்.

Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.

வாகன சம்மந்தமான பிரச்சனைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒடுங்குசெய்து கொடுக்கப்படும்

***We are with you in all your need and for all kind of services of our community***

தொடர்புகட்கு:

***Shakthi: 416 992 7882***

4 Vange Cre. Etobicoke, ON, M9V 3N7

# "கிராமத்துப் பெண்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன்"

## நேர்காணல்: சரண்யா பொன்வண்ணன்

சென்ற இதழ் தொடர்ச்சி

'ராம்' படத்தில் ஆட்டிசத்தில் பாதிக்கப்பட்டவனின் அம்மாவாகவும், 'தென்மேற்கு பருவகாற்று' படத்தில் மகனுக்காக எதையும் செய்யத்தயாராக இருக்கும் கிராமத்துத் தாயாகவும் நடித்திருந்தீர்கள். இரண்டிலும் மகன்களை தனியாக உருவாக்கும் பெரிய பொறுப்பை ஏற்றிருந்தீர்கள். இதற்கு நேர் மாறாக 'களவாணி', 'எம் மகன்' படங்களில் உங்கள் கதாபாத்திரங்கள் வெள்ளந்தியான அம்மாக்களைப் போல் தோன்றின. உண்மையில் குடும்பம், கணவன் சார்ந்த கஷ்டங்களை, நெருக்கடிகளை நடுத்தர வர்க்க தாய்மார்கள் எப்படி சகித்துக் கொள்கிறார்கள் அதிலிருந்து எப்படி தப்பிக்கிறார்கள் என்பதை சிரிக்கச் சிரிக்க நகைச்சுவையாக கூறின அந்த கதாபாத்திரங்கள். "அவனோட கிரகம் அப்படி. நம்ம ஜோசியர் சொல்லியிருக் காருங்க. இந்த ஆடி போய் ஆவணி வந்தா, அவன் டாப்பா வருவான்னு" என்று 'களவாணி'யில் வருவது போன்ற வசனங்களையும் 'எம் மகன்' இல், எம்டனுக்கு (நாசர்) பயந்து குன்றக்குடி கோவிலில் அங்கப் பிரதட்சினம் செய்வது போன்ற காட்சிகளையும் அவ்வளவு லேசில் மறக்க முடியாது. இதுவரை சொன்னக் கதாபாத்திரங்களில் இருந்து நேர்மாறானது 'தென்மேற்குப் பருவக்காற்று' பாத்திரம். தேனி பக்கம் இருக்கும் கணவனை இழந்த தாய்மார்கள், மகனை சரியாக வளர்க்கவில்லை என்றால் ஊர் தவறாகப் பேசிவிடும் என்பதால், வைராக்கியத்துடன் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு செய்வார்கள். அதையே தென்மேற்கு பருவக்காற்று வீராயி கதாபாத்திரம் பிரதி-



பலித்தது. - இப்படி அம்மாக்களின் பல பரிமாணங்களை வெளிக்காட்டி இருக்கிறீர்கள். எப்படி இது சாத்தியமானது?

"கொஞ்சம் பெரிய கேள்வி. ஆனால், நல்ல கேள்வி. உங்களுக்கு மட்டுமல்ல, ரசிகர்களுக்கும் என் மகள்களுக்கும் பிடித்த கதாபாத்திரங்கள் இவை. சரி உங்கள் கேள்விக்கு வருகிறேன். 'எனக்கு சினிமா மீது வெறி சினிமா இல்லாவிட்டால் நான் இல்லை அதனால்தான் இவையெல்லாம் சாத்தியமாகின' என்றெல்லாம் நான் சொல்லமாட்டேன். எந்த வேலையை எடுத்தாலும் தீவிரமாகச் செய்வதே என் பழக்கம். அது 'எம்பிராய்டரி' போடுவது, வீட்டை பராமரிப்பது, குழந்தை வளர்ப்பது, சினிமாவில் நடிப்பது என எதுவென்றாலும் எனக்கு ஒன்றுதான். எல்லாவற்றிலும் ஒரு கச்சிதம் எனக்கு ரொம்ப முக்கியம். மற்ற விஷயங்களை கச்சிதமாகச் செய்வதற்காகவே இடையில் திரையுலகை விட்டு விலகி இருந்தேன். அப்படியொரு தீவிரத்தோடுதான் நடிப்பையும் நான் அணுகுகிறேன்.

உண்மையில் இந்த கதாபாத்திரங்களை ஏற்று நடித்தபோது இயக்குநர்களிடம் ஆயிரம் கேள்விகள் கேட்டேன். இது சரியாக இருக்குமா, ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்டுக்கொண்டே இருந்தேன். ஒவ்வொரு ஷாட் முடிந்தபிறகும், ஸ்பாட்டில் உள்ள எல்லோரும் திருப்தியடைந்தாலும் நான் திருப்தி அடையமாட்டேன். உதவி இயக்குநர்களை நண்பர்களாக்கி, நன்றாக இருந்ததா என்று கேட்பேன். 'பெர்'.'பெக்ஷன்தான்' எனக்கு முக்கியம்."

ஆனால், நீங்கள் நகரத்திலேயே பிறந்து வளர்ந்தவர். இதில் பெரும்பாலான பாத்திரங்கள் கிராமத்து அம்மாவாக வருபவை. அதுவும் தேசிய விருது பெற்றுத் தந்த 'தென்மேற்கு பருவக்காற்று' அம்மா பக்கா கிராமத்து அம்மா. அதனால்தான் கேட்கிறோம் அந்த கிராமத்துத் தாய் வேடத்தில் நடித்தது எப்படி?

"உண்மைதான் எனக்கு கிராமம் என்றால் என்னவென்று தெரியாது. எனவே, கிராமங்களுக்குச் செல்லும்போது அந்த மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களைக் கவனிப்பேன். பெரும்பாலான படங்கள் கிராமங்களிலேயே படம் பிடிக்கப்படுவதால் அந்தச் சூழலைப் புரிந்துகொள்வதற்கும், கிராமத்தவர்களுடன் பழகுவதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இயக்குநர்கள் சொல்வதை ஒருமுறைக்கு பலமுறை கவனமாகக் கேட்பேன். கதையையும் கதாபாத்திரத்தையும் உள்வாங்கிக் கொள்வேன். சம்பந்தப்பட்ட இடங்கள், கிராம பெண்களின் உடல்மொழி, செயல்பாடுகள், பழக்கவழக்கங்களை நன்றாக தெரிந்துகொண்ட பிறகே நடிக்கப் போவேன். தனிப்பட்ட முறையில் நடிப்பதில் ஆர்வமாக இருப்பதாலும் எளிதாக கிராமிய முகத்தை காட்டமுடிகிறது."

கிராமத்து பெண்களைப் பற்றிய உங்கள் அவதானிப்பு என்ன?

"நான் அவர்களைப் பார்த்து, பல விஷயங்களில் ஆச்சரியப்படுகிறேன். கிராமப் புறங்களில் வறுமையான சூழலில் வாழும் பெண்கள் மிகவும் துணிச்சலானவர்களாக இருக்கிறார்கள். மனதில் பட்டதை வெட்டென பேசிவிடுகிறார்கள். தயக்கமே இருப்பதில்லை. ஒரு சிறு வட்டத்தில் வாழ்கிறார்கள் வயல்வெளிகளில் வெயிலுக்கும் மழைக்கும் அஞ்சாமல் கஷ்டப்படுகிறார்கள் சாப்பிடுவதற்குக் கூட நேரமின்றி தவிக்கிறார்கள ஆண்களைவிட கடினமாக உழைக்கிறார்கள். ஆனால், கிடைக்கிற ஊதியமோ மிகவும் குறைவாக இருக்கிறது. கூடுதலாக அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அதனால்தான் விவசாயமே அழிந்து கொண்டிருக்கிறதோ என்றும் கவலை ஏற்படுகிறது. நகரில் மூளை உழைப்பு அதிகம். ஆனாலும், அவர்களின் உடலுழைப்பு மலைப்பை ஏற்படுத்துகிறது. கிராமத்துப் பெண்களை குடும்பத் தலைவன் என்று சொல்லலாம். குடும்பத்தின் எல்லா விஷயங்களையும் அவர்களே எதிர்கொள்கிறார்கள். அவர்களது மன தைரியம் நம்மிடம் இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது. ஆனாலும், அவர்களைப் பார்த்தால் தெம்பாக இருக்கிறது. அவர்களை நினைத்து பெருமைப்படுகிறேன்."

கதாநாயகியாக நடித்துவிட்டு திருமணம், குடும்பம் என்று ஒதுங்கிய நீங்கள், மீண்டும் எப்படி சினிமாவுக்கு வந்தீர்கள்?

"திரையுலகில் இரண்டாவது இன்னிங்கஸை தொடங்க வலியுறுத்தியது, எனது கணவர் தான். மின்பிம்பங்கள் தயாரித்த கே.பாலசந்தரின் 'வீட்டுக்கு வீடு லூட்டி' சீரியலில் நடிக்க அழைத்தார்கள். நீங்க கண்டிப்பாக நடித்தே ஆகவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொண்டார், பாலசந்தரின் மருமகளான கீதா கைலாசம். எனக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று நடித்தேன். பிறகுதான் சினிமா வாய்ப்புகள் வந்தன. 'அலை'தான் முதல் படம். தெளிவான பார்வையும் திட்டமிடலும் இருக்கும்போது, ஒவ்வொருவருடைய இரண்டாவது இன்னிங்க்ஸிலும் வெற்றிக்கு உத்தரவாதம் இருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறது எனக்குக் கிடைத்துள்ள தேசிய விருது. காதல், கற்பனைக் கதைகளின் நாயகியாக நடித்த காலங்களைவிட இந்த செகண்ட் இன்னிங்ஸ் எனக்கு பொற்காலம்."

**சந்திப்பு சிவதானு**

'நாயகன்' சரண்யா, 'தென்மேற்குப் பருவக்காற்று' சரண்யா - இருவருக்கும் என்ன வித்தியாசம்?

"கதாநாயகியாக நடித்த போது பெரிய அளவுக்கு நடிப்பிற்கான சாத்தியங்கள் இல்லை. ஏதோ நடித்துக் கொண்டிருந்தேன். மற்றபடி பெருமைப்பட ஒன்றுமில்லை. ஆனால், என்னுடைய செகண்ட் இன்னிங்ஸ் தான் மிகச் சிறப்பாக இருக்கிறது. நீங்களே பார்க்கிறீர்கள்தானே நல்ல கதையம்சம் உள்ள படங்களில் நடிக்கிறேன். எனக்கு முக்கியத்துவம் உள்ள கதாபாத்திரங்களாக அமைகின்றன. ஒவ்வொரு படமும் மக்களால் விரும்பப்படும் படங்களாக வெற்றி பெற்றும் வருகின்றன. என் நடிப்பை பலரும் பாராட்டுகிறார்கள். இது வெற்றிகரமான பயணம்தான்."

நடிப்பில் இது இதை செய்யலாம் இது இதைச் செய்யக்கூடாது என உங்களுக் கென்று எதாவது கொள்கை இருக்கிறதா?

"நாயகன்' படத்தில் கமலின் ஜோடியாக மணிரத்னத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட போதே திரையில் வரம்புமீறிவிடக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். இதில் இன்று வரை பிடிவாதமாக இருக்கிறேன். நான் நடித்த எந்தப் படமும் வன்முறையை தீர்வாகச் சொன்னதில்லை. மேலும், நான் ஒப்புக்கொள்ளும் பெரும்பாலான படங்கள் பெண்கள், குழந்தைகள் மீது அக்கறை கொண்டவையாக இருக்கின்றன என்பது நீங்கள் கவனித்து பார்த்தால் தெரியும்."

ஆசை?

"மகேந்திரனின் 'உதிரிப்பூகள்' அஸ்வினி கதாபாத்திரத்தைப் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அம்மா கதாபாத்திரத்தை ஏற்று நடிக்க வேண்டும்."

# வாழ்க்கை...


04ஆம் பக்கத்தொடர்ச்சி


களுக்குள்தான் இருக்கும். இன்று கணினி விஞ்ஞானிகளின் கனவே, மனித மூளைக்குச் சமமாக ஒரு கணினியை உருவாக்குவதுதான்!

ஜப்பானிலிருக்கும் ஹொண்டா நிறுவனம் பல ரோபோக்களை உருவாக்கி வருகிறது. 2050ல் இந்த ரோபோ அணி உலகக் கால்பந்து கோப்பைக்கான போட்டியில் பங்கேற்று கோப்பையை வெல்லும் என்கிறார்கள். இது இப்போது கேலிக்குரிய கனவாகத் தோன்றலாம். ஆனால் மனித வாழ்க்கையின் இயங்கு முறைகளை ஆழமாக அறிந்து கொண்டால், இதுவும் சாத்தியம்தான். எனவே யோகா என்பது கூட வாழ்க்கையை ஆழமாக அறிந்து கொள்வதன் இன்னொரு பரிமாணம்தான். வாழ்க்கையின் இயங்கு முறைகளை ஆழமாக உங்கள் அனுபவத்தில் உணர உணர புலன்களுக்கு உட்பட்ட குறுகிய எல்லைகளைக் கடந்து உங்கள் புரிதல் விரிவடைகிறது.

உண்மையில் உறக்கத்தின்போது என்ன நடக்கிறது?

நீங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது இந்த உலகம் உங்கள் அனுபவத்திலிருந்து காணாமல் போகிறது. நீங்களும் காணாமல் போகிறீர்கள். உண்மையில் உறக்கத்தின் போது என்ன நடக்கிறது? உங்கள் உடலில் உயிர் இருக்கிறது, இருதயம் துடிக்கிறது, உங்களைச் சுற்றி உலகம் இயல்பாக இயங்குகிறது. ஆனால் உங்கள் ஐம்புலன்கள் அந்த நேரத்தில் இயங்காததால் வாழ்க்கை குறித்த அனுபவம் உங்களுக்கு இல்லாமல் போகிறது. உங்கள் ஐம்புலன்கள், அடிப்படையில் உங்கள் பிழைப்பு நடக்கும் விதமாகத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. உலகிலுள்ள பிற உயிரினங்களுக்கு அதே ஐம்புலன்கள் வேறு விதமாக செயல்படுகின்றன. உங்களுக்கு வெளிச்சமாகத் தோன்றுவது சிலவற்றிற்கு இருட்டாக இருக்கிறது. நீங்கள் இரைச்சல் என்று நினைப்பது சிலவற்றுக்கு அமைதியாகவும், உங்களுக்கு அமைதியாகத் தோன்றுவது சிலவற்றுக்கு இரைச்சலாகவும் இருக்கிறது. எனவே வெறும் பிழைப்பைக் கடந்து ஏதேனும் ஒன்றை நீங்கள் தேடுவீர்களேயானால் இந்த ஐம்புலன்கள் உங்களுக்கு போதாது. கடவுளை உங்கள் சொந்த அனுபவங்கள் மூலம்தான் உணர முடியும்!


AVANI
AT METROGATE
TRIDEL®
BUILT FOR LIFE
Coming Soon
to Kennedy & 401
Register now at
tridel.com or call
416.293.5535
*Prices and specifications are subject to change without notice. Illustrations are artist's concept only. Tridel®, Tridel Built for Life®,
Tridel Built Green. Built for Life.® are registered trademarks of Tridel and used under license. ©Tridel 2011. All rights reserved.
E.&O.E. July 2011.
TRIDEL BUILT GREEN
tridel.com


AVANI
AT METROGATE
TRIDEL®
BUILT FOR LIFE
Coming Soon
to Kennedy & 401
For Your Early
Booking or
Information
Please Call
416.321.6969
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc.,
Brokerage*
5215 Finch Avenue E. # 203, Toronto, ON M1S 0C2
*Independently owned and operated.

# உங்களுக்கு மிகவும் விருப்பமான தமிழ் அலைவரிசைகளைப் பெறுவதன் மூலம் DIGITAL BASIC TV

மாதாந்தம் **$21.29**[1]

/2 வருட ஒப்பந்தத்துடன்
மாதாந்த கட்டணங்கள் மற்றும் சாதாரண
டிஜிட்டல் பெட்டி வாடகை உட்பட

இதில் ஏதாவது ஒரு அலைவரிசையை அல்லது பொதியைப் நீங்கள் ஓடர் செய்யும்போது **Digital Basic TV** ஐ மலிவுக் கட்டணத்தில் பெறுங்கள். அத்துடன் உங்களுக்கு மிகவும் விருப்பமான தாயக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து மகிழ்ச்சி அடையுங்கள்.

| VIJAY | SUN TV | tvi | Tamil One | JAYA TV | VIJAY, SUN TV, tvi, Tamil One |
|---|---|---|---|---|---|
| $10.10/மாதாந்தம் | $15.17/மாதாந்தம் | $19.74/மாதாந்தம் | $15.17/மாதாந்தம் | $15.17/மாதாந்தம் | $30.45/மாதாந்தம் (மிகச் சிறந்த பெறுமதி) |

**Digital Basic TV** இல் நீங்கள் பெறுவது

- **170** இற்கும் அதிகமான டிஜிட்டல் அலைவரிசைகள்
- **Rogers On Demand** இனைப் பெறும் வசதி (அலைவரிசை **100**) அத்துடன் **Rogers On Demand Online**[2] **(rogersondemand.com)**
- வருடம் முழுவதும் பல்கலாச்சார அலைவரிசைகளின் முன்னோட்டம்

TV புதிய வாடிக்கையாளர்களுக்கான இந்த சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே!

## இன்றே **Rogers** இற்கு மாறுங்கள்.
## சேமியுங்கள். அழையுங்கள் **1 877 490-2169**.




Offers available to new Digital TV customers for a limited time and subject to change without notice. Packaging and availability may vary by region. **1** Includes monthly Digital Service Fee of $2.99 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee (LPIF) of 1.5% of the recurring TV monthly service fee and standard digital box rental fee. Taxes apply. Regular monthly rates apply after promotional period. 2-year term required. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel selected. Monthly service fee shown excludes subscription rate of multicultural channel(s). **2** Charges apply to some On Demand programming content. Rogers On Demand Online only available in Canada with an internet connection. ©2011

# திரைவிமர்சனம் - காஞ்சனா



**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

‘முனி’ முதல் பாகத்தின் தொடர்ச்சியாக, ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் வந்திருக்கும் படம். சிறுநீர் கழிக்கப் போகக்கூட அம்மாவை துணைக்குக் கூப்பிடும் அளவுக்கு பயந்தாங்கொள்ளி லாரன்ஸ். ஒரு பேய் அதன் வஞ்சம் தீர்க்க வேண்டிய கதை. லாரன்ஸின் உடம்பில் புகுந்து பழிவாங்கும் படலத்தை நிறைவேற்றும் பேய்... ‘முனி’ பார்த்த மாதிரியே இருக்கே என யோசிக்கிறீர்களா? உண்மைதான். அதே கதைதான். இம்முறை வேறொரு பேய் வேறொரு பிளாஷ்பேக், அவ்ளோதான் வித்தியாசம். லாரன்ஸ் ஒரு வீரன். கருப்பாக இருந்தாலும் வசீகரமானவர். அண்ணன், அண்ணி, குழந்தைகள், அம்மாவோடு ஒரு பெரிய பங்களாவில் இருக்கிறார். பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் கவர்கிறார். ஆனால், இவரிடம் ஒரு பிரச்சினை இருக்கிறது. சாயங்காலமானால், இருட்டிவிட்டதும் கொலைநடுங்குகிற அளவு பயப்படுகிறார். பேய் பயம். ஒரு நாள் இவர் நண்பர்களுடன் வழக்கமாய் கிரிக்கெட் விளையாடும் மைதானத்தில் ஏதோ கட்டடம் கட்ட ஆரம்பிக்க, வேறு ஒரு புதிய மைதானத்தைத் தேடி அங்கு போய் விளையாட ஆரம்பிக்கிறார்கள். அங்கே ஸ்டெம்ப் அடிக்கும் இடத்தில் பேய் இருக்கிறது. அதன் ரத்தம் ஸ்ட்ம்பில் படுகிறது. அந்த ஸ்டம்பை வீட்டுக்கு எடுத்து வரும்போது, அதோடு சேர்ந்து வீட்டிற்குள் பேய் வந்துவிடுகிறது.

மந்திரவாதிகள் மூலம் பேயை விரட்ட முயற்சிக்கின்றனர். ஆனால், அது வெளியேற மறுத்து லாரன்ஸ் உடலில் புகுந்து விடுகிறது. அந்தப் பேய் காஞ்சனா என்ற அரவாணி என தெரிய வருகிறது. அதன் பிளாஷ்பேக் கதை சொல்கிறது. எம்.எல்.ஏ. அடியாட்கள் மூலம் தனது மனையை பிடுங்கி கொண்டதாகவும், தம்பி - தந்தையுடன் தன்னையும் கொன்று அதே நிலத்தில் புதைத்துவிட்டதாகவும் சொல்கிறது. லாரன்ஸ் உடம்பில் இருந்துகொண்டு, கொலையாளிகள் ஒவ்வொருத்தரையும் பழி வாங்குகிறது. ஒரு கட்டத்தில் பெரிய மந்திரவாதியை வைத்து லாரன்ஸ் உடலில் இருக்கும் பேயை வெளியேற்றி விடுகின்றனர். பேயின் பழிவாங்கும் பட்டியலில் இன்னும் ஒருவர் மட்டும் பாக்கி. அவர் எம்.எல்.ஏ. அவரையும் பழிவாங்கி விட்டால் அது வந்த நோக்கம் நிறைவேறிவிடும். எனவே, அவரைக் கொன்றுவிட்டு போய்விடுகிறேன். அதுவரை லாரன்ஸ் உடலில் இருக்க அனுமதியுங்கள் என கெஞ்சுகிறது. மந்திரவாதியும் குடும்பத்தினரும் மறுக்கின்றனர். ஆவியை செம்பில் அடைத்து கடலுக்குள் வீசுகின்றனர்.

லாரன்ஸ் மூலம் எம்.எல்.ஏ.வை காஞ்சனா ஆவி கொன்றதா என்பதுதான் மீதி. காலி மைதானத்தை கடக்கும்போது சிறுமியிடம் அங்கே பார்க்காதே என தாய் தடுப்பது இளம் பெண்ணின் சிவப்பு சேலை அங்கு விழுந்ததும் பூமிக்குள் இழுக்கப்படுவது என ஆரம்பமே குலை நடுக்கம். இடைவேளைக்கு முந்தைய பகுதி முழுவதும் தேவையில்லாத சண்டைக் காட்சிகள், குத்து பாட்டுகள். ஆனாலும், காஞ்சனா பேய் வந்ததும் கொஞ்சம் சுறுசுறுப்பாகிறது. கோவை சரளாவை நகைச்சுவைக்கு பயன்படுத்தியதில் ஏறிய சுறுசுறுப்பு இறங்கி விடுகிறது. ஆனால், படத்தின் கொஞ்சநஞ்ச பலமே கோவை சரளாத்தான். காட்சிக்கு காட்சி, தியேட்டரையே கலகலக்க வைக்கிறார். சும்மா புகுந்து விளையாடுகிறார். நடிப்பும் அட்டகாசம். இவரது மருமகளாக வரும் தேவதர்ஷினியும் பரவாயில்லை. கோவை சரளாவும் இவரும் சேர்ந்து அடிக்கும் லூட்டிகளைப் பார்த்தால், படத்தின் உண்மையான நாயகன் - நாயகிகள் இவர்கள் இருவர்தான். குறிப்பாக, கோவை சரளாவும் தேவதர்ஷினியும், வீட்டில் பேய் இருக்கிறதா என சோதிக்கும் மூன்று இடங்களும் த்ரிலுக்கு திரில், காமெடிக்கு காமெடி. கணவனுக்கு பயந்து நடுங்கும் காட்சியில் தேவதர்ஷினி நடிப்பு அற்புதம்.

இடைவேளைக்கு பிறகு வரும் காட்சிகளில் குழந்தைகள் கூட பயப்படாது. ப்ளாஷ்பேக் காட்சிகளும் படு அபத்தம். எல்லா வில்லன்களையும் கொன்ற காஞ்சனா, கடைசியில் எம்.எல்.ஏ.வை மட்டும் கோவிலுக்குள் வைத்து, வெளியே வைத்து எல்லாம் விளையாடி கொல்வது படு இழுவை. அரவாணி காஞ்சனாவாக ப்ளாஷ்பேக் கதையில் சரத்குமார் வருகிறார். போலி மந்திரவாதிகள் மனோபாலா, மயில்சாமி சிரிக்க வைக்கின்றனர். இயக்கம் ராகவா லாரன்ஸ். அடிப்படையில் ஒரு நடனக்காரர் என்பதால், நன்றாக நடனம் ஆடுகிறார். ரஜினியை ஞாபகப்படுத்துகிறார். திகில், கலகலப்பு காட்சிகளை நேர்த்தியாக செதுக்கியுள்ளார். சிகப்பு லஷ்மி ராயுடன் சல்லாபிக்கிறார். கதைக்காக பெரிதாக மெனக்கடவில்லை. முனி முதல் பகுதி கதைதான். திரைக்கதையிலாவது அதை சரி செய்திருக்கலாம். அதிலும் ஒன்றும் மெனக்கெடவில்லை. இரட்டை அர்த்தத்தில் அம்மா, அண்ணன், அண்ணி, என்று மொத்த குடும்பமே பேசிக் கொள்கிறது. அம்மா பக்கா கோவை பாசை பேசுகிறார். அண்ணி அய்யராத்து பாஷை பேசி, சிக்கன் சமைத்து போடுகிறார். அண்ணன் சாதாரண தமிழ் பேசுகிறார்.



காஞ்சனா - பார்வையாளர்களையும் பழி கேட்கும் பேய்!

# இங்கிலாந்திடம்..

06 ஆம் பக்கம் தொடர்ச்சி

திங்கட்கிழமை தொடங்குகிறது. தரவரிசையில் 63-வது இடத்தில் இருக்கும் இந்திய வீராங்கனை சானியா மிர்சா, தனது முதல் சுற்றில் 24-வது இடத்தில் இருக்கும் இஸ்ரேலின் முன்னணி வீராங்கனையான சாஹர் பீரை சந்திக்கிறார். ஒற்றையர் பிரிவில் சமீப காலங்களாக தடுமாற்றம் கண்டு வரும் சானியாவுக்கு, சாஹர் பீர் கடும் சவாலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விம்பிள்டன் போட்டிக்கு பிறகு தான் விளையாடிய 5 போட்டிகளில் 3-ல் முதல் சுற்றிலேயே வெளியேறினார் சானியா. இருப்பினும் இதுவரை சானியா-சாஹர் பீர் இடையில் நடைபெற்ற 5 போட்டிகளில் 4-ல் சனியா வெற்றி கண்டுள்ளார். இந்தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி ஜோடி அமெரிக்க ஓபனில் பட்டம் வெல்லுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சமீபத்தில் நடைபெற்ற சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற உற்சாகத்தில் இந்த ஜோடி களமிறங்குகிறது. கருத்து வேறுபாடு காரணமாக சில ஆண்டுகள் பிரிந்திருந்த இந்த ஜோடி, கடந்த ஜனவரியில் மீண்டும் இணைந்தது. இதன்பிறகு சென்னையில் நடைபெற்ற சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் சிறப்பாக விளையாடி பட்டத்தைக் கைப்பற்றியது. பயஸ்-பூபதி ஜோடி. இந்த ஆண்டில் மட்டும் இந்த ஜோடி மூன்று பட்டங்களை வென்றுள்ளது. இந்த முறை அமெரிக்க ஓபனில் இரட்டையர் பிரிவு சுற்று கடுமையான சவால் நிறைந்ததாக இருக்கும். இருப்பினும் அனுபவம் வாய்ந்த இந்த ஜோடி சிறப்பாக விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டின் கடைசி பெரிய டென்னிஸ் போட்டிஇதுதான். எனவே இந்த ஜோடி கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்ல இது ஒரு நல்ல வாய்ப்பாகும். மகேஷ் பூபதி 2002-ம் ஆண்டு அமெரிக்க ஓபனில் பட்டம் வென்றார். அதன்பிறகு அவர் பட்டம் வெல்லவில்லை. ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் நடப்புச் சாம்பியன் ஸ்பெயினின் ர.்.பேல் நடால், கஜகஸ்தானின் ஆன்ட்ரே கொலுபேவை சந்திக்கிறார். முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச், அயர்லாந்தின் கானர் நிலேன்டை சந்திக்கிறார். ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், கொலிம்பியாவின் சாண்டியாகோ கிரால்டோவையும், ஸ்வீடனின் ராபின் சோடர்லிங், அயர்லாந்தின் லூக் சொரேன்சனையும் சந்திக்கின்றனர். அமெரிக்காவின் ஆன்டி ரோடிக், சக வீரர் மைக்கேல் ரஸலைச் சந்திக்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஸ்பெயினின் நுரியாவையும், ரஷியாவின் எலினா வெஸ்னினா, நெதர்லாந்தின் அரன்டாக்ஸரஸ்ஸயும், பெலாரஸ்ஸின் விக்டோரிய அசரென்கா, ஸ்வீடனின் ஜோகன்னாவையும், ரஷ்யாவின் மரியா ஷரபோவா, பிரிட்டனின் ஹெதர் வாட்சனையும், ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், ஸ்வீடனின் சோபியாவையும், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ரஷ்யாவின் வெஸ்னாவையும் சந்திக்கின்றனர்.







229

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



விநாயக சதுர்த்தி பிள்ளையாரை நேர்ந்து தேங்காய் உடைத்துத்தான் எந்தவேலையையும் ஆரம்பிப்பார்கள். பிள்ளையார் சுளி போட்டு வேலையைத்தொடங்கிவிடு என்ற பாடல் கேட்காத வீடுகளேயில்லை ஆனால் இந்தியாவில் மண்ணில் செய்த பிள்ளையார் சிலைகளை உடைக்கிறார்கள் கடலில் கரைக்கிறார்கள்தான்.





உலகண்ணை திருவிளையாடல் படத்தில் சிவாஜி பாடின காட்சி பாட்டும் நானே பாவமும் நானேபாட்டுத் தெரியுமே அதுபோல கிழக்கு நியூயோர்க்கிலை மழையும் புயலுமென்று ரி.வி.யில் போகின்ற காட்சிகளை விளங்கப்படுத்திக்கொண்டிருந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



தொடர்ந்து காலமான ஜாக்லெக்ரனின் மரணச்செய்தி. பதவி துறந்து பண்போடு வாழ்ந்தவர். இறந்த பின்பும் மக்கள் அன்போடு இருக்கிறார்கள். கடந்த 2 வாரங்களாக பத்திரிகைகள் வானெலி தொலைக்காட்சி இன்ரநெற் ஈமெயில் பேஸ்புக் சகல தொலைத்தொடர்புகள் மூலம் இடம்பெற்ற செய்தி என்.டி.பீ கட்சித்தலைவர் ஜாக் - லெற்றனின் மரணம் இன மத மொழி வேறுபாடின்றி சகல மக்களின் அனுதாபத்தைப்பெற்றவர். வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?




வீடுகளில் சீரியல் நாடகம் பார்ப்பவர் ஒருபுறம் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் தூக்குத்தண்டனையை நிறுத்த தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் செய்பவர்களைப்பார்த்து கலங்குபவர் ஒருபுறம் கிறீஸ் மனிதனால் தினம் தினம் அவஸ்தைப்படும் மக்களை நினைத்து எமக்கு விடிவேயில்லையா என ஏங்குவோர் ஒருபுறம்




உலகைக் கலக்கி அரபு நாடுகளுக்கு அமெரிக்க ராணுவத்தை அல்லும் பகலும் வயிற்றில் புளிகரைக்க வைத்த பின்லாடன் இரட்டைக் கோபுரத்தை தகர்த்த தினம் நேற்றுப் போலிருக்கிறது ஆனால் 10 வருடங்கள் உருண்டோடிவிட்டன அதன் பக்கவிளைவுகள் அமெரிக்க ஆமி தங்கள் நாட்டைத் தவிர பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானில் தொடங்கி எகிப்த் லிபியா தொடர்ந்து பல ஆசிய அரபு நாடுகளில் பாதுகாப்பில் நிற்கிறார்கள்



அந்தந்த நாடுகளில் டாங்கர் மூலம் மரங்களை முறித்து கட்டடங்களை உடைத்து வீதிகளை நிர்மூலமாக்கிக்கொண்டிருக்கிறார்கள் உள்நாட்டிலுள்ள அமெரிக்கன் ஆமி கடந்தவாரம் சூறாவழியால் விழுந்த மரங்களையும் உடைந்த வீடுகள் கட்டடங்களையும் திருத்திக்கொண்டிருக்கிறார்கள் 'உலகையே ஆட்டிப்படைக்க நினைக்கும் அமெரிக்காவை ஐம்பெரும் பூதங்கள் எப்படி ஆட்டிப்படைத்திருக்கிறது'

வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?



## ஞாபகம்..வருகிறதா

செப்ரெம்பர்:

1. விநாயக சதுர்த்தி. (பிள்ளையார் பிறந்ததினம்)
5. Labour Day Holiday
5. அன்னை திரேசா நினைவுதினம் (1977)
6. ஆவணி மூலம்
7. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி நினைவுதினம் (1947)
8. ஆத்மயோதி முத்தையா நினைவுதினம்
11. சுப்பிரமணிய பாரதியார் நினைவு தினம் (1921)
11. நியூயோர்க் இரட்டைக்கோபுரம் அழிக்கப்பட்ட தினம் (2001)
12. சொர்ணலதா (பாடகி) நினைவு தினம்




மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
ஜோதிடம்
பண்டித் மகேந்திரன் சுவாமிகள்






ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

Tel: 647-919-5846

Office
5210 Finch Ave. East Unit # 1
Scarborough, ON M1S 4S4
(Inside of Golden Bakery)
Beside the Meenadchi Temble

Home
100 Winggaraden # 1713
Scarborough, ON. M1B 2P4
(Neilson & Finch)
Close Intersection

# BASEMENT RENT

**MCCOWAN & MCNICOLL**
Newley renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all amenities. Single person preferred. Avail. immediately.
416.304.8466 / 416.570.0156

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.712.1033

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, YRT, shopping, school. Avail. immediately.
647.864.1051 / 647.278.3210

**FINCH & BRIDLETOWNE CIRCLE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to school, mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.491.4156

**MARKHAM & GOLDEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. 22Bedroom also avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.989.6064

**NEILSON & FINCH**
1Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.412.0268
(Leave the message)

**MARKHAM & LAWRENCE**
2 Large bedroom bsmt for rent. Sep. entrance, parking, laun dry. Close to all facilities. Avail. September 15, 2011
தொடர்புகளுக்கு: 416.841.5301

**MORNINGSIDE & SWELLS**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.774.4051

**LAWRENCE & SCAR.GOLF CLUB**
3 bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, tamil stores. Avail. immediately.
416.438.2857 / 416.728.9580

**MCNICOLL & MIDDLEFIELD**
1 Bedroom bsmt for rent. Laundry, parking, cable. Close to bus, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.2656

**FINCH & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Each room $325. No Smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. immediately .
416.686.8345 / 416.388.6603

**MORNINGSIDE & STAINS**
பிரத்தியேக வாசலுடன் கூடிய 2 Bedroom bsmt apt. வாடகைக்கு உண்டு. அமைதியான சிறு குடும்பம் மற்றும் வதிவாளர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.272.5165

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. September 01, 2011.
647.783.4850 / 905.294.2674

**MARKHAM & HIGHGLEN**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. September 01, 2011.
905.472.0915 / 416.554.6553

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to to TTC, mall, subway, school. Family or students preferred. Avail. September 01, 2011.
416.701.9942 / 647.883.2257

**MARKHAM & ELSON**
Newly done 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.9912

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. September 15, 2011.
905.471.2987 / 416.666.3971

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, mall . Avail. October 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.248.6319

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**KENNEDY & HWY 401**
1 Bedroom bsmt + den for rent. Close to all facilities. Rent $1150.
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Rent $1400.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MCCOWAN & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom bsmt + den for rent. Close to all facilities. Rent $1200.
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Rent $1450.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Close to TTC, nofrills, walmart, tamil stores, school. Avail. Ladies preferred. Avail. September 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.554.6557

**MORNINGSIDE & SHEPPARD**
**ROUGH RIVER & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.220.5967

**MARKHAM & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
647.233.7316 / 647.709.2316

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. October 01, 2011.
416.494.0850 / 416.315.5648

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, cable. Close to RT, scarborough town center. Rent negotiable. $750
தொடர்புகளுக்கு: 416.431.5172

**MIDLAND & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bakery. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.947.8698

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk - out bsmt for rent. Parking. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. September 03, 2011. சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.492.9816

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
2 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, fullwashroom, laundry, sep. entrance. Avail. immediately. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, hospital. Avail. September 01, 2011. Very strictly No smoking & No Alcohol. Rent $700+ 40%utilities.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately. அத்துடன் Gas Stove ஒன்றும் விற்பனைக்கு உண்டு.
416.579.7255 / 416.431.6428

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, own laundry, shopping,TTC, schools, temples, cable, hydro included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.449.7440

**MARKHAM & BUR OAK**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, go station, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.8692

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.871.6149

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307 / 416.289.8728

**DENISON & MIDDLEFIED**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

**MIDLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school.
416.266.4789 leave message
416.980.5697 8:00am - 4:00pm

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**BIRCHMOUNT & ST.CLAIR**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, kitchen, one full washroom & living room. Close to TTC and other facilities. No smoking & No pets
Please Call: 416.882.4532

**NEILSON & FINCH**
**MARKHAM & MCNICOLL**
1 Bedroom huge walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, mall. Avail. September 01, 2011. Couple or single person preferred.
தொடர்புகளுக்கு: 416.298.7081
416.417.9541 / 647.241.0944

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking,. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TT, mall. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

மேலும் பக்கங்கள் 25, 26

## BASEMENT RENT

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.804.8435

## ROOM RENT

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom for rent. Washroom, parking, laundry. Close to TTC, shopping. Avail. immediately.
647.547.5119 / 647.339.9095

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**MILITARYTRAIL & ELLESMERE**
மேல்தளத்தில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
905.201.9166 / 647.522.9166

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & EGLINTON**
Condo ஒன்றில் 2 அறைகள் வாடகைக்கு உள்ளது. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். Close to all facilities. Avail. immediately. Working ladies or students preferred. Tv, internet ஒழுங்கு செய்து தரப்படும்.
416.269.0938 / 416.605.1942

**MORRISH & ELLESMERE**
2 Large bedroom for rent. Walk-in closet, washroom, parking. Close to UFT Scarborough, CHC Hospital, school. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.1752

## WANTED

We are looking for small (300 to 400 square feet) ground floor unit on lease. A busy area / plaza in scarborough is preferred, must be suitable for a financial business.
Contact: 416.830.0643
ganesh_lingam@hotmail.com

## GTA UNITS FOR LEASE

2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

## CONDO. FOR RENT

**WARDEN & FINCH**
**2050 Bridletown Cir.**
3 Bedroom condo. for rent. 1½ washroom, cable, parking, security, water, gas, washer, dryer included. Current bill extra. Close to TTC, malls, banks.
தொடர்புகளுக்கு: 416.274.9726

**WARDEN & FINCH**
2 + Den bedroom condo for rent. Close to all facilities. Laundry, 1½ washroom. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.335.9779

**MCLEVIN & NEILSON**
1Bedroom + den condo for rent. Close to all facilities. Avail. immediately.
647.400.7101 / 416.402.3947

## CONDO. FOR LEASE

**KENNEDY & HWY 401**
Brand new 2 Bedroom condo. for lease. 2 Washroom. Avail. immediately.
**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease. Close to all facilities. Asking price $1450.
தொடர்புகளுக்கு: 416.315.9397

## CONDO. FOR SALE

**KENNEDY & HWY 401**
1 Bedroom + den Condo. for sale. Close to all facilities. Rent $269,900.
2 Bedroom condo. for sale. Close to all facilities. Rent $289,000.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MCCOWAN & 401**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den Condo. for sale. Close to all facilities. Rent $249,900.
2 Bedroom condo. for sale. Close to all facilities. Rent $319,000.
தொடர்புகளுக்கு: 647.829.9456

## HOUSE FOR RENT

**MEADOWVALE & MORNINGSIDE**
2 Bedroom house for rent. Close to all facilities. Parking. Avail. September 01, 2011.
1 Bedroom also available.
தொடர்புகளுக்கு: 416.300.7595

## மணமகன் தேவை

கனடாவில் Accountant ஆக பணியாற்றும் 1980 ஆம் ஆண்டு பிறந்த இந்து மதத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். கனடாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.823.2319

## மணமகன் தேவை

இலங்கையை வசிப்பிடமாகவும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றமுடைய மணமகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள்.
403.966.7278 / 416.710.2686

## அம்மன் மூவிங் & டெலிவெறிஸ்

Best Price in town.
குப்பை அகற்றுதல்
தொடர்புகளுக்கு: 416.999.9409

## MINI VAN SERVICE

Toronto Airport சேவை, கோயில்கள் மற்றும் உங்கள் வாகனத் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
Raj: 416.858.4310 / 416.724.9427

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் றோட்டில் சேக்கிரட் கார்ட் கொலிச்சிக்கும் அரசடிக்கும் இடையில் சுற்றிவர மதில் உள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.438.4852

## COMMERCIAL UNIT FOR SALE IN GTA SQUARE

Window exposure, 2nd floor finished unit. Available for multiple salon, retails, rental office. Optical office. Asking price $139,900.
தொடர்புகளுக்கு: 416.315.9397

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 26

## JOB JOB JOB

**Delivery driver wanted**
**Downtown**
**416.497.7660 / 647.771.6237**

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.430.8238

**City Drivers தேவை**
A - Z Drivers 6 months experience. Good pay.
416.876.9529 / 416.744.3363

**WOODBINE & QUEEN STREET E**
Thai restaurant ஒன்றிற்கு Delivery driver தேவை.
Contact: 647.863.4345

**SMALL BUSINESS**
15 Years International Co. Part-time hours. Earn $3000 to $5000. $500 Registration fees.
Shan: 647.710.3104

Insurance Company ஒன்றிற்கு தமிழில் நன்றாக உரையாடக்கூடிய ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.824.5941

**HELP WANTED**
**SCARBOROUGH**
Computer Knowledge உள்ள sales person தேவை. 10:00am - 6:00 pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

**DAYCARE**
**STOUFFVILE**
ஒரு வயது ஆண் குழந்தையை பராமரிப்பதற்கு ஒரு வயோதிப பெண்மணி ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 905.209.8724

**JAPANESE FOOD**
**QUEEN & WOODBINE**
Looking for kitchen helper & delivery driver.
தொடர்புகளுக்கு: **416.918.9936**

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
தொடர்புகளுக்கு: 416.802.6067

Hardwood $3.99, Laminate $1.49 pluse installation.
தொடர்புகளுக்கு: 416.830.3932

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# இதயத்தாக்கம் ஏற்பட்டுத் தப்பிப் பிழைத்த ஒருவரின் அனுபவம்

## மின்வலையில் வந்தவை - 20

பெரும்பாலான மரணங்கள் இதயத் தாக்கத்தினால் (Heart attack) ஏற்படுகின்றது எனப்புள்ளி விபரங்கள் கூறுகின்றன. நாம் பிறந்த நாள் முதல் இறக்கும் வரைக்கும் இடைவிடாது வேலை செய்வது எமது இதயம் என்பது யாவரும் அறிந்ததே. எனவே இதை நாம் எவ்வளவு ஆரோக்கியமாகப் பேணுகிறோமோ கூடிய காலம் உயிர் வாழமுடியும்.


இவ்வாறான ஒரு இதயத் தாக்கம் ஏற்பட்டு உயிர் பிழைத்த ஒருவர் தமது அனுபவத்தைக் கூறுகிறார். இது யாவருக்கும் நன்மை பயக்கும் என்பதால் அதனை இங்கே விரிவாகத் தருகிறேன். அவரது கூற்று: எனக்கு இரவு 10.30 மணியளவில் இதயத்தாக்கம் ஏற்பட்டது. எனக்கு ஒருமனத்தாக்கமோ, அதிர்ச்சிதரக்கூடிய சம்பவமோ ஏற்படவில்லை. ஒரு சோபாமீது குசாலாக இருந்து கொண்டு, எனது பூனையையும் மடியில் வைத்துக் கொண்டு, மிகவும் விறுவிறுப்பான ஒரு கதைப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன்.

**- துறையூரான் -**

திடீரென்று வயிற்றில், அவசரமாக ஒரு துண்டு சாண்விச்சைக் கடித்து, தண்ணீர் குடித்துப் பின்னர் அடுத்ததையுங் கடித்து விழுங்கினதால் அவை யாவும் ஒன்று சேர்ந்து ஒரு தோல்ப் பந்தை விழுங்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. இதை நன்கு கடித்துச் சப்பிச் சாப்பிட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்ற எண்ணம் மனதில் உதித்தது. ஆனால் உண்மையில் நான் பி.ப 5மணிக்குப் பின் எதையுஞ் சாப்பிடவில்லை.

சிறிது நேரத்தின் பின் இது குறைந்து போன உணவுர்வு ஏற்பட்டது. இதன் பின்னர் எனது முள்ளந்தண்டுப் பகுதியிலிருந்து ஏதோவொரு அழுத்தும் உணர்வு மேலே கிளம்பி நெஞ்சுக் கூடு வரைக்குஞ் சென்றது. இந்த அழுத்தம் கழுத்துவரைக்குஞ் சென்று தாடையின் இருபக்கத்துக்கும் பரவியது. தாடையில் நோ ஏற்படுவது இதயத் தாக்கத்துக்கு ஓர் அறிகுறி என்பதை அறிந்திருந்தேன். எனவே எனக்கு இதயத் தாக்கம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்தேன்.

எனவே வாசிப்பதை நிறுத்திவிட்டுப் பூனையையும் மடியிலிருந்து அகற்றிவிட்டு எழுந்து நடக்க முற்பட்டேன். ஓரடி எடுத்து வைத்ததும் நிலத்தில் விழுந்தேன். இவ்வாறான வேளையில் நடக்கக் கூடாது என்பதை உணர்ந்தேன். ஆனால் அடுத்த அறையிலுள்ள தொலைபேசியை எடுக்க வேண்டுமானால் நடக்க வேண்டும். ஆனால் உதவிக்கு யாரையாவது கூப்பிடாவிட்டால் பின்னர் கூப்பிடமுடியாமல் போகும் என்பதையும் உணர்ந்தேன். கதிரையை பிடித்துக் கொண்டு மெதுவாக எழும்பிச் சென்று 911 எண்ணை அழைத்து நடந்ததைக் கூறினேன்.



அப்பெண் என்னை மெதுவாகச் சென்று கதவைத் திறந்து விட்டுப்படுக்கும்படி கூறினாள். அவ்வாறே செய்தேன். அதன் பின்னர் எனக்கு என்ன நடந்தது எனத் தெரியாது. நான் மயக்கமடைந்து விட்டேன்.

நான் சாடையாக விழித்தபோது இருதய நோய் நிபுணர் அம்புலன்ஸ் வானிலிருந்து என்னை வைத்தியசாலை நகரும் படுக்கையில் இறக்கியபோது ஏதோ கேள்வி கேட்டமாதிரி இருந்தது. எனக்கு விளங்கவில்லை. தலையை மட்டும் அசைத்தேன். பின்னர் எதுவும் ஞாபகமில்லை. வைத்தியசாலையில் எனது கால் நாடிக் கூடாக 'அஞ்சியோகிறாம் பலூனை' இருதய நாடிக்குள் (இதயத்துக்கூடாக இடது பெருநாடிக்குள்) அருகே இரு தடைகள் (Stents) வைத்து அகட்டி விட்டார்கள்.

இவற்றை விரிவாக எழுதுவதன் நோக்கம் நான் பெற்ற அனுபவத்திலிருந்து நீங்கள் நன்மை பெற வேண்டும் என்ற விருப்பமே. உங்கள் உடலில் ஏதாவது அசாதாரணமாக நடந்தால் உடனே கவனஞ் செலுத்துங்கள். அஜீரணத்தோடு கூடிய நெஞ்சுக் கூட்டின் இறுக்கம், தாடைகள் நோதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனே அவசரப்பிரிவுக்கு அழையுங்கள். பொதுவாக நாம் அஜீரணம் என நினைத்து ஏதாவது மாலக்ஸ் (Maalox) போன்ற நெஞ்சுசெரிவுக் குளிசைகளை எடுப்பது. எனவே அறிகுறிகளை அவதானித்து அம்புலன்சுக்கு அழைப்பது நல்லது. தவறான அபாய அறிகுறியாக இருந்தாலும் வைத்தியசாலைக்குப் போவது நல்லது.

2. அம்புலன்சை வரவழைத்து விட்டு உடனே அஸ்பிரின் எடுங்கள். ஒரு நாளும் நீங்கள் வைத்தியசாலைக்கு கரோட்டிக் கொண்டு போகாதீர்கள். அதனால் உங்களுக்கு மட்டுமல்ல பிறருக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும் உங்களது கணவனை அல்லது மனைவியை உங்களை வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லும்படி கேட்காதீர்கள். காரணம், அவர்களது முழுப்புலனும், உங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும். கார் செலுத்துவதில் அதிக அக்கறை செல்லாது. எனவே அம்புலன்சை அழைப்பது தான் சிறந்தது. அத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அம்புலன்சில் செல்வோருக்குத்தான் முதலில் சிகிச்சை அளிக்கப்படும் என்பதை மறந்து விடாதீர்கள்.

மேலும் அம்புலன்சில் வரும் மருத்துவ உதவியாளர் (Paramedics) உங்களுக்கு முதலுதவி அளித்தபின்னரே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வார்கள். எனவே உடனடி உதவிகள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிர் காக்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

3. உங்களது கொலஸ்ரோல் மட்டம் சாதாரண நிலையில் இருப்பதால் இதயத்தாக்கம் ஏற்படாது என நீங்கள் கருதக்கூடாது. கொலஸ்ரோல் மட்டம் கூடுவது மிகவும் அரிதாகவே இதயத்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. (கொலஸ்ரோல் மட்டம் கூடுவதுடன் உயர் இரத்த அமுக்கமும் சேர்ந்தே இதயத் தாக்கம் ஏற்படுகிறது) பெரும்பாலும் நீண்டகால மன அழுத்தங்களும் உடல் வீக்கங்களும் உங்கள் நாடிகளில் ஆபத்தான ஓமோன்களைக் சுரந்து அடைப்புக்களை ஏற்படுத்துகின்றன என அறியப்பட்டுள்ள தாடை நோ ஆழ்ந்த நித்திரையில் உள்ள ஒருவரை எழுப்பிவிடும்.

எனவே இவை பற்றி அறிந்து அவதானமாக இருங்கள். இதயதாக்கம் பற்றி நாம் போதிய தகவல்களை அறிந்து கொண்டால், அதிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். எனவே இவைபற்றி உங்கள் உறவினருக்கும் நண்பர்களுக்கும் கூறுங்கள்.

---

அவர்கள், தொழிலாளர்கள் Trade Union தொடங்கும்படி கேட்டார்கள். பொதுவாக எல்லா வேலையாட்களுக்கு மாகவே போராடினார்கள்.




சிலமாதங்களுக்கு பின்னர், இதைப் போல் இன்னும் ஒரு ஊர்வலம் ஒட்டாவாவில் நிகழ்ந்தது. அவர்கள் அப்போதைய பிரதமர் Sir John A. Macdonald வீட்டிற்கு முன் ஊர்வலம் சென்றார்கள். பின்னர் அவர் மக்களுக்கு முன்வந்து தான் Trade Union களுக்கு ஆதரவு அளிப்பேன் என்றார். இதனால் 1883 ஆம் ஆண்டில் 'Canadian Labour Congress' தொடங்கியது.

தொழிலாளர் தினம் முதலில் வசந்த காலத்தில் நடைபெற்றது. ஆனால் 1894 ஆம் ஆண்டில், இலை உதிர் காலத்திற்கு மாற்றப்பட்டது. அமெரிக்காவிலும், தொழிலாளர் தினம் ஒரே நாளில் தான் நடைபெறும். அடுத்த வருடம் தொழிலாளர் தினம் செப்ரெம்பர் 3ஆம் திகதி வருகிறது.



**ஞா. ஆரணி**
அகவை 12

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தொழிலாளர் தினம்

# *Labour Day*

இவ்வருடம் தொழிலாளர் தினம் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறுகிறது.

தொழிலாளர் தினம் முதன் முதலாக தொழிலாளர்களுடைய உரிமைகளை கொண்டாடும் நாளாக தொடங்கியது. ஆனால் இப்பொழுது, கனேடிய மக்கள், செப்ரெம்பரில் வரும் முதல் திங்கட்கிழமையை கோடைகால விடுமுறை யின் தொடர்ச்சியாக கருதுகிறார்கள்.

வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருக்கும். இது கோடை காலத்தில் நடைபெறுவதால், பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கும். பல பொதுப்போக்குவரத்து வசதிகளும் (Bus, Subway, Taxi) மூடப்பட்டிருக்கும், அல்லது குறைவாக குறைவாக செயல்படும். பலர் கோடை கால விடுமுறைப் பயணங்களால் திரும்பி வருவதால், போக்குவரத்து நெரிசல்களும் (Traffic) கூடுதலாக இருக்கும்.




இந்நாளில் மக்கள் ஒரு கோடைகால பயணம் செய்வார்கள். வனபோசனங்கள், கொண்டாட்டங்கள், Barbecue, மற்றும் வாணவேடிக்கைகள் ஆகியவற்றிக்கு செல்வார்கள்.

பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், இது பள்ளிக்கு செல்லும் முன் வரும் ஒரு விடுமுறை நாளாக கருதுகிறார்கள்.

கனேடிய Football ரசிகர்கள், 'Labour Day Classic' Matches ஐ பார்ப்பார்கள். இந்த போட்டிகளில், மூன்று முறை (3 Games) நடைபெறும். ஒன்று தொழிலாளர்கள் தினத்திற்கு முன் வரும் ஞாயிற்றுக்கிழமையில், மற்ற இரண்டும் தொழிலாளர் தினத்தன்று நிகழும்.

தொழிலாளர் தினத்தில், தபால் அலுவலகங்கள், அரச அலுவலகங்கள்,

தொழிலாளர் தினம், முதன் முதலாக ஏப்ரல் 15ஆம் திகதி, 1872 இல் தொடங்கியது. இந்நாளில் Toronto Trades Assembly கனடாவில் முதன் முதலாகா தொழிலாளர் உரிமைக்காக மிகப் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். Toronto Typographical Union இன் 24 தலைவர்களை சிறையில் இருந்து விடுதலை செய்யும்படி கேட்பதற்காகத்தான் இந்த ஊர்வலம் நிகழ்ந்தது. அவர்கள் ஒரு வேலை நாளுக்கு 9 மணித்தியாலம் மட்டுமே வேலை செய்யவேண்டும் எனக்கோரி வேலை நிறுத்தம் (Strike) செய்ததற்காகத் தான் சிறையிலிடப்பட்டார்கள்.

Toronto Trades Assembly ஒரு பெரிதான நிறுவனமாக வளர்ந்து கொண்டிருந்தது.

தொடர்ச்சி 26ஆம் பக்கம்


**SCARBOROUGH**
**MORNINGSIDE & ELLESMERE**
4 Bedroom detached house. Very clean. 4 Parkings. Close to U OF T, Centennial College, schools, banks, shopping, doctors, HWY 401 & all facilities. Avail. 1st week of september.
**Contact: 416.356.8958**

**STOUFFVILE**
**9TH LINE & REEVES WAY**
Brand new. never lived 3 bedroom house for rent. Close to walmart, Canadian tire, HWY 48, & all facilities. Avail. 1st week of september.

**TUTORING (WEB DEVELOPMENT)**
**By Experienced Graduate Tutor**
Math 6 - 11, Physics - 11
Data Management - 12
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTMA, ASP, PHP & Mysql. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

**TUTORING**
**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
**Grade 5 - 12**. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

**COMPUTER REPAIR**
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்
Pro-Win Computers
919 Ellesmere Road, Unit - 302
416-879 7489 / 647-340 5568
(Kennedy & Ellesmere)


மேலும் பக்கங்கள் 24, 25


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**CONVIENCE STORE FOR SALE**
**BRIMLEY & SHEPPARD**
Convience store for sale. Close to all facilities. 2 Units also avail. Avail. immediately.
**Contact: 416.471.3622**

**TROUT WATER FAMILY CAMPING**
Cottage & Tent, Ponds for fishing and boating, Golf Car rentals, Bike rentals, Clean Showers, Flush Toilets, Cabins for rental, Day or Weekends, Storage Facilities, Playground for Volleyball, Soccer, Football.

**Contact : 416.727.6525 / 705.357.1754**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# தூத்துக்குடி மாவட்டம் -2 தமிழ் சமூகத்தின் வேர்கள்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு ஆய்வுகளில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்விடப் பகுதிகள் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன. குறிப்பாக, இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையைச் சேர்ந்த அலெக்சாண்டர் ரீ மேற்கொண்ட அகழாய்வுகள் மிகச் சிறந்த பண்பாட்டினை தமிழகம் கொண்டிருந்திருக்கிறது என்று வெளிஉலகுக்கு தெரியப்படுத்தின. அலெக்சாண்டர் ரீயின் முக்கிய இரண்டு அகழாய்வுகள் ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பேர் ஆய்வுகள். இவரது ஆய்வில் ஆதிச்சநல்லூரில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் இங்கு தொன்மையான நாகரிகம் ஒன்றிருந்ததை உறுதிப்படுத்தின. இவர் சேகரித்த வெண்கலப் பொருட்கள், சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த தாய் தெய்வ அமைப்புடைய வெண்கலத் திருவுருவம் போன்றவை. “ஆதிச்சநல்லூர் ஊரிருக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆதிச்சநல்லூருக்கு அருகில் உள்ள கொற்கையின் பண்பாட்டுக் காலத்துக்கும் முற்பட்டதாக இது இருக்க வேண்டும். கரிமம் 14 முறைப்படி கண்டுபிடிக்கப்பட்ட கொற்கையின் காலம் கி.மு. 785. கொற்கையிலிருந்து வடக்காக ஒன்பது கி.மீ. தொலைவில் ஆதிச்சநல்லூர் இருக்கிறது. எனவே, முற்காலத்தில் சிறந்த வணிக நகரமாக இருந்து, கடல் பின்னோக்கிச் சென்ற பின் தனது சிறப்பை இவ்வூர்

**- வழிப்போக்கன் -**

இழந்திருக்க வேண்டும்” என்கிற முடிவுக்கு அலெக்ஸாண்டர் ரீயின் ஆய்வுகள் வந்தன. அலெக்ஸாண்டர் ரீக்கு முன்பே டாக்டர் ஜாகோர் என்ற பெர்லின் அருங்காட்சியக ஆய்வாளர் 1876ஆம் ஆண்டு தொடங்கி, தாமிரபரணியின் தென்பகுதியில் சுமார் 114 ஏக்கர் பரப்பளவு பரந்து காணப்படும் ஏரலில் ஆய்வுகள் செய்தார். இவர்தான் முதன் முதலில் ஆதிச்சநல்லூரை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்தவர். இவருக்கு சில தாழிகள் கிடைத்தன. மேலும் மட்பாண்டங்கள், இரும்புப்பொருட்கள், எலும்புக் கூடுகளின் பகுதிகள், மண்டையோடுகள் ஆகியவற்றையும் ஜாகோர் சேகரித்தார். ஆனால், அவற்றை அப்போது அவர் வெளியிடவில்லை. இப்போது அவரது சேகரிப்புகள் பெர்லின் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஜாகோரைத் தொடர்ந்து பாரிஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம்.லோனிசு லாபிக்கு 1903 - 04 ஆண்டுகளில் பல மட்கல வகைகள், இரும்பு, வெண்கலப் பொருட்கள், தொங்கு விளக்குகள், இரும்பு வாட்கள் போன்றவற்றை ஆதிச்சநல்லூரில் கண்டெடுத்தார்.

அதன்பிறகு அலெக்ஸாண்டர் ரீ ஆய்வுகள் மேற்கொண்டார். சங்க இலக்கியங்களின் கால கட்டத்தைச் சேர்ந்த தொல்லியல் ஆதாரங்களைத் தேடுவதுதான் ரீயினுடைய நோக்கம். அவருக்கு நிறையப் பொருட்கள் கிடைத்தன. ஜாகோரைவிட அதிக தாழி-களை இவர் கண்டுபிடித்தார். கிட்டத்தட்ட 1872க்கும் மேற்பட்ட தொல்பொருள்கள் கொண்ட இவரது சேகரிப்பில் தங்கம் மற்றும் வெண்கல கலைப்பொருட்கள் மூடியுடன் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வெண்கல எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, கொம்பினையுடைய மறிமான், சேவல், புலி, யானை முதலியவையும் உள்ளன. மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும் பாகங்களாகவும் கிடைத்தன. விலங்கு உருவங்கள், இரும்புப் பொருட்கள்,



தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 96

எண்ணற்ற பானை ஓடுகள் என்று அகழாய்வில் கிடைத்த அனைத்தையும் அலெக்சாண்டர் ரீ அட்டவணைப்படுத்தி பதிப்பித்தார். அவரது அறிக்கை, கீழ்த் தாமிரபரணிச் சமவெளியின் வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் பொதுவான தகவல்களைத் தருகின்றன. “ஆனால் இவரது சேகரிப்பைக் கொண்டு அக்கால சமூகப் பொருளாதாரச் சூழலை வெளிக்கொணர்வது கடினம். விஞ்ஞானப் பூர்வமான தொல்லியல் அணுகுமுறையுடன் ஆய்வுகள் செய்யப் படாதது இவர் ஆய்வின் முக்கியக் குறை. அவரால் கிடைத்தவற்றைக் கால வரிசைப்படுத்த முடியவில்லை. அது அவருடைய குறை இல்லை. அக்கால கட்டத்தின் தொல்லியல் துறையின் சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகத்தான் இருந்தன. இப்போது நிறைய விஞ்ஞான முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவேதான், ஆதிச்சநல்லூர் அகழாய்வில் இவ்வளவு தூரம் நாம் முன்னேறி வந்துள்ளோம்” என்கிறார் சத்தியமூர்த்தி.

மேலும், “இந்த ஆய்வு மூலம் சங்ககாலத்துக்கு நம்மால் தேதி குறித்துவிட முடியும் என்று நினைக்கிறேன். ஏனெனில், கண்டெடுக்கப்பட்டுள்ள புதை குழிகளில் சங்க இலக்கியங்களில் கூறப்படும் அடக்க முறைகள்தான் பின்பற்றப்பட்டுள்ளன” என்கிறார் அவர். “ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள மண்பாண்ட எழுத்துக்கள் பிராமி லிபியினால் ஆனவை என்று சமீப காலமாக கண்டறிந்துள்ளார்கள். அன்றாடப் புழக்கத்துக்கான மண்பாண்டங்க ளில் உள்ள எழுத்துக்களைக் காணும்போது அக்காலத்தில் கல்வியறிவு மிகப்பரவலாக இருந்தது என்றும் அது ஒரு நாகரிக சமூகம் என்றும் ஊகிக்கிறார்கள்” என்கிறார் ஜெயமோகன்.

இப்போது மேல்நிலை, இடைநிலை, கீழே என்று மூன்று நிலைகளில் தடயங்கள் கிடைத்துள்ளன. கீழே இருப்பது முந்தைய கால கட்டத்தைச் சேர்ந்ததாகவும், மேலே இருப்பவை அதற்கு அடுத்தடுத்த கால கட்டத்தைச் சேர்ந்தவை என்றும் கணிக்கப் பட்டுள்ளன. திருநெல்வேலி பகுதிகளில்

மட்டும்தான் இதுபோல் புதைகுழிகள் அதிகம் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஈமச் சடங்குக்கு கல் நடுகிற பழக்கம் உள்ள புதைகுழிகள் தமிழகத்தின மற்ற இடங்களில் கிடைத்துள்ளன. ஆதிச்சநல்லூர், கல்நடுகிற பழக்கம் உருவாவதற்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தது. கேரளாவில் மாங்காட்டு அகழாய்வில் கிடைத்துள்ள வற்றைவிட முற்காலத்தைச் சேர்ந்த பொருட்கள் இப்போது ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன.

இங்கு கிடைத்துள்ள தாழிகள் சிவப்பு, நிறத்தில் கூம்பு வடிவத்தில் 3 அடி விட்டமும் சிறிதளவு உயரமும் சொர-சொரப்பான அமைப்பும் உடையவை. தாழிக-ளின் ஓரங்களில் விரல் பதிந்த வேலைப் பாடுகளும் ஆழமான முக்கோண வடிவப் புள்ளிகளும் காணப்படுகின்றன. தட்டையான கூம்பு வடிவ மூடிகள் உள்ளன. ஈமத்தாழிக-ளின் உள்ளே கறுப்பு, சிவப்பு நிற மட்பானைகள் காணப்படுகின்றன. சில தாழிகளின் உட்புறத்தில் ஆணி போன்ற அமைப்பு நீட்டிக் கொண்டிருக்கிறது. இது உட்புறம் பொருட்களை தொங்கவிடுவதற்காக அமைக்கப்பட்டிருக்க லாம் எனக் கருதப்படுகிறது.

பெரும்பாலான தாழிகளில் முழுமையான எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. சில தாழிகளில் எலும்புக்கூட்டின் பகுதிகள் மட்டும்தான் காணப்படுகிறது. இந்த எலும்புகூடுகளின் ஆய்வு முடிவுகள் இங்கு வாழ்ந்த மக்கள் நீண்ட தாடையை உடையவர்கள் என்று தெரிவிக்கிறது. எலியட் ஸ்மித் என்பவர் இங்கு வாழ்ந்த மக்கள் ஆல்பைன் இனத்தின் ஒரு பிரிவி-னரான ஆர்மினிய மக்கள் எனக் கூறியுள்ளார். திராவிட இனத்தின் ஒரு கலவைக் கூறாக இந்த ஆர்மினிய இனக்கூறு கருதப்படுகிறது. வெண்கலப் பொருட்கள் சிறந்த வேலைப்பாடுடையவை என்பது

குறிப்பிடத்தக்கது. வாள், கத்தி, உளி போன்ற இரும்புச் சாமான்களும் பெருமளவில் காணப்படுகின்றன. பானையின் வெளிப் புறத்தில் மென்புடைப்பு சிற்பமாக பெண் உருவமும், மான், பறவை மற்றும் செடிகளும் உள்ளன. புடைப்பு சிற்ப பெண் உருவங்கள் தாய் தெய்வமாகக் கருதப்படுகின்றன. மேலும், வனப்பகுதியாக இருப்பதால் வள்ளிக் குறத்தியாக இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. புடைப்பு சிற்பத்தின் வரி வடிவம் சிந்து சமவெளி பானை ஓடுகளில் காணப்படும் சிற்ப வரி வடிவ ஓவியங்களுக்கு நிகராக உள்ளன. இதுவும் கிடைக்கப் பெற்றுள்ள பானைகளின் வகைகளும் ஆதிச்சநல்லூர் கலாச்சாரத்தின் தொழில் நுட்ப மேலாண்மையைக் காட்டுவதாக உள்ளன” என்கிறார் சத்தியமூர்த்தி. மேலும், வெண்புள்ளி அலங்கார வேலைப்பாடுகளும் பானை மேல் தீட்டப்பட்டுள்ளன. இது அக்கால படைப்பாளியின் அழகியல் மற்றும் படைப்புத்திறன் நேர்த்தியையும் மக்களின் ரசனையையும் காட்டுவதாக உள்ளது.

பொதுவாக மட்பாண்டங்கள், தாழி, கிண்ணம், தட்டு, நீண்ட கழுத்துடைய ஜாடி, மூடி, சிறிய பானைகள், பானை தாங்கும் நாற்காலிகள், வட்டிகள் போன்றவை மூன்று கால நிலைகளிலும் கிடைத்துள்ளன. ஆரம்ப கால மட்பாண்டங்கள் சிறப்பாகவும் நன்கு சுடப்பட்டவையாகவும் உள்ளன. பிற்காலங் களில் உள்ளவற்றில் இது காணப்பட வில்லை. மூன்று அடுக்குகளிலும் ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன. அவை வண்ணங்கள், உள்ளடக்கம், மற்றும் அமைப்பியல் வகைகளில் மாறுபட்டு உள்ளன. புதைக்கும் விதத்தில் ஒவ்வொரு அடுக்கிலும் வேறுபாடுகள் உள்ளன. உடலை அப்படியே கட்டி நிற்கும் நிலையில் தாழிக்குள் வைத்து புதைத்துள்ளார்கள்.

“அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் கிடைத்துள்ளதால் பக்கத்திலேயே மனிதர்களின் வாழிடங்களும் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. அனேகமாக அது தாமிரபரணிக்கு இந்தப் பக்கம் இருக்கலாம். விரைவில் அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் திட்டத்துடன் இருக்கிறோம். தாமிரபரணி பாதை மாறியுள்ளது. எனவே, முதலில் அதன் பழைய பாதையை கண்டறிய வேண்டும். கிடைத்துள்ள மண் பாண்டங்கள் மணிப்பூர் பல்கலைக் கழகத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப் பட்டுள்ளன. அதன் முடிவு தெரியவரும்போது அதன் கலாச்சாரத்தின் காலத்தை அறிய முடியும். மேலும், அடக்கக்குழியை தோண்டும் முறையையும் மூடும் முறையையும் அறிய முடியும். அது அச் சமூகத்தின் ஈமச் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துமாறு இருக்கும்” என்கிறார் சத்தியமூர்த்தி.

இவ்வளவு பெருமைகள் கொண்ட, நம் பெருமைகளைச் சொல்லும் ஆதிச்சநல்லூர் இப்பொழுது எப்படியிருக்கிறது?

“ஆதிச்சநல்லூருக்கு நாங்கள் நல்ல மதிய வெயிலில் சென்று சேர்ந்தோம். அந்த பெரிய செம்மண்பாறைக் குன்றைச் சென்றடைந்ததும் அங்குமிங்கும் பார்த்தோம். தொல்பொருள் துறையின் அறிவிப்போ வேறு

தொடர்ச்சி 35 ஆம் பக்கம்

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3 பகுதி 23

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

## ◊ சி.வி. நாதன் ◊

40 நாட்களின் முன்பு.

நாசாவின் அந்தச் சிறப்பு அறையில் அந்த மூவரும் மேசை ஒன்றின் முன்பாக ஒரே பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். செழியன், கார்த்திக், மணியன் மூவரும் தமிழர்கள். முதல் இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்றவர் அறை மிகச் சுத்தமாக இருந்தது. மேசையில் ஒரு கணினி மாத்திரம் இருந்தது. மேசையின் மறுபுறத்தில் வில்லியம் சான் அமர்ந்திருந்தார். சாளரங்கள் ஏதும் இல்லாது முற்றாகவே மூடப்பட்டிருந்த அந்த அறைக்குள் எவ்விதம் வெளிச்சம் வருகின்றது, எவ்விதம் காற்று வருகின்றது என்றே தெரியவில்லை. ஆனாலும் வெளிர் மஞ்சள் நிறத்தில் பூச்சுப் பூசப்பட்டிருந்த அந்த அறை மிகவும் இதமானதாக இருந்தது.

சற்று நேரத்தின் முன்பதாகத்தான் அவ்வறைக்குள் நால்வரும் வந்திருந்தார்கள். வந்த வாசற்கதவு எவ்விடத்தில் என்ற கேள்வி எழுந்தால், அது அவனுக்குத்தான் வெளிச்சம் எனக் கூறவேண்டும்.

நால்வருரினதும் உரையாடலைக் கேட்போம்.

உரையாடல் ஆங்கிலத்தில் இருந்தது. எமக்குத் தேவையில்லாதது, அவர்களது சம்பிரதாயமான வந்தனக் குசல விசாரிப்புகளை விட்டுவிடுவோம்.

'நண்பர்களே!' அப்படித்தான் சான் எல்லோரையும் பொதுவாக அழைப்பார், 'ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு உங்களின் உதவி தேவையாக உள்ளது' என்ற பீடிகையுடன் அவரது உத்தியோக பூர்வமான உரை ஆரம்பமாகியது. முகத்தில் சிநேக பாவம் இருந்தது. அவரின் இயல்போ தெரியவில்லை.

'நேற்று முன்தினம் எமது விண்வெளி அவதான மையத்தில் இருந்து ஒரு செய்தி வந்தது. எமது பூமியைச் சுற்றியுள்ள வான்வெளியின் ஓரிடத்தில் ஏதோ ஒரு சலனம் ஏற்பட்டுள்ளது. சரியாக 28 நிமிடங்களுக்கு அந்தக் குழம்பல் தோன்றியிருக்கின்றது. வான்பரப்பில் ஏற்பட்ட இந்த இடைஞ்சலுக்கு ஒருவேளை ஏதாவது இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்தான் (UFO) காரணமாக இருக்குமோ என்ற ஐயம் உள்ளது' என்றவர் சிறிது நேரம் இடைநிறுத்தினார்.

மூவரும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். பறக்கும் தட்டுகள் என்ற போது அவர்களின் முகத்தில் ஆச்சரிய ரேகைகள் ஓடி மறைந்தன. அதனைக் கண்டும் காணதவர் போல் காட்டிக் கொண்ட சான்,

'விண்வெளி அவதானிப்பு மையத்தில் இருந்து வந்த இந்தச் செய்தியைப் பாருங்கள்' என்றவர் கணினியை மூவரின் பக்கமாகத் திருப்பி, கணினியை உயிர்ப்பித்தார்.

சில மங்கலான வான்பரப்பின் படங்களும், அவற்றின் கீழாகச் சில செய்திகளும் இருந்தன.

கணினியை நிறுத்திய சான், மூவருக்கும் தனித்தனியான ஒவ்வொரு கோப்புகளைக் கொடுத்தார். அவற்றின் மேலே அவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. :

'இச்செய்தியை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையமும், அவுஸ்திரேலியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமும் உறுதிப்படுத்தியுள்ளன.'

மூவரும் நிமிர்ந்து பார்த்தார்கள். அவர்களது பார்வையில் தொக்கி நின்ற கேள்விக்குப் பதில் தருவது போல் சான் தொடர்ந்தார்.

'இதில் உள்ள சிறப்பு என்னவென்றால், ஆண்டு ஒன்றுக்கு ஆயிரக்கணக்காக, பறக்கும் தட்டுகள் பற்றிய பதிவுகள் உலகம் முழுவதுமே பதிவாகுவது எங்களுக்குத் தெரியும். அவையெல்லாம் சாதாரண பொதுமக்கள் கண்டு கொண்டதற்கான பதிவுகள். ஆனால் இந்த விடயம் என்னவெனில் உலகின் வலிமைமிக்க விண்வெளி ஆய்வு மையங்களின் வான் கண்காணிப்பின் போது இந்த விண்வெளியின் சலனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்தோ அல்லது யூஎவ்ஓலோயிஸ்களிடமிருந்தோ இது பற்றி எதுவிதமான தகவலும் வரவில்லை. ஆனாலும் இந்த விடயத்தில் பெரும் பிராக்காக இருந்து விட முடியாது. எனவேதான் நாம் இதில் பெரும் அக்கறை எடுக்கின்றோம்.'

'இதைப் பாருங்கள' என்ற சான், மேசையில் இருந்த பொத்தான் ஒன்றினை அழுத்த,

சானின் பின்புறமாக, அவரின் தலைக்கு மேலாக, சுவர் விரிந்து கொடுக்க, திரை ஒன்று தோன்றியது. திரையில் வெளிச்சக் கோடுகள் தெரியத் தொடங்கின.

'இதுதான் எங்களது விண்வெளி அவதானிப்பு மையம் அனுப்பிய விபரம்.'

திரையில் வெளிச்சக் கோடுகள் ஒன்றிணைய, தொடர்காட்சி ஒன்று தொடங்கியது. விண்வெளியின் இரவுக் காட்சி, விண்மீன்கள் அழகாகக் காணப்பட்டன. விண்பரப்புகளில் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த காட்சியின் இடையே ஏதோ நடுக்கம் போல வரத் தொடங்கியதும், காட்சி அசைவது நின்றது. இந்த நடுக்கம் கமராவினால் ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் காட்டப்பட்ட காட்சிப் பகுதியின் நடுப்பகுதியிலே மட்டும் அந்த குலுக்கம். நடுக்கம் சிறிது நேரத்தில் நெளிவுகளாக மாற, அந்நெளிவுகள் விரைவில் குறுக்கும் நெடுக்கிலும் கோடுகள் போன்று மாறின. குறுக்கு, நெடுக்குக் கோடுகளின் எண்ணிக்கைகள் அதிகரித்துக் கொண்டு போக, அந்த காட்சி வந்தது.

நெளிவுகளின் நடுவே ஏதோ மங்கலாகத் தெரிந்தது. மூவரும் கண்களை விரித்துப் பார்த்தார்கள். என்னவென்று தெரியவில்லை. எவ்வளவு பெரியதென்று கூடத் தெரியவில்லை. சடுதியில் வான்பரப்பு பழைய நிலைக்கு வந்து அமைதியாகி விட்டது. காட்சி முடிந்ததும் சுவர் பழைய நிலைக்கு வந்து விட்டது.

இன்னமும் வரும்

# வேறென்ன வேண்டும்?



என் கண்முன் வெள்ளாடையில் அழகிய தேவதை
இன்முகத்துடன் திடீரெனத்தோன்றினாள்
எண்ணமதை என்னிடம் தயங்காது சொல்வாய்
மண் உலகில் வேண்டும் பொருள்கள் யாவை? என்றாள்
யாண்டும் இன்பம் தரும் பொருள்கள்-------
எவை எனச்சிந்தித்தேன்
கல்வி,செல்வம்,வீரம் மூன்றும் என்றேன்
வேண்டும் அளவுகள் யாது? என்றாள்
கல்வியின் உச்சம்? செல்வத்தின் உச்சம்? வீரத்தின் உச்சம்?
புரியாது ஒருகணம் குழம்பினேன்
பின் தெளிந்தேன் கூறினேன்
நிரந்தர மன அமைதி வேண்டும் என்றேன்
வேறென்ன வேண்டும்? என்றாள்
வேறெதுவும் வேண்டாம் என்றே சிரித்தேன்
பெற்றுவிட்டாய் மன அமைதி என்றாள்

கடிகாரம் அலறியது ஓ கண்டது கனவா?
படித்துவிட்டேன் கனவில் பாடம் என்றே
முணுமுணுத்துக்கொண்டே அன்று செய்யவேண்டிய
எனக்குரிய வேலைகளில் கவனம் செலுத்தினேன்
வேறென்ன வேண்டும்?

**- றஞ்சி கதிர் -**
ranji24.kathir@gmail.com

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
**www.vlambaram.com**

**வெளிவந்துவிட்டது!**



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
மருத்துவ கைநூல்.
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**
*5215 Finch Ave. E, #201*

# சிறுநீரக நோய்களும், உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

சப்த தாதுக்களினால் ஆன எமது உடம்பில் உள்ள முக்கிய உறுப்புகளில் சிறுநீரகமும் ஒன்றாகும். இதனை ‘சலாசயம்’ எனவும் அழைப்பதுண்டு. நமது உடம்பில் செறிந்து ஓடிக்கொண்டிருக்கும் இரத்தம் சிறுநீரகத்தை வந்து அடையும் போது கழிவுப்பொருட்களை நீக்கி Renal Tube வழியால் ஓடிக்கொண்டிருக்கும் போது உடம்புக்கு உகந்த தேவையான பொருட்களைப் பெற்றுக்கொண்டு எஞ்சிய பொருட்கள் சிறுநீர் பையை (Bladder) அடைந்து சிறுநீர் குழாய் வழியால் வெளியேற்றுகின்றது. இக்கழிவு எமக்கு முக்கியமானதாகும்.


அதாவது நமது உடம்பின் உள்ளும் புறமும் போக வேண்டிய பொருட்கள், போக வேண்டிய பாதையினால் போகவேண்டியளவு, போகவேண்டிய நேரம் தடையின்றி போகவேண்டும். இதில் குறைபாடு இருந்தால் ஏதோ ஒரு வியாதி ஏற்பட்டு அதனால் வேறு வியாதிகளும் எம்மைச் சூழ்ந்து கொள்ளும். இப்படி வருவதை உபத்திர வியாதியாகவும் கொள்ள இடம் உண்டு.

சிறுநீரகத்தில் காணப்படும் அணுக்கள் (Cell) நாம் பாவிக்கும் உப்பு, சீனி என்பவற்றால் அழிக்கப்படும் இயல்புடையது. மேலும் பால்வினைநோயினால் பீடிக்கப்பட்டவர்களுடன் உறவு கொள்வதினால் கிருமிகள் உட்சென்று சிறுநீரகத்தில் உள்ள நுண் அணுக்களை அழித்து சிறுநீரகத்தைப் பாதிப்படையச் செய்வதினால் அதன் செயல்திறன் குன்றும். அதாவது இரத்தத்தை வடிகட்டிச் சுத்தப்படுத்தும் நிலை, இரத்த அழுத்தத்தை சமப்படுத்தும் நிலை என்பன குன்றிவிடும்.

நாம் நாளாந்தம் பாவிக்கும் உணவில் தீங்கை விளைவிக்கும் பொருட்களினால் வியாதிநிலை ஏற்படும்போது அதற்கு இராசாயன மருந்துகளை அளவுக்கு மீறி எடுப்பதினால் சிறுநீரகத்தில் தாக்கநிலை ஏற்படும் என அறியமுடிகின்றது. எதற்கும் மருந்தை எடுக்கும் தங்கள் வைத்தியர்களிடம் கேட்டுக் கொள்வது நன்மை பயக்கும். இதனால் பாவிக்கும் மருந்தின் அளவை, நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

நமது சிறுநீரகம் உடம்பில் சாதாரண நிலையில் சுத்தமாக இருக்கும். இதில் நோய்க்கிருமிகளோ அன்றி நோய்களோ ஏற்படாது. ஆனால் வெளியில் இருந்து வரும் நுண்கிருமிகளால் பாதிப்பு அடையும். அல்லது உடலில் வேறு உறுப்புப்பாகங்களில் இருந்து சிறுநீரகத்தை வந்து பற்றிக் கொள்ளலாம். இதற்கு இரத்தமும் சிறுநீரும் வியாதிகளை எடுத்துச் செல்ல பயன்படுத்துகின்றது. இதைப் போன்று சிறுநீர் குழாய் மூலமும் வியாதி ஏற்பட இடம் உண்டு.

நாம் நாளாந்தம் பாவிக்கும் உணவில் கொழுப்பு பதார்த்தம் கூடிக்காணப்படின் அவை சிறுநீரக அணுக்களில் படிந்து தீங்கை விளைவிக்கும். எனவே கொழுப்புப்



பொருள்களை எடுப்பதை குறைத்துக் கொள்வது நன்று. தொடர்ந்து ஒருவருக்கு இரத்தக்கொதிப்பு இருந்தால் சிறுநீரகம் பெரும்பாலும் பாதிக்க (Renal Failure) இடம் உண்டு. சிறுநீரகம் தனது செயல் இழந்து அதன் குழாய்கள் சுருங்குவதுடன் அல்புமினும் வெளியேறும். அத்துடன் இரத்தத்தை பரீட்சித்துப்பார்க்கும் போது உப்பு அதிகரித்துக் காணப்படும். இதனால் நாட்கள் செல்லச் செல்ல கண், கால் பகுதியில் வீக்கநிலை தென்படும்.

இரத்தத்தை சுத்தப்படுத்தாவிடின் உடலில் காணப்படும் திசுக்கள் விஷத்தன்மை கொண்டதாக மாறி தீங்கை விளைவிக்கும். உயிர்ச்சத்து ‘B’ யை செயல்படுத்தும் இயல்பு சிறுநீரகத்தில் இருப்பதினால் நமது எலும்புப்பகுதிகளை பலப்படுத்துகின்றது. ‘ரெனின்’ என்ற ‘ஹோமோன்ஸ்’ சிறுநீரகத்தில் சுரப்பதினால் இரத்தத்தை சீராகவைத்திருக்க உதவுகின்றது. மேலும் சிறுநீரகத்தில் நோய் ஏற்படின் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். எலும்பில் இருந்து உருவாகும் இரத்த அணுக்களின் தோற்றத்திற்கு முக்கிய ஹோமோன்கள் சிறுநீரகத்தில் சுரக்கின்றது. எனவே சிறுநீரகத்தில் நோய் ஏற்பட்டு உரியவருக்கு ‘சோகை’ நிலை ஏற்பட இடம் உண்டு. சிலருக்கு சிறுநீரகமும் பெரிதாகி விடுவதும் உண்டு.

சிறுநீரகத்தில் பல உருவத்தில் கற்கள் காணப்படலாம். இவை பெரும்பாலும் யூறிக்கமிலம், கல்சியம் போன்றவற்றில் இருந்து உருவாகும். இவை சிறுநீரகக்குழாயை அடைக்கும் அல்லது குழாயில் ஒட்டிக் கொள்ளலாம். கற்களின் உருவத்தைப் பொறுத்து வேதனை புலனாகும். சிறுநீரகத்தில் கற்கள் ஏற்பட்டிருந்தால் சத்திரசிகிச்சையின்றி ‘Shock Lithotripsy’ முறையில் உடலுக்கு வெளியில் இருந்து அதிர்வலைகள் மூலம் உடைக்கப்பட்டு சிறுநீர் மூலம் வெளியகற்றலாம். இதனை தங்கள் வைத்தியர்கள் கூறிக் கொள்வர். எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனை முக்கியமாகும்.

சிலருக்கு சிறுநீர்கழிக்கும் போது மஞ்சள் நிறம் கொண்டதாகவும் ஓரளவு சூட்டுடனும் செல்வதுண்டு. இதையிட்டு யோசிக்க வேண்டியதில்லை. இந்நிலையைத் தவிர்க்க போதிய நீர் குடிக்கவேண்டும். பழவர்க்கம் போன்றவற்றையும் மரக்கறி, கீரைவகை ஆகாரங்களையும் நீராடுவதையும் வழமைக்கு கொண்டுவருதல் வேண்டும். இருந்தும் சில வியாதி நிலையிலும் இத்தன்மை ஏற்பட இடம் உண்டு. உ+ம் மஞ்சள் காமாளை (செங்கமாரி) குறிப்பிடலாம். எனவே எதற்கும் நோய் நிர்ணயம் முக்கியமாகும்.

நோயாளர் சிலரைப் பார்வையிடும் போது விதைப்பை வீக்கத்துடன் காணப்படுவதுண்டு. இந்நிலை நீர் தேங்கி இருக்கலாம் அல்லது அடிகாயத்தால் தாக்கம் அடைந்திருக்கலாம். அல்லது இரத்தம் கட்டிபட்டு இருக்கலாம். இந்நிலையை நன்கு பரீட்சித்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வைத்தியர்களை நாடிச் செல்வது மிக நன்மை பயக்கும். எதற்கும் நோயை எது என்பதை நிர்ணயிப்பது முக்கியமாகும்.

உ+ம் யானைக்கால் வியாதி உள்ளோருக்கும் விதைப்பை வீங்கும் நிலை உண்டு என்பதையும் அறிய முடிகின்றது.

மேலும் சில வியாதியுள்ளவர்களைப் பார்வையிடும் போது அடிக்கடி சிறுநீர்போய் கொண்டிருப்பதாக கூறுவர். இந்நிலை பெரும்பாலும் 55-60 வயதினராக இருப்பர். இதனை நோக்கும் போது சிறுநீரைத் தேக்கி வைத்திருக்கும் குழாய் இயங்க முடியாமல் இருக்கும். சிறு நீர்பையின் அடியில் காணப்படும். சுரப்பி (Prostate) பெரிதாவதாகும். தேக்கத்தில் உள்ள நீர் முழுவதும் ஒரேமுறையில் வெளியாகாமல் இருக்கும். சலம் கழிக்கும் போது முக்கிய வண்ணம் இருப்பர். சிலவேளையில் சலம் வராமலும் கஸ்டப்படுவார்கள். சிறுநீர் போகாமல் சொட்டு சொட்டாகவும் கழியலாம். ஆனால் சிறுநீர்பையில் தேங்கிய நீர் அப்படியே இருக்கலாம். மீண்டும் மீண்டும் சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்ச்சி தென்பட்டவண்ணம் இருக்கும். இந்நிலையில் கஸ்டப்படுவோர் உடன் தங்கள் வைத்தியர்களிடம் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது வைத்தியசாலைக்குச் செல்லாம்.

மேலும் இன்னும் சிலருக்கு சிறுநீரானது வெளித்துவாரத்தின் நுனியில் இருப்பதற்குப் பதிலாக சிறுநீர்குழாயின் அடியில் இருக்கும். இதனால் நீர்க்கசிவு ஏற்பட்டு உள்ஆடையை நனைத்தபடி இருக்கும். இதுவும் ஒரு குறைபாடாகும். தொடரும்...


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909





Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre

**Certified Food Handlers**

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



**Food Handler Training available for:**
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

**CALL TO REGISTER:**
**(416) 744 (HELP) 4357**

**Winter Food and Fund Drive** Started from Nov.15, 2010 Mar.15, 2011
"No One Should Go Hungry"

**HELP US TO HELP THE HELPLESS!**
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# பாத பூசை

தாய், தந்தை, குரு மற்றும் குடும்பத்திலுள்ள பெரியவர்களின் கால்களில் விழுந்து வணங்குவது மரியாதை நிமித்தமான சம்பிரதாயமாக தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கமும் வழக்கமுமாகும். இது பெரியோரை, மூத்தோரை கனம் பண்ணுதலாகும். பெரியோரை தமராகக் கொள்ளுதல் நமக்கு நலம் தரும், வளம் தரும். நம்மீது அன்பும் அக்கறையும் காட்டுவோரின் காலில் விழுந்து வணங்குவது கண்மூடித்தனமான செயலன்று. நல்ல நாட்களிலும், விசேட நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் அவ்வாறு வணங்குதல் நமது மரபாகும். ஆனால் நம்மீது அன்பு காட்டாதவரின் கால்களிலும் சில சமயம் விழுந்து தொலைக்க வேண்டியுள்ளது. சுய நலத்திற் காகவும் கட்டாயத்தின் பேரிலும் அவ்வாறு செய்ய வேண்டியுள்ளது. சில அரசியல் வாதிகள் மேடைகளில் பலர் முன்னிலையில் தலைவரின் காலில் விழும் பழக்கத்தை வளர்த்து இதனை கேலிக்கூத்தாக ஆக்கிவிட்டனர். காலைப்பிடித்தால் தான் கடைத்தேறலாம் என்பது அவரது கொள்கை போலும். இது அநாகரிகமானது. காலில் விழுந்து வணங்கும் போது ஆசி கூறுபவர் பெருமைக்குரியவராக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவரது வாழ்த்து நம்மை வாழ வைக்கும். ஆனால் இளைய தலைமுறையினர் காலில் விழுதலை அவமானமாகவும் அடிமைத்தனமாகவும் கருதுவர்.



கால், பாதம், திருவடி இதுவே நம்மை தாங்கி நிற்கின்றது. தனக்குவமை இல்லாதான் தாள் என்றும், மலர்மிசை ஏகினான் மானடி என்றும் இறைவனது திருவடியின் பெருமையை கூறியுள்ளார் வள்ளுவர். கால் என்பதற்கு காற்று என்ற பொருளும் உள்ளது. காற்று வரும் சாளரங்கள் காலதர் எனப்படும். இறைவன் தனது நடனத்தில் குஞ்சிதபாதம் தூக்கி காண்பிப்பதற்கே காற்றில் கவனமாக இரு என குறிப்பிடுவதாக யோக நுட்பமான பொருள் உரைப்பார்கள். சிவனின் அந்த அசைவு நமது சுவாச சஞ்சரிப்பையே உணர்த்தும். வாசி என்றால் உயிர்க்காற்று என்று பொருள். அதைத்தான் இடம் வலமாக மாற்றி சிவா எனும் மந்திரச் சொல்லாக இறைவனின் பெயராக அமைத்துள்ளனர் நம்முன்னோர்.

பாத பூசையின் பின்னால் மறைந்துள்ள சங்கதி என்னவெனில் ஆரண்யங்களில் வாழ்ந்த மகரிஷகள் தவத்தில் ஈடுபட்டிருக்கும் போது தங்கள் சீடர்களைப் பார்த்து காலை அசைத்துக் கண்களால் வினாக்களைத் தொடுப்பர். அந்தக் கால அசைவுக்கு ஒழுங்காகப் பிராணாயாமம் செய்தாயா என்று பொருள். சீடன் வந்து அந்தக் காலைத் தொட்டு வணங்கினால் பிராணாயாமம் செய்தாச்சு என்று பொருள். காலை வணங்குதல் குறித்த பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

சமயங்களுக்கு மார்க்கம் என்பது பொதுப்பெயர். இதற்கு வழி என்பது பொருள்.

வழிபாடு என்றால் இந்த வழியில் நடக்கிறேன் என்று கூறுவதாகும். சரியான வழியில் நடப்பது நல்ல கொள்கைகளை ஏற்பது என்றெல்லாம் உணர்த்தும் குறியீடு இது. நிற்பதற்கு கால்கள் அவசியம் என்றாலும் கொள்கை வழி நிற்பதற்கும் நடப்பதற்கும் மனமே பிரதானம். பெரியவர்களின் பாதங்களை பூசிப்பது என்கின்ற வழக்கமும் நமது சம்பிரதாயங்களில் உண்டு. அவற்றிற்கு அபிஷேக ஆராதனை செய்து சந்தனம் பூசி, மலர்களால் அர்ச்சித்து வழிபடுவர். இதனை பாத பூசை, பாத நமஸ்காரம், திருவடி வழிபாடு எனவும் கூறுவர். இதன் அடிப்படைக் கருத்து "அடியொற்றி நடத்தல்" என்பதேயாகும்.

இதன்படியே மகான்களின் பாதக் குறடுகள் போல் செய்து அவற்றை பூசிப்பது நடைமுறையில் உள்ளது. இராமபிரானின் பாதுகையை பரதன் பூசித்தான் என்பது இதிகாசச் செய்தி. இறைவனின் பாதங்களை தலைமேல் சூட்டி சென்னிப்பத்து பாடினார் மணிவாசகர். இதன் மூலம் கண்ட கண்ட இடங்களிலும் நடந்து செல்லும் கால்களும் கடவுளுக்கு சமமானவை என்பது விளங்கும். ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு ஆன்மா என்பது சைவசமயக் கொள்கை. எனவே ஒரு ஆன்மா இன்னுமொரு ஆன்மாவை வீழ்ந்து வணங்குவது பகுத்தறிவுக்கு உகந்ததா? என்பது சிந்தனைக்குரியது.



நா. க. சிவராமலிங்கம்


HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

Coming This Fall...
Tridel's New Project



$679,900



Morningside/Ellesmere
Detached 2 Storey Family Home
Close To Uoft Campus
5+3 Bedrooms, 2 Washrooms

$159,800



McCowan/Sheppard
Spacious Corner Suite
2 Bedrooms, 1 Washroom

$199,000



Warden/14th Ave.
Totally Finished -
900Sf Of Office Space
2 Offices; 1 Washroom

$494,900



Markham/Denison
Beautiful Home In High Demand Area
4 Bedrooms, 3 Washrooms

$489,900



9th Line & 16th Ave
Beautiful Detached Home
High Ceiling
4 Bedrooms, 3 Washrooms
Backs Onto Park. Close To Schools.

$679,900



East Gwillimbury
5 Acre Treed Lot With Pond& Deck.
Approx 2250 Sq Ft Bungalow
3+1 Bedrooms, 2 Washroom

Call us for more details...
5215 Finch Ave. E. Suite 203,Toronto, ON.,M1S 0C2
Bus:(416)321-6969

VISIT sivahomes.com for more listings

*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# நித்திரை - தொடர்ந்தும் ஆய்வு நிலையில்!

‘நித்திரை வந்திட்டு, இனி படுப்பம்’, உனக்கென்னும் நித்திரை வரேல்லையா?, ‘நித்திரை விழிக்கிறதெண்டா பெரிய பிரச்சினையான விடயம் தான்’, படிக்க வெண்டு விட்டா நித்திரையா கொள்ளு கின்றாய்’ இப்படி தினசரி எத்தனை சொல்லாடல்கள். இந்த நித்திரைக்காக எழுகின்றன. தினசரி குறிப்பிட்ட நேரத்தில் மணிக்கூட்டைப் பார்க்கிறோம். கொட்டாவி விடுகின்றோம். படுக்கையில் படுத்துக் கொண்டே விளக்குகளை அணைக்கின் றோம். கண்களை மூடிக்கொண்டு நித்திரையின் வரவுக்காக காத்திருக்கின் றோம். நாம் நித்திரை கொள்வதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிகள் பலவாகும்.

ஆங்கிலத்தில் ‘Sleep’ என்ற சொற்பாவனை யில் உள்ள இந்நித்திரை தமிழில் பல சொற்களில் பயன்பாடுள்ளது. உறக்கம், துயில், தூக்கம், நீடமைதி, துஞ்சுதல் இப்படி பல சொற்கள் மொழியின் செழுமை கூறுவன. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இச்சொற்கள் பயன்பாடுள்ளன. தொடர்ந்தும் ஆய்வுக்குட்பட்டுள்ள இந்நித்திரை ஏன் ஏற்படுகிறது? இது ஏற்படாது விட்டால் என்ன நிகழும்? ஆளுக்கு ஆள் நித்திரையில் மாற்றம் நிகழ காரணங்கள் என்ன? நித்திரையில் சிலருக்கு குழப்பங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? என்பதில் இன்னும் சில பகுதிகள் விளக்கம் பெறவில்லை.

உடல் நலம், உளநலம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ள நித்திரை பற்றி 1930 முதல் ஆய்வு செய்து வருகின்றனர். இதற்கு முன்பு பல தத்துவ ஞானிகளும் நாம் ஏன் நித்திரை செய்கிறோம்? என்பதில் குழம்பியிருந்தனர். மேற்படி ஆய்வுகள் விஞ்ஞான விளக்கங்களை தந்து உதவின. நித்திரை பற்றி எண்ணும் போது கம்பரா- மாயணத்தில் கும்பகர்ணன் பாத்திரத்தில் நீண்ட நித்திரையின் நினைவுதான் வரும். பலமாதங்களாக நித்திரை கொள்ளும் பாத்திரம் அது. இதன் பின்பே நீண்ட நேரம் நித்திரை கொள்பவர்களுக்கு கூட ‘கும்பகர்ண நித்திரை’ என்று பெயரிடப்பட்டது. எனவே, நித்திரை பற்றி இலக்கிய குறிப்புக்கள் பல இருந்தாலும் சரியான தெளிவான குறிப்புக்கள் பின்பே எழுந்தமை 1975இல் Wilse Webb என்ற அறிஞர் மிகவும் தெளிவான இரண்டு முறைகளில் இதனை விளக்கினர். இதற்காக பலரை நித்திரை விழிக்க வைத்தும் நித்திரை கொள்ள வைத்தும் ஆய்வு செய்தார். முக்கியமாக இரண்டு நிலையிலும் மூளையின் செயற்பாடுகள், உடல் வெப்பநிலை, இதய துடிப்பு, மூச்சுவிடுதல் போன்றவற்றின் அளவுகள் எடுக்கப்பட்டன. அத்துடன் நித்திரை விழிப்பின் போது குரல் மாற்றம், தசைமாற்றம், மூளை அதிர்வுகள், விளையாட்டு, பரீட்சைகள் மூலம் ஏற்படும் மாற்றங்கள் அறியப்பட்டன. பலநாட்கள் தொடர்ந்து நித்திரையின்றி இருந்தால் உயிராபத்து நிகழலாமா? என்றும் ஆய்வு செய்யப்பட்டது.

நித்திரை செய்யும் போதும், நித்திரையற்ற நிலையிலும் ஒருவரை அறிய இரண்டு வழிகள் உள்ளன. அவை Electrophysiological Measures Electroencephalogram. (EEG) அத்துடன் இதயத்தை அளக்க (EKG) இரத்த அழுத்தம், வெப்பம், கண்ணசைவு என்பவற்றை அளக்க (EOG) தசை அசைவுகளை அளக்க (EMG) என்பன பயன்பட்டன. எனவே நித்திரைக்காக செய்யப்பட்ட ஆய்வுகள் பலவாகும். இத்துடன் மூச்சு விடும் அளவும் இணைக்கப்பட்டது. மூளையின் அதிர்வுகளை ALPHA, BETA நடவடிக்கை மூலம் அறிந்து முடிவுகள் எடுக்கப்பட்டன. பொதுவாக இரண்டு வகையான நித்திரை வகைகள் உள்ளன. இது 1953இல் வகைபிடப்பட்டது. அவை: Rem (Rapid Eye Movement) நடவடிக்கை, NREM (Non Rem) நடவடிக்கை, NREM நடவடிக்கையில் 4 படிமுறைகள் உள்ளன. முதல் நிலையில் நித்திரைக்கு செல்லும் ஒருவர் சீரற்ற நிலையில் காணப்படுவார். சற்று கண்ணயர்ந்து போவார் எனினும் விரைவில் எழுந்து விடலாம். தொலைபேசி சத்தம் வந்தாலும் எழலாம். இரண்டாவது நிலையில் சற்று ஆழமான நித்திரை ஏற்படுகிறது. விரைவான அலைகளின் தொழிற்பாடு நிகழும். மொத்த நித்திரையில் 50வீத அளவு இதில் செல்கிறது. இதன் பின்பு மூன்றாவது நிலையில் இன்னும் நித்திரை ஆழமாகின்றது. இது 10வீதமாக இருக்கும். இறுதியில் மிக ஆழமான நித்திரை ஏற்படும். இதில் ஒருவரை எழுப்புவது கடினம். 15வீதமான அளவுகள் இங்கு கடைசியாக தோன்றுவது (REM) நடவடிக்கையாகும். இதுவே கனவு தோன்றும் நிலையில் உள்ளது. கண்ணளவு முன் பின்னளவும் நிகழும். இதுவே ஆழ்துயில் ஆகும். நாள் முழுவதும் இரண்டு வகைகளும் மாறி நிகழும். 90 நிமிடங்கள் ஒரு வட்டத்தில் நீடிக்கும். பின்பு பழைய ஒழுங்கில் திரும்பும்.



ஆறு மாதக் குழந்தை 13-16 மணிநேரம் நித்திரை கொள்கிறது. 2-5 வயது வரையில் 11 மணிநேரம் 6-16 வயதுவரையில் 11-8 மணி நேரமும் நித்திரை கொள்கிறது. சராசரியாக ஒருவர் 8 மணிநேரம் நித்திரை செய்கிறார். எனினும் 60 வயதுக்கு மேல் இது படிப்படியாக குறைவடைகிறது. காரணம் இவர்கள் பல தடவைகள் எழுந்து படுக்கின்றார். வளர்ந்தவர்கள் 2 மணி நேரம் REM நித்திரை கொள்வர். இது மொத்த நித்திரையில் 25வீதமாகும். ஆனால் பிறந்த குழந்தையின் REM நித்திரை 50 வீதமாகும். அதாவது மொத்த நித்திரையில் ஆழ்துயிலில் நாம் 2 மணிநேரமே எமது தூக்கம் இழக்கப்பட முடியாததொன்று. எனினும் நித்திரையின் போது பல ஒழுங்கீனங்கள் இருந்தாலும் சில முக்கியமானவை. இதில் Dyssomnias, Parasomnias என்பவை முக்கியம். முதலாவது வகையில் நித்திரையின்மை (Insomnia) பொருத்தமற்ற வேளையில் நித்திரை (hypersomnia) என்பன ஏற்படும். இரண்டாவது பிரிவில் நித்திரைப்பயம், சிறுநீர்கழித்தல், நித்திரையில் நடத்தல் (Sleepwalking) ஏற்படும். நித்திரையின்மை, பதட்டம், பயம், மனஅழுத்தம், உளச்சோர்வு, போதைவஸ்து பாவனை என்பவற்றில் ஏற்படலாம். சிலருக்கு Sleepapnea என்ற நிலைஏற்படலாம். ஒரு இரவில் பலநூறு தடவை எழும்புவது நிகழும். 40 வயதுக்கு மேல் இது ஏற்படலாம். இதற்கு மூளையில் ஏற்படும் ஒழுங்கீனம் காரணமாகலாம். சிலர் பொருத்தமற்ற வேளையில் நித்திரை கொள்வர். பகலில் நல்ல நித்திரை கொள்வர். இதனை Narcolspy என்பவர். இன்னும் காரணம் அறியப்படவில்லை. சிலர் நித்திரையில் நடப்பார்கள். இதனை (Somnambulism) என்பர். சிறுவர்கள் மத்தியில் இது அதிகம், பரம்பரையாக நிகழலாம். படுக்கையில் சிறுநீர்கழித்தல் என்பது உடலியல் அல்லது உளவியல் காரணத்தால் எழலாம். சிலர் நித்திரை குறையில் பயத்துடன் எழுவார்கள். காரணம் இன்னும் தெரியாது. இதுவும் சிறிய வயதில் நிகழும்.

நித்திரை வருவதற்காக பல்வேறு முயற்சிகளில் பலர் ஈடுபட்டுவருவதும் அறியப்பட்டுள்ளது. நித்திரை கொள்வதற்கு செல்பவர்கள் எல்லோரும் நித்திரை செய்வதாகவும் கருதமுடியாது. பலநாட்கள் நித்திரை கொள்ளாமல் தொடர்ந்து இருந்தால் மட்டுமே கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கலாம். ஆக நித்திரை கொள்ளாமல் விடுவது மிகவும் அசாத்தியமான விடயமாகும். மூளையே நித்திரையை கட்டுப்படுத்துவதால் மூளை வேலை செய்யும் போது ஆய்வு செய்வதும் கடினமாக உள்ளதாம். எனவே சில பகுதிகள் இன்னும் முடிவு செய்யப்பட வில்லை. நித்திரை வருவதற்காக பல்வேறு ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ள. பலரது மேசைகளில் நித்திரை குளிசைகள் உள்ள போத்தல்களை காணமுடியும். 50 வயதுக்கு மேல் உள்ள 60 சதவீதமானவர்கள் நித்திரை குளிசைகள் எடுப்பதாக புள்ளிவிபரம் கூறுகிறது. தொடர்ந்து குளிசைகள் பாவித்தால் பின்பு மருந்துகள் இல்லாது நித்திரை வருவதில்லை. Valium என்ற பிரசித்தி பெற்ற நித்திரை குளிசை புழக்கத்தில் உள்ளது. உண்மையில் பாவித்தால் தீமைகள் அதிகமாகும். சிலர் படுக்கப்போகும்போது மது (Alcohol) எடுத்தால் உடன் நித்திரைவரும் என்று நம்புகின்றார்கள். மத்திய நரம்பு மண்டலத்தை சோர்வு செய்து நித்திரை வரப்பண்ணும் என்பதே அவர்களது நம்பிக்கை. ஆனால் இது உண்மைக்கு புறம்பானது. மது எடுப்பதால் ஆழ்துயில் (REM) இல்லாமலே போகும். இதனால் மறுநாள் களைப்பு ஏற்படும், சிந்திக்க முடியாது. சிலர் மதுவுடன் சில ஓய்வு மருந்துகளையும் எடுக்கின்றனர். இது சிலவேளை மரணத்தில் கூட முடியலாம்.

சிலருக்கு குறட்டை (Snoring) ஏற்படுவதனை அவதானிக்கலாம். இது மூச்சுக்குழலுடன் சம்பந்தப்பட்டதொரு பிரச்சனையாகும். சிலர் மூச்சுத் திணறி மரணித்தும் உள்ளனர். சத்திரசிகிச்சை செய்யப்பட்டு சுகமாகியும் உள்ளனர். சிலவேளைகளில் விவாகரத்தும் இடம்பெற்றுள்ளது. நித்திரையை குழப்பும் இக்குறட்டை பற்றிய ஆய்வு கூட தொடர்கிறது.

நித்திரையின்மையால் மூளை பாதிப்படை கின்றது என்று சிலர் கருதலாம். உண்மை அதுவல்ல. கவலையால் நித்திரை வராமல் இருப்பதே உண்மையான நிகழ்வாகும். நித்திரை வருவதற்கு ஓய்வு எடுத்தல், நித்திரை பயிற்சிகள், ஒரே நேரத்தில் நித்திரைக்கு செல்லுதல், இடத்தினை மாற்றிப்படுத்தல், சிறந்த உடற்பயிற்சி செய்தல், நூல் வாசித்தல், குறிப்புக்களை தயார் செய்தல் போன்ற பழக்கங்களை ஏற்படுத்தலாம். எப்படி எனினும் தொடர்ந்தும் நித்திரை பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்த வண்ணமுள்ளன.



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# இன்ப வாசகம்

அன்பின்றி இன்பம் அடைதல் அரிதாகும்
என்பதைக் காணார் இலர்.

அன்பு இல்லாது இன்பத்தைத் துய்க்க முடியாது என்பதை அனுவபத்தாற் கண்டறியாத மக்கள் இவ்வுலகத்தில் இலர்.

அன்பின்றி இன்பத்தைத் தேடி அலைவார்பின்
துன்பத்தில் வீழ்வர் சுழன்று.

உலக வாழ்க்கைக்கு ஆதாரமாகவுள்ள அன்போடுகூடிய இன்பத்தை விடுத்து, (வன்முறை வழிகளில்) இன்பத்தை அனுபவிக்க முயல்பவர் அலைவுற்று ஈற்றில் துன்பத்தில் சிக்குண்டு தவிப்பர்.

எதுவின்பம் என்றே இதமாகக் காட்டிப்
பதமாக்கல் வாசகத்தின் பண்பு.

முறையான இன்பம் எது என்று தெரியாத மக்களுக்கு அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் உணர்த்தி, அவர்களைப் பக்குவப் படுத்துதல் திருவாசகத்தின் இயல்பாகும்.

அமுதாய இன்பச் சிவமூறும் அன்புத்
தமிழே திருவா சகம்.

அமுதம் போன்ற இனிமையுடைய இன்பத்தைத் தருகின்ற சிவனருள் ஊற்றெடுக்கும் அன்புத் தமிழே திருவாசகம் ஆகும். (அன்பு ஆகிய தமிழே திருவாசகம். அன்போடு அதனைப் படிக்கையில் சிவசம்பந்தமான இன்பம் அதில் ஊறிவரும். அது அமுதம் போன்ற இனிமையுடையது.)

அன்பால் சிவக்கடலை ஆசிரியர் தான்கடைந்தே
இன்பமுது தந்தார் எமக்கு.

அன்பாகிய மத்தினாலே சிவமாகிய பாற்கடலை ஆசிரியராகிய மணிவாசகப் பெருமான் தானே தனித்து முயன்று கடைந்து இன்பமாகிய அமுதத்தைப் பெற்று எமக்கெல்லாம் தந்தருளினார். (பாற்கடலை முன்பு தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து கடைந்தே அமுதம் எடுத்தார்கள். மணிவாசகப் பெருமானோ தானே தனியாகச் சிவகடலைக் கடைந்து அமுதம் எடுத்தார் என்பதாம்.)

படிக்கப் படிக்கப் பசிக்கின்ற இன்பம்
வடிக்கும் திருவா சகம்.

கற்கக் கற்க மேலும் மேலும் அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆவலைத் தூண்டும் தெளிந்த இன்பத்தை வழங்கும் இயல்புடையது திருவாசகம். (பசிக்கின்ற - தெவிட்டாத, வடிக்கும் - மாசுகளைப் போக்கிச் சீராக்கும்.)

பொருளின்பம் நன்கு பொருந்துஞ்சொல் இன்பம்
அருளின்பம் ஊட்டும் அது.

திருவாசகம் எமக்கு மூவகை இன்பத்தை ஊட்டுகின்றது. ஒன்று பொருள் இன்பம். இரண்டு சொல் இன்பம். மற்றையது திவாசகத்தைப் படிப்பதனால் எமக்கு இறைவனால் வழங்கப் பெறுகின்ற அருள் இன்பமாம். (திருவாசகம் என்கின்ற பக்தி இலக்கியத்தில் இருக்கும் சொற்சுவை பொருட்சுவை தருகின்ற இன்பத்தோடு பக்திச்சுவையால் விளைகின்ற அருளிலே குளிக்கும் மேலான இன்பமும் கிடைக்கும் என்பதாம். அதுவே முன்னைய குறளிற் கூறப்பட்டுள்ள வடிக்கப்பெற்றுத் தரப்படும் இன்பமாகும்.)

இருந்துழலும் சிற்றின்பர்க் கேற்றபே ரின்ப
மருந்தளித்தல் வாசகத்தின் மாண்பு.

சிற்றின்பத்திலே அமிழ்ந்து அல்லற்படுபவருக்குத் தக்க பேரின்பத்துக்குரிய வழியைக் காட்டி அவர்களுக்கு வீடுபேறு அளித்தல் திருவாசகத்தின் சிறப்பாகும். (இன்பம் சிற்றின்பம் பேரின்பம் என இருவகைப்படும். உலகியலுக்குரிய சிற்றின்பத்தில் ஆன்மாக்கள் பலவித துன்பங்களை அனுபவிக்கின்றன. அதனாற் சிற்றின்பம் நோயின்பம் ஆகின்றது. நோயைத் தீர்க்கும் மருந்தாகப் பேரின்பம் அமைகின்றது. அதனைத் திருவாசகம் வழங்குகின்றது. உழலுதல் - வருந்துதல். பேரின்பம் - முத்தி இன்பம். மாண்பு - சிறப்பு.)

கைதனில் இன்பம் இருக்கக் கதிதேடி
வையகம் வாடும் மருண்டு.

அத்தகைய பேரின்பத்தைத் தருகின்ற திருவாசகம் கையிலே இருக்க, தேடி அலைந்து பொய்யான வழிகளை உய்யும் வழிகளாகக் கொண்டு மயங்குவதால் இந்த உலகத்து மக்கள் துன்புறுவர். (கதி - உய்யும் வழி.)

ஏதமிலா இன்பத்து வாசகத்தை எப்பொழுதும்
ஓதிவரின் உண்டாம் உயர்வு.

குற்றமில்லாத இன்பத்தைத் தரவல்ல திருவாசகத்தை நாம் எப்பொழுதும் படித்துவரின் அப்பயிற்சியால் எமக்கு உயர்ச்சி உண்டாகும். (ஏதம் - குற்றம்.)



கவிஞர் வி. கந்தவனம்




Niru Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
BRAND Niru
300g.e

# குவாண்ரம் பிறந்த கதை

## நுண்ணுலகியல் 17

சென்ற தடவை அலை ஒன்றின் இயக்கத்திற்கான வேகத்தின் சமன் பாட்டினைத் தந்திருந்தேன். விஞ்ஞானத் தனமாகக் கருத வேண்டாம். இந்தச் சமன்பாடுதான் அலைகள் பற்றிய ஆரம்பத் தெளிவினை அறிவியலாளர்களுக்குக் கொடுத்தது. அதனால்தான் இச்சமன் பாட்டினையும் நான் குறிப்பிட வேண்டி வந்தது. இனி மேலே விடயத்திற்கு வருவோம். மீண்டுமொரு தடவை அச்சமன்பாட்டை நினைவுபடுத்திக் கொண்டு தொடருவோம்.

கதி = அலைநீளம் அதிர்வெண்

என அலைநீளத்தினையும், F என அதிர்வெண்ணையும் V எனக் கதியையும் அடையாளமிட்டுக் கொள்வோமே ஆயின் தொடர்பினைப் பின்வருமாறு காட்டலாம், எழுதிக் கொள்ளலாம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 95**

V = F

அலையியக்கத்தினைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கிய சமன்பாடு. இதனைக் கொண்டு அலைகள் பற்றிய பல ஒப்பீடுகளைக் கூறலாம். அலைகள் பற்றிய படிப்பு இல்லை என்றாலும் இச்சமன்பாட்டின் அடிப்படையில் ஒரு விபரத்தை, எமக்குத் தேவையானதை மட்டும் கூறுகின்றேன்.

கதி மாறாது இருக்குமாயின் அலைநீளம் கூடும் போது அதிர்வெண் குறையும். மறுதலையாக, அலைநீளம் குறையும் போது அதிர்வெண் பெரியதாகும். இந்தச் சிறப்பான இயல்பானது மின்காந்த அலைகளில் எமக்கு உதவக் கூடியதான பல தகவல்களைத் தருவதை ஆய்வாளர்கள் கண்டு கொண்டார்கள்.

மின்காந்த அலைகளின் கதி மாறாத ஒன்றென மாக்ஸ்வெல் தனது சமன்பாடுகளின் உதவியால் நிறுவினார் என்பதை நான் முன்னரே உங்களுக்குக் கூறியிருந்தேன். அந்த வகையில். அதிர்வெண்களையும் அவற்றிக்கு ஒத்த அலை நீளங்களையும் கொண்டு மின்காந்த அலைகளில் பலவகைகளை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தார்கள். மின்காந்த அலைகளாக இருந்தாலும் அலைநீளங்களின் வித்தியாசமான வீச்சில் இருக்கும் வெவ்வேறு அலைகளின் இயல்புகள் வித்தியாசமாக இருந்தன. இந்த அதிசய இயல்பே விஞ்ஞானத்தின் வளர்ச்சியிற்கு உதவியது. தேவைகருதி மின்காந்த அலைகளின் அந்த வகைகளை அறிந்து கொள்வோம். வசதியாக, அதிர்வெண்களின் கணக்கிலே அவற்றினைப் பார்ப்போம். அதிர்வெண் மிகவும் குறைந்து அலைநீளம் கூடியவையாக வானொலி அலைகள் இருக்கின்றன. இந்த வானொலி அலைகளின் அதிர்வெண் வரிசையில்தான் நாம் சாதாரணமாகக் கேட்டுக்கும் வானெலியின் அலைகள் வருகின்றன. இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். நாம் காதுகளில் கேட்கும் சத்தம், ஒலி என்பவற்றிக்கும் இந்த வானொலி அலைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த வானொலி அலைகள் மின்காந்த அலைகள். சாதாரண ஒலியலைகளோ நெட்டலைகள். (நீள்பக்கமாக, ஒலி போகும் திசையிலேயே துணிக்கைகள் அதிர்கின்றன.) அடிப்படை அமைப்பிலேயே வேறு வேறானவை. ஒலியலைகள் காற்றின் துணிக்கைகளின் அதிர்வினால், அதாவது குழம்பல்களினால் முன் செல்கின்றன. அதனால் காற்று (அல்லது வேறு ஒரு ஊடகம்) தேவையாகின்றது. ஆனால் வானொலி அலைகள் மின்காந்த அலைகளாக இருப்பதனால் சக்தியதிர்வுகளினாலான குறுக்கலைகள் இவை செல்வதற்கு எந்த ஒரு இடை ஊடகமும் தேவையில்லை. இவை காற்றலைகளில் மிதந்து வருவதில்லை. வெற்றிடத்திலும் பயணித்துக் கொண்டு வருபவை. வானொலி அலைகளின் அலைநீளங்கள் மிகவும் பெரியனவாக இருப்பதனால் அவற்றின் அதிர்வெண்கள் சிறியனவாக இருக்கும் என்பதனை முன்னைய பகுதிகளின் உதவியுடன் நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

அடுத்து இருக்கும் வெப்ப அலைகளின் அதிர்வெண்கள், வானொலி அலைகளின் அதிர்வெண்ணை விட கூடியவையாக இருக்கின்றன. அவற்றின் அலைநீளங்கள், வானொலி அலைகளின் அலைநீளத்தை விடச் சிறியதாக இருக்கும். இவ்விதமே இனி வரும் கதிர்கள் அல்லது அலைகளின் அதிர்வெண்கள் வரிசைக் கிரமமாகக் கூடிக் கொண்டும், அலைநீளங்கள் குறுகிக் கொண்டும் செல்லும் என்பதை நினைவிற் கொண்டு ஏனையவற்றினை வரிசையாகக் கூறுகிறேன். வெப்பக் கதிர்களை அடுத்து மைக்குரோ கதிர்களின் அலைவரிசை காணப்படும். அதன் பின்னராக செந்நிறக் கீழ் கதிர்களின் அலைவரிசை காணப்படும். அதனையடுத்து எமது கண்களினால் பார்த்து அறியக் கூடியதான நிறங்களின் அலைவரிசை காணப்படும்.

எமது சாதாரண கண்களினால் பார்க்கக் கூடிய நிறங்களாக சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம் கருநீலம், ஊதா ஆகிய ஏழு நிறங்களுக்குமான அலைநீளங்கள், கதிர்கள் அல்லது அலைகளின் அலைநீள வரிசையில் மிகவும் சிறிய பகுதியில் இருக்கின்றன. இவற்றில் சிவப்பு நிறத்தின் அலைநீளம் மற்றய நிறங்களின் அலைநீளங்களை விடவும் பெரியதாகவும், அதிர்வெண் சிறியதாகவும் இருக்கும். மறுதலையாக, ஊதா நிறத்தின் அலைநீளம் மற்றய நிறங்களின் அலைநீளத்தை விடவும் சிறியதாகவும், அதிர்வெண் கூடியதாகவும் இருக்கும்.

அதிர்வெண் ஏறு வரிசையில் சாதாரண கட்புலன் நிறங்களுக்கு அடுத்து உயர்வாக புற ஊதாக் கதிர்களும், அடுத்து எக்ஸ் கதிர்களும் காணப்படும். இவற்றிக்கு எல்லாம் முடிவில் அதி கூடிய அதிர்வெண்களை உடைய காமாக் கதிர்கள் இருக்கும். இதுவே மின்காந்த அலைகளின் வகைகளும் பகுப்பும் எனப் பொதுப்படையாகக் கூறலாம். இயற்பியலில் இது பெரும் உதவியாக இருக்கின்றது. இவற்றினை நாமும் அடிப்படையாகக் கொண்டு எமது குவாண்ரம் பிறந்த கதையைத் தொடருவோம்.

அலைகள் பற்றிய விபரங்களை இத்துடன் நிறுத்திக் கொண்டு, அடுத்த தடவையில் இருந்து 19ம் நூற்றாண்டின் இயற்பியல் வளர்ச்சி பற்றி எமது பகுதியிற்கு தேவையானவை பற்றிப் பார்ப்போம். அடுத்த தடவையில் இருந்து குவாண்ரம் பிறந்த கதையின் திருப்பங்களை, சுவாரசியமாகப் பார்க்கலாம்.

சரி, செப்ரெம்பர் 15க்குகக் காத்திருப்போமா!

**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca




# தூத்துக்குடி...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

அடையாளங்களோ ஏதும் இல்லை. தடுமாறிக் கொண்டிருந்தபோது ஒரு சிறிய கல் மண்டபத்தில் இருவர் அமர்ந்திருப்பதைக் கண்டோம். வண்டியை நிறுத்தி அவர்களிடம் ஆதிச்சநல்லூர் இதுதானா என்று கேட்டோம். அதில், ஒரு கிழவர் எழுந்து வந்தார். ஆடு மேய்ப்பவர் என்பதை அவர் வைத்திருந்த வளைந்த அரிவாள் நுனி கொண்ட துரட்டியாலேயே சொல்ல முடிந்தது. தலையில் ஒரு துண்டு. தொடைக்குமேல் கட்டிய அழுக்கு வேட்டி. டயர் செருப்பு. சட்டை இல்லாத கரிய உடல் மெலிந்து உறுதியாக வெயில்பட்டு காய்ந்து கரிந்து ஒரு காட்டுச்சுள்ளி போல இருந்தது. கிழவர் அருகே வந்து, “இதுதான், எடம் இதுதான், ஆதிச்சநல்லூர். ஆனா இங்க ஒண்ணுமே கெடையாது. எல்லாத்தையும் மெட்ராஸுக்குக் கொண்டு போயிட்டாங்க. ஒண்ணுமே இங்க கெடையாது” என்றார்.

அங்கே குழிதோண்டியெடுத்த பொருட்களைக் கொண்டுசென்றபின் குழிகளையும் சுத்தமாக மூடிவிட்டார்கள். மூடிய குழிகள் மேலே நடந்தோம். கிழவர் என்னிடம், “பாத்திகள்ல? எப்டி போட்டுவச்சிருக்கானுக? ஒரு குறிப்பு



உண்டா? ஒரு அடையாளம் உண்டா? எடுத்த பொருட்களை அங்கங்க தொல்பொருள்துறை ஆபீஸ்களிலே பிரிச்சு பதுக்கி வச்சிருக்காங்க. என்ன செஞ்சிருக்கணும், இங்க ஒரு மியூசியம் கட்டியிருக்க வேண்டாமா? இங்க எல்லாத்தையும் வச்சு வேணுங்கிறவன் இங்க வந்து ஆராய்ச்சி செய்யச் சொல்லணும். அப்பதான் இந்த எடத்தோட முக்கியத்துவம் தெரியும். இது எப்பேர்பட்ட இடம் இதோட வரலாறு என்ன எல்லாம் வெளியே தெரியும். இப்ப ஆதிச்சநல்லூர்னா யாருக்குத் தெரியும்? நான் ஜனாதிபதிக்கு எழுதினேன். கவர்னருக்கு எழுதினேன். கலைஞருக்கு எத்தனையோ மனு கொடுத்திருக்கேன். யாருக்கு அக்கறை? ஒண்ணுமே நடக்கலை.”

எனக்கும் அது மிக ஆச்சரியமாக இருந்தது. ஏன் ஆதிச்சநல்லூரில் ஒரு தொல்பொருள் அருங்காட்சியகம் வைக்கக் கூடாது? ஒரு நிரந்தர தொல்பொருள் மையம் இங்கே உண்டு என்றே எண்ணியிருந்தேன். அந்த மகத்தான தொல்பொருள் புதைபூமி இப்படி கைவிடப்பட்டு திறந்து கிடப்பதை எண்ணவே ஆச்சரியமாக இருந்தது. ஆதிச்சநல்லூர் தொல்பொருட்களை ஏன் பல்வேறு இடங்களிலாக பிரித்து வைக்கவேண்டும். அவை ஆய்வாளர்களுக்கு உரியவை, சரி. ஆனால், அவை மக்கள் பார்வைக்கும் உரியவை அல்லவா? அவை மாபெரும் குறியீடுகள் அல்லவா? ஒரு சமூகம் தன் வேர்களை உணரும் ஆன்மீகமான பேரனுபவத்தை அளிக்க வல்லவை அல்லவா? குறைந்தபட்சம் ஆதிச்சநல்லூரில் அந்த அரும்பொருட்கள் எங்கே உள்ளன என்றாவது ஒரு குறிப்பு இருக்கலாமே?” என்கிறார் ஜெயமோகன். உண்மைதான். தமிழர்கள் வரலாற்றை மதித்து பாதுகாக்கும் அழகு இது!

அடுத்த இதிழில் கட்டபொம்மன் கோட்டை!

# இறைவனின் அக்கறை

நான் அக்கறைப்படும் ஒவ்வொன்றையும் பற்றி இறைவனும் அக்கறை எடுக்கிறார் என்பது எனக்கு நன்கு புரிந்தபடியால் கவலைப்படாது சந்தோஷத்துடன் இப்போ வாழ்கிறேன்.

உனது எல்லாப்பிரச்சனைகளையும் பற்றிய சகல விவரங்களும் பரந்தாமனுக்கு நன்கு தெரியும். நீ ஏன் அழுகிறாய், எவ்வளவு நாளாக அழுகிறாய், எதற்காக அழுகிறாய் என்பதெல்லாம் அவருக்கு அத்துபடி. என்னமாதிரியான பிரச்சனையுடன் நீ போராடுகிறாய். அதைச் சமாளித்து முன்னேறமுடியாது. எங்கு ஸ்தம்பித்து நின்று தடுமாறுகிறாய் என்பது மாதவனுக்குத் தெரியும். உன்னிடமிருந்து இறைவன் ஏற்கெனவே எடுத்துக்கொண்டவற்றுடனும் ஏன் தொடர்ந்து சண்டை பிடிக்கிறாய் என்பது அவருக்கு நன்கு தெரியும். எதற்காக மீண்டும் மீண்டும் நீ திரும்பப் போய் அப்பிரச்சனைகளைப் பொறுக்கியெடுக்கிறாய் என்பதை அவர் அறிவார். நீ இப்படிச் செய்வதுதான் மற்ற எல்லாவற்றிலும் பார்க்க சிறந்த நடவடிக்கை என நீ நினைத்து உன் செயலை நியாயப்படுத்திக்கொள்வதும் அந்தக் கடவுளுக்கும் தெரியும்.

நீ இப்போ எங்கு தரித்திருக்கிறாய், எங்கு போக உத்தேசிக்கிறாய், இன்னும் கூடத் தூரம் போயிருக்க வேண்டும் என அங்கலாய்க்கிறாய் என்பதும் இறைவனுக்கு நன்கு தெரியும். உனது மனதில் எழும் கேள்விகளுக்கும், ஏன்




அவற்றிற்கு உனக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்பதும் ஆண்டவனுக்கு

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

நன்கு தெரியும். உனக்கிருக்கும் சவால்கள் அவற்றைத் தீர்த்திட உனக்குள் பொதிந்திருக்கும் செய்திறன் ஆற்றலைப்பற்றி அவருக்குத் தெரியும். உள்ளும் புறமும் உன்னை நன்கு அறிந்த அவருக்கு தன்னுடன் ஏன் நீ தொடர்பாயில்லை என்பதன் உள்ளும் புறமும் விளங்கும், ஈஸ்வரன் உன்னை முற்றுமுழுதாய் அறிந்திருக்கிறார். இறைவனை உனக்குத் தெரியுமா என்பது முக்கியமில்லை. எனக்கு ஒருவரும் இல்லையே என நீ ஏங்கித் தவிப்பது உண்மை இல்லை என்பதை நீ அறிந்து கொள்வதுதான் முக்கியம். உனக்கு உன்மேல் இருக்கும் அக்கறையைப் போல இன்னொருவரும் எந்தநேரமும் உன்மேல் அக்கறை கொண்டிருக்கிறார். அவர்தான் உன்னைச் சிருஷ்டித்தவர் என்பது உனக்குச் சொல்லியா தெரிய வேண்டும்? எதன்மேல் நீ விசுவாசத்துடன் நம்பிக்கை வைத்தால் உனக்குத் தெரிந்தவை தெரியாதவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்பதும் இறைவனுக்குத்தெரியும்.

உனது பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பதில் உனக்கு மட்டுமே அக்கறை இருக்கிறது என்று இன்றுவரை நீ நம்பியிருக்கலாம். உனது அக்கறைகளைப்பற்றி அக்கறை கொண்டுள்ள இன்னொருவரும் இருக்கிறார் என்பதை இன்று உணர்ந்து கொள். அவரை ஆண்டவன் என நீ அழைப்பது முக்கியமானதல்ல. உனது பிரச்சனைகளின் பாரத்தைப் பகிர்ந்து உனக்கு உதவி செய்திட ஒருவர் இருக்கிறார் என்பது உனக்குத் தெரிந்திருப்பது தான் முக்கியம்.

**என்னிடம் அன்பும் அக்கறையும் கொண்டுள்ள ஒருவருடன் எனது பிரச்சனைகளை இன்றுமுதல் விசுவாசத்துடன் நான் பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 194

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# ஒரு பேரொளியின்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

மற்றொரு பெண்ணின் வலியை புரிந்து கொள்ள முடியும். தனது வாழ்வைப் பற்றி கவலைப்படாமல், பாதிக்கப்பட்ட பெண்ணின் வாழ்வுக்காக போராடும் போராளியாக Fereshteh உள்ளார். அவ்வளவு தூரத்திற்கு வாழ்வில் வலிகளை சுமந்து வலம் வருகின்றார்.

படம் முழுவதும் பெண்களின் வலிகளை இயக்குனர் இயல்பாக யதார்த்தமாக வெளிப்படுத்துகின்றார். புத்திஜீவி சஞ்சிகை ஆசிரியர் மனைவி இருக்க, மற்றொரு பெண்ணை அவரின் விருப்பின்றியே அடைய



முயல்தல் என ஒவ்வொரு காட்சியிலும் பெண்கள் எவ்வாறு சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை தெரியப்படுத்தியுள்ளார்.

எமது போரிலும் பல பெண் போராளிகள் உள்ளார்கள். இவர்களது வாழ்விலும் பல வலிகளை சுமந்து கொண்டுள்ளார்கள் என்பதை இப் படத்தினூடாக சிந்திக்க எமக்கு ஒரு சந்தர்ப்பம். இப் படத்தை இயக்கியிருப்பவர் Tahmineh Milani. தெகரான் பல்கலைக் கழகத்தில் கட்டிடக் கலைஞர் பட்டப்படிப்பை 1986 ல் முடித்துவிட்டு சிறிது காலம் கட்டிடக் கரைஞராக வேலை பார்த்தார். பின்னர் சில காலம் உதவி இயக்குனராக பணியாற்றிவிட்டு 1989 ல் தனது முதலாவது படத்தை இயக்கினார். 1960 ல் பிறந்த இவர், 1979ல் திரைக் கதை பயிற்சியினை முடித்தார். இவர் பல படங்களுக்கு திரைக்கதையாசிரயராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவரது 'இரு பெண்கள்' என்ற பட தயாரிப்புக்கான அனுமதிக்கு எட்டு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. The Fifth Reaction என்ற இவரது படத்துக்கு ஈரானிய 'இஸ்லாமிய கலாச்சார வழிகாட்டி' (Ministry of Culture and Islamic Guidance) அமைச்சு அனுமதி கொடுத்த பின்னரே படம் தயாரிக்கப்பட்டது. படம் வெளியான பின்னர் எழுந்த எதிர்ப்பால் இவரை 26 ஆவணி 2001ல் சிறையில் தள்ளிவிட்டார்கள். 2005 ல் மீண்டும் இவரது Unwanted Women என்ற படம் இவரை சர்ச்சையில் தள்ளிவிட்டது. 1996ல் இவரது படமான Kakado க்கு பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. இப் படத்தில் எட்டு வயது சிறுமி முக்காடு போடாமல் படத்தில் தோன்றியமையே இதற்கு காரணம். ஈரானிய தேசிய தொலைக்காட்சி நிறுவனம் இப்படத்திற்கு விளம்பரங்கள் அளிக்க மறுத்து விட்டன. மதத்தலைவர்களும் தங்களது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவித்தனர். ஈரானில் பெண்கள் கிஜாப் (முக்காடு) இல்லாமல் திரையில் தோன்ற முடியாது. ஆண்களை தொட்டு நடிக்க முடியாது. இது ஆண்களுக்கும் பொருந்தும். வீட்டில் நடக்கும் அந்தரங்கங்களை திரையில் தோற்றமுடியாது. பெண்கள் இருவிதமான சட்டங்களை சந்திக்கின்றார்கள். ஒன்று வெளியில் ஆண்களின் அரசினால் ஏற்படுத்தப்பட்டது. மற்றையது வீட்டினுள் ஆண்களால் ஏற்படுத்தப்பட்டது.


## இவரது படங்களின் பொதுத் தன்மைகள்

- பெண்மைக்கும், தாய்மைக்கும் உள்ள வேறுபாடுகளையும், பாதிப்புக்களையும் இவரது படங்கள் வெளிப்படுத்தியுள்ளன.
- சொத்து, பிள்ளைகள் உட்பட ஆண்களுக்கேயுரியது.
- சமூகம், சட்டம், குடும்பம் இவையனைத்தும் ஆண்களின் தலைமையின் கீழ் தான் செயற்படுகின்றன. இங்கு பெண்கள் அடிமைகளே.
- சமூக ஒழுக்கங்கள் பெண்களுக்கு மாத்திரமேயுரியவை.
- விவாகரத்தும் ஆண்களுக்கு சாதகமானவையே.
- பெண்கள் தங்களது சமூக வாழ்வியலிலும், தொழில்சார் வேலைத்தளங்களிலும், பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, தாயாக, சகோதரியாக, மனைவியாக, பிள்ளையாக செயற்படும் பொழுது, அவர்களது செயற்பாடுகளையும், சிந்தனைகளையும் தீர்மானிப்பவர்களாக ஆண்களே உள்ளனர். ஈரானில் நடைபெற்ற சமூக மாற்றம் என்பது பெண்களுக்கு எதிரானதே. இஸ்லாமிய சட்டம் கி.பி 700ம் ஆண்டிலேயே பெண்களுக்கு வாக்குரிமை, கருவைக் கலைக்கும் (4 மாதங்களுக்கு உட்பட்டது) உரிமை போன்றனவற்றை வழங்கியிருந்தது. தலிபானும், முஸ்லீம் மதவாதிகளும் பெண்கள் பாடசாலைக்கு செல்வதையும் தடை செய்துள்ளார்கள்.
- பாத்திரங்களுக்கடையிலான சமத்தன்மையூடாக பெண்கள் மீதான அடக்குமுறையை வெளிப்படுத்துகின்றார்.
- இவரது படங்களில் பெண்கள் புத்திஜீவிகளாகவும், படித்தவர்களாகவும் காட்டப்படுகின்றனர்.
- .இவர் ஓர் சமூகப் போராளியாகவும் செயற்படுகின்றார். இவரது படங்களில் வரும் பெண் பாத்திரங்கள் ஆண்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு தம்மாலான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.
- ஆண் பாத்திரங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்பில் ஓர் வாய் பேசமுடியாத ஊமைகளாக செயற்படுவதாக காட்டியுள்ளார். இவர்களிடம் குற்ற உணர்வில்லாமல், ஒரு வித பெருமிதம் கொண்ட தன்மை காணப்படுகின்றது. இது ஓர் மனோ நோய் என்பது இவரது வாதம்.
- பெண்கள் கல்வி, பொருளாதார மேம்பாடு அவசியம் என்பதனை வலியுறுத்துகின்றார்

***HIDDEN HALF*** (மறைக்கப்பட்ட மறுபாதி) படத்தை இயக்கியமைக்காக இவர் சிறையிலடைக்கப்பட்டார்.


# ஒரு போராளியின் கதை

## *Hidden Half* (மறைக்கப்பட்ட மறுபாதி) ஈரான்



### வானரன்

ஒரு மாலைப் பொழுது. தனது குழந்தைகளுக்கு செய்ய வேண்டியவற்றை செய்து கொண்டிருக்கும் பொழுது கணவன் உள்ளே வருகின்றான். 'எனது உடுப்புக்களை எடுத்து வை' வெளியூர் செல்ல வேண்டும்', அதற்கான வேலைகளை செய்து கொண்டிருக்கும் பொழுது கணவன் பிள்ளைகளுடன் விளையாடுகின்றான். கணவன் உணவு உண்ணும் பொழுது 'நீங்கள் எங்கு என்னத்துக்கு செல்கின்றீர்கள்? என அறிந்து கொள்ளலாமா?' எனக் கேட்கின்றாள். இவர்களுக்கான உரையாடல் ஒரு அந்நியத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. ஈரானில் பெண்கள் மிக மோசமாகவே நடாத்தப்படுகின்றார்கள். ஈரான் ஆண்களின் உலகம். இப் பெண்மணி ஒரு படித்த பெண். அதே போல் கணவனும் ஒரு புத்திஜீவி. இவ்வாறான தம்பதிகளிடம் உரையாடலின் போது ஒரு அந்நியத் தன்மையிருந்தாலும் அகத்தில் ஒரு நெருக்கம் இருக்கும். கணவனும் அவளது கேள்விக்கு மதிப்பளித்து பதிலளிக்கின்றான். ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து ஒரு அழைப்பு. சிறையிலிருக்கும் ஒரு பெண்மணியை விசாரித்து உடனடியாக தண்டனை வழங்கவேண்டும். ஏற்கனவே கணவனின் பெட்டியில் உடுப்புக்களை அடுக்கும் பொழுது விசாரிக்கப்படவுள்ள பெண்மணியின் விபரங்களை வாசித்தமையினால், ஒரு விடயத்தை மட்டும் கணவனிடம் கூறுகின்றாள். 'தயவு செய்து எனக்காக, அப் பெண்ணின் பக்க கதையையும் கேளுங்கள்'. இதுவே அவள் கூறியது.




தான் தங்க வேண்டிய விடுதியின் அறையில் தங்கிய போது இரவு உணவு அருந்த வருமாறு ஒரு தொலைபேசி அழைப்பு இவரின் சகாவிடமிருந்து வருகின்றது. குளித்து விட்டு உடுப்பை எடுக்க பெட்டியை திறந்த பொழுது ஒரு கடிதம் மேலே இருக்கின்றது. அது அவரின் மனைவியிடமிருந்து கையெழுத்தில் அடையாளம் கண்டு கொள்கின்றார். 'அன்புடையவரே, இக் கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கலாம். நீங்கள் ஒரு பெண்மனியை விசாரிக்கவுள்ளீர்கள். அப் பெண்மணிக்கு நீதி தவறிழைக்கக் கூடாது. அப் பழி என் அன்புக்குரியவருக்கு வந்துவிடக் கூடாது. அதனால் நீங்கள் அறிந்திறதா எனது கதையைக் கூறுகின்றேன். இதனைப் படித்த பின் நீங்கள் என்னை வெறுக்கலாம். ஆனால் எனக்கு உங்கள் மீதான அன்பும் மரியாதையும் அவ்வாறே இருக்கும். எனது விருப்பம் அப் பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே' இவ்வாறு அக் கடிதம் தொடர்கின்றது. அதன் பின்னர் மனைவியான Fereshteh கதை தொடருகின்றது. 20 வருடங்களுக்கு முன்பு அதாவது 1978களில் பல்கலைக்கழகத்தில் படித்த போது ஷா வுக்கு எதிராக புரட்சி வெடிக்கின்றது. இடது சாரிகள் பல்கலைக்கழகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அவர்களுக்கு எதிரான படைகள் அவர்களை அளிக்கவும் செய்கின்றார்கள். Fereshteh க்கும் இடது சாரியினருடன் உறவு ஏற்படுகின்றது. துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பது போன்ற பல போராட்டங்களில் இவர்கள் ஈடுபடுகின்றார்கள். இதன் விளைவு தலைமறைவு வாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். பலர் வெளிநாடுகளுக்கு சென்று விடுகின்றனர். ஒரு வயது முதிர்ந்த இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் Fereshteh ஐ தெஹரான் பல் கலைக்கழகத்தில் சந்தித்துள்ளார். அவர் Fereshteh க்கு தஞ்சம் கொடுக்க முன்வருகின்றார். அத்துடன் இலண்டனில் Fereshteh வாழ ஏற்பாடு செய்வதாகவும் கூறுகின்றார். அங்கு வந்து Fereshteh வுடன் வாழவிரும்புகின்றார் என்பது Fereshteh க்கு தெரியாது. ஏற்கனவே இவருக்கு திருமணமாகி விட்டதும் தெரியாது. அதே சமயம் Fereshteh க்கு இவரின் திறமை மீது ஒரு மரியாதையே இருந்தது. இவரின் மீது காதல் இருக்கவில்லை. Fereshteh விரும்பியவன் தலைமறவாகி விடுகின்றான். இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் மனைவி Fereshteh ஐ சந்தித்து உண்மையைக் கூறுகின்றாள். அத்துடன் Fereshteh இலக்கிய சஞ்சிகை ஆசிரியரை சந்திப்பதை தவிர்த்து விடுகின்றார். அதன் பின்னரே நீதிபதிக்கும் Fereshteh க்கும் திருமணம் நடைபெற்றது. இவர்களின் திருமணத்தின் பின்னரும் இலக்கிய சஞ்சிகை ஆசிரியருக்கு Fereshteh ன் மீதிருந்த காதல் மாறவில்லை. இதுவே Fereshteh ன் கதை. இக் கதையை நீதிபதி வாசிப்பதன் மூலம் தன்னைப் போல் ஏழையாக இருந்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மறு வாழ்வு கிடைக்கும் என நம்புகின்றார். கடிதத்தை வாசித்து முடித்த நீதிபதி எந்த வித மாற்றங்களையும் வெளிப்படுத்தவில்லை.

மறு நாள் நீதிபதியும் சகாவும் விசாரணைக்கு செல்கின்றனர். பெண்மணி அழைத்து வரப்படுகின்றாள். சகா எதுவும் விசாரிக்காமல் தண்டனையை உறுதி செய்யவே விரும்புகின்றார். நீதிபதி அவரை வெளியில் அனுப்பி விட்டு அங்கிருந்த கதிரையில் அப் பெண்மணியை அமரும் படி கூறுகின்றார். 'உமது கதையைக் கூறும்' எனக் கூறிவிட்டு பதிலுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார். 'நான் மிகவும் கஸ்டமான குடும்பத்தில் பிறந்தேன்,,,,,,," என பதில் ஆரம்பமாவதுடன் படம் முடிவடைகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் 'ஒரே கடல்' என்ற மலையாளப் படத்தைப் பார்த்தேன். இப் படமும் ஒரு பெண்ணைப் பற்றியது. விளம்பரத்தில் கருத்தும் எழுதியிருந்தேன். இதன் பின்னர் ஒரு நிகழ்வில் ஒரு பெண்ணிடம் ஒரே கடல் பற்றி கதைத்த போது அவர் கூறியது இது 'ஒரு பெண் இப் படத்தை இயக்கியிருந்தால் முடிவு மாறியிருக்கலாம்' என்பதே அது. ஒரே கடல் ஆண் மொழியில் படைக்கப்பட்ட பெண் பற்றிய படம். ஆனால் இப் படம் ஒரு பெண் இயக்குனரின் படம். அதனால் தான் பல இடங்களின் பெண்களின் வாழ்வியல் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு புத்திஜீவியாக படித்த பெண்ணாக இருந்தாலும் கணவனுடன் சமமாக கதைக்கவே முடியாது. தள்ளி நிற்றல் என்பதே இங்கு பொருந்துகின்றது. ஒரு பெண்ணினால் தான்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.


8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

# நம்பிக்கையை விடாதே!




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். வாழ்க்கைக்குக் கைகொடுப்பது நம்பிக்கையே. தன்நம்பிக்கையும் கடவுள் நம்பிக்கையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது என்றார் சுவாமி விவேகானந்தர். நம்பிக்கையின் தொடக்கம் தன் நம்பிக்கை. தன்நம்பிக்கை இழிவு மனப்பான்மையிலிருந்து விடுதலை செய்கின்றது. தன்நம்பிக்கை ஒருவருக்குத் தோன்றிவிட்டால் வாழ்க்கையில் உயர்வதற்குரிய அனைத்து முயற்சிகளும் தலை எடுக்கும். நம்மால் முடியும் என்ற எண்ணத்தின் ஆற்றல் அளப்பரியது. இந்த நம்பிக்கையினாலே உலகில் சாதனைகள் நிகழ்ந்திருக்கிறது. வாழ்க்கையின் முதலும் முடிவுமாக இருப்பது தன்னம்பிக்கைதான் என்று அடிக்கடி கூறுவார் தவத்திருக்குன்றக்குடி அடிகளார்.

நண்பா!
நீயும் நானும் பட்ட பாடுகள் கொஞ்சமா? நமது உறவுகளும் ஊரவர்களும் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்குமா? சொல்லில் முடிக்கலாமா? யார் யாரையோ நம்பினோம். என்ன நடந்தது? ‘யாரை நம்பி நான் பிறந்தேன். போங்கடா போங்க என்காலம் வெல்லும் வென்றபின்னே வாங்கடா வாங்க’ என்ற கவிஞர் கண்ணதாசனின் கவிதைவரிக்குள் இருக்கும் நம்பிக்கையையும் தமிழ்ப்பண்பையும் எண்ணிப்பார். கடவுள் கூட எங்கள் பக்கம் இல்லையே என்று கவலைப்பட்டாய். கடவுளைக் காண்பதில் இருக்கும் கடினம் தான் அவர் செயல்களைப் புரிந்து கொள்வதிலும் இருக்கிறது. இதனால் அவர் இல்லை என்று முடிவுகட்ட முடியாது. கடவுள் இருக்கிறார். அவர் இயக்கத்தில் நமக்குப் பிடிப்பு இல்லையானால் நாம் அவரைப் பேசுவோம், குறைப்படுவோம். நமக்கு வழிகாட்டிய நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் ‘மூன்று கண் உடையாய் என் கண்கொள்வது நீதியோ மகத்தில் புகுந்த கனி எனக்காணாய்’ என்று திட்டயமைகடவுள் நமது உரிமைப்பொருள் என்பதைக் காட்டுகிறதே. நாம் கடவுளுக்கு உடமைப்பொருள். கடவுள் நமக்கு உரிமைப்பொருள். மறந்து விடாதே. கடவுள் நம்பிக்கையையும் தன்நம்பிக்கையையும் நழுவவிடாதே. நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சி தலை எடுக்காது. முயற்சியே நம்பிக்கையை உறுதிப்படுத்தும். நம்பிக்கை இல்லாத வாழ்க்கை நரகம். நம்பிக்கை இன்மையே ஒழுக்கக் கேடுகளுக்கு காரணம். நம்பிக்கை இல்லாத வாழ்க்கை சூனியம். நம்பிக்கை நமக்கு ஒளி. நம்பிக்கையே அறிவுக்கு வழித்தடம். நம்பிக்கையே மருந்தும் மந்திரமாகும்.

‘நம்பிக்கை என்பது வாழ்வுக்கு அடித்தளம். நம்பிக்கை ஓர் உள்ளப்பண்பு. நம்பிக்கை என்ற அகநிலைப் பண்பால் நன்மைகளே விளையும். சிலவேளைகளில் தீமையும் விளையலாம். தீமை நம்பிக்கையினால் விளைவதல்ல. நம்பிக்கை என்ற அகநிலைப் பண்பை தவறாகக் கடைப்பிடித்து ஒழுகினால் தான் தீமை விளையும்’ என்று நீண்ட விளக்கம் தருகிறார் குன்றக்குடி அடிகளார்.

நண்பா! நம்பிக்கை என்ற அகநிலைப் பண்பை தவறாகக் கடைப்பிடித்து ஒழுகினால்தான் தீமை வரும் என்ற அடிகளாரின் சிந்தனை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. நம்பிக்கைப் பண்பை தவறாகக் கடைப்பிடிப்பது எதனால் உருவாகிறது. மதியினாலா? இல்லை விதியினாலும் தான். விதி, ஊழ்வினை என்பதன் உண்மைநிலை. நம்பிக்கை தரும் தீமைகளால் புரிந்து கொள்ள முடிகிறது. விதி ஊழ்வினைகளை விலக்க நாம் முயற்சிப்போம். இந்த முயற்சிக்கும் நமக்கு வேண்டியது தன்னம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் தான்.

நண்பா!



நாம் நமது கடவுளை நம்புவோம். நாம் நமது பிரார்த்தனைகளை நம்புவோம். நாம் நமது உறவுகளை நம்புவோம் என்று நான் கூட்டங்களில் சொற்பொழிவாற்றும் போது சொன்னவற்றிற்கு விளக்கம் கேட்டிருந்தாய். அதற்காகவே இதனை எழுதினேன். நம்பிக்கை கொண்டு நாளும் வாழும் பயிற்சியை கைவிடாதே நண்பா! பிறந்த குழந்தையின் முதல்வார்த்தை அம்மா என்றே வருகிறது. ‘அம்மா என்று அழைக்காத உயிரில்லையே’ என்றான் ஒரு நவீன கவிஞன். குழந்தை வளர வளர அப்பா, அண்ணா, அக்கா, ஆச்சி, அப்பு என்னும் அகரவரிசை உறவுகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. இது போன்றே ஆண்டவன் உறவும் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். உள்ளத்திலே உறைந்து கிடக்கும் உறவின் உணர்வுகள் சொல்லிக் கொடுப்பதினாலே சொந்தமாகின்றன, பந்தமாகின்றன. ஆழமான அன்பும் நெருக்கமும் உறவும் சொல்லிக் கொடுப்பதினாலேயே வளர்ந்து செழுமையடைகின்றன.

சொல்லிக் கொடுக்காததினால் தெரிந்து கொள்ள முடியாத உறவுகள் சொந்தமில்லாது, பந்தமற்றதாய் அந்நியப்படுகிறது. ஆண்டவன் உறவில் அப்பூசாமி! அம்மையே அப்பா! அப்பனே! சங்கரா! முருகா! சதாசிவா! என்னும் பெயர்கள் சொல்லிக் கொடுப்பதினால் நெஞ்சில் பதிக்கப்படுகின்றன. இறைநாம பஜனை இறைவனோடு இணைவதற்கு உகந்ததோர் சொல்லிக்கொடுப்பாகும். இறைவனோடு, நம்பிக்கை உணர்வுடன் இயைந்து இணைந்து வணங்கிவாழும் ஒருவர் காலப்போக்கில் தனது இன்பங்களின் போதும் துன்பங்களின் போதும் இறைவன் பெயரையே கூறி அழைப்பார். துய்ப்பனவும், உய்ப்பனவும் தோற்றுவாய் நீ என்று போற்றிப் பரவுவார். தந்தை, தாய், சகோதர உறவுகள் அனைத்தும் இறைவனாய் உறைந்து நிற்கும். வழுக்கி விழும் போதும் கடவுள் பெயரே வாயில் வரும். ‘வழுக்கி வீழினும் உன் திருப்பெயரையே சொல்வேன்’ என்றார் ஒரு நாயனார்.

குடும்பத்திற்கு என்று ஒரு தெய்வமும் இதயத்திற்கு என்று ஒரு தெய்வமும் மனித மனத்தில் மருவும். குடும்பதெய்வம் சிவனாய் இருக்க இதய தெய்வம் முருகனாயிருக்கும். ஒரு ஆபத்தில், அவதியில், அங்கலாய்ப்பில் நமது வாயில் எந்தத் தெய்வத்தின் பெயர்வருகிறதோ அந்தத் தெய்வமே இதய தெய்வமாகும். ஆபத்து வேளையில் நம்மையும் அறியாமல் நமது நாக்கு உச்சரிக்கும் தெய்வம் நமது மனத்தில் கோயில் கொண்டிருக்கிறான் என்பதை எண்ணிக் கொள். நம்பிக்கொள்.

நண்பா! ‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்’ என்னும் அப்பர் தேவாரம், குழந்தையில் கேட்ட பெயரை வளர்ந்த பின்பும் மனத்தகத்தில் வைத்திருக்கும் வண்ணம் பற்றிக் கூறுகிறது. அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் என்பது இறந்து நீங்குவது இல்லை. மறந்து நீங்குவது ஆகும். ‘தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை (ஆன்மா) தலைவன் தாளே’ என்பது எண்ணி மகிழ வேண்டிய முதிர்வின் முனைப்பு இந்தத் தேவாரம் இறந்த போவதைக்கு குறிப்பதாகவே கருதப்பட்டு விட்டது. இதன் பொருள் வாழ்வியலோடு பொருந்தியே இருக்கிறது.

‘அப்பன் நீ! அம்மை நீ! ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒருருவம் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சம் துறவிப்பாய் நீ
இப்பொன் நீ! இம்மணி நீ! இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயோ!


என்னும் அப்பர் தேவாரம் பெற்றெடுத்தவர்களையும் பிற உறவுகளையும் நீயே தருகிறாய், நீயாகவே நிற்கின்றாய் என்று இறைவனை விளங்கவைத்த உறவு நிலை நமது கடவுள் நம்பிக்கைக்கு உரம் சேர்கிறதல்லவா? அப்பனில் அம்மையில் ஆண்டவனைக் காணும் நிலை நீங்கி ஆண்டவனில் அப்பனையும் அம்மையையும் காணும் நிலை தோன்றுவது நம்பிக்கையின் பரிணாமவளர்ச்சியாகும். நம்பிக்கையை நழுவவிடாதே!

வேறு என்ன?
பிறபின்பு அன்பு
ஈழத்துச்சிவானந்தன்




- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**



# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# நாதாலயாவின் 23வது ஆண்டுவிழா




வயலின், வாய்ப்பாட்டு போன்ற நுண்கலைகளை எம்பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்காக 1988ஆம் ஆண்டில் ஸ்காபரோவில் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடமாகிய 'நாதாலயா' (இசைக்கோவில்), தனது 23வது ஆண்டுநிறைவு விழாவை ஓகஸ்ட் 27, 2011 சனிக்கிழமை York Woods நூல்நிலைய அரங்கில் சிறப்பாக கொண்டாடியது. இவ்விழாவிற்கு கௌரவ விருநதினராக Active Brain Center நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. சுப்பிரமணியம் இராஜரட்ணம் அவர்களும் இராமநாதன் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் திருமதி. அங்கயற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை அவர்களும் வந்திருந்தார்கள்.

நாதாலயாவின் 23வது ஆண்டுவிழாவை எழிலினி ஜெயபாலனும் மாலினி செந்தில்நாதனும் தொகுத்து வழங்கினார்கள். விழா மாலை 5.00 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியகீதம் மற்றும் நாதாலயாவின் கல்லூரிக் கீதம் என்பவற்றை நாதாலயாவின் மாணவர்கள் இசைத்ததுடன் ஆரம்பமானது. தாயகத்தில் உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. இவற்றை தொடர்ந்து நாதாலயாவில் பலகாலமாக இசைபயின்ற வெண்ணிலா விக்னேஸ்வரன் கல்லூரியின் விழாவிற்கு வருகை தந்திருந்தோரையும், கௌரவ விருந்தினர்களையும் வரவேற்று உரை நிகழ்த்தினர். இதை தொடர்ந்து நாதாலய மாணவர்களது இசைக் கச்சேரிகளும், வயலின் கச்சேரிகளும் நடைபெற்றன. நாதாலயாவின் இளம் கலைஞரான காயத்திரி தயாபரராசா மற்றும் சுகன்யா சிவஜோதி ஆகியோர் தனியாக பாடி தமது திறமைகளை வெளிக் காட்டினார்கள். நாதாலயாவில் பலகாலமாக இசைபயின்ற மாணவிகளான தாமியா செந்தில்நாதன் மற்றும் பகீரதி செல்வராசா ஆகியோரும் தனியாக பாடி தமது திறமைகளையும் வெளிக்காட்டினார்கள்.


நாதாலயாவின் இளம் கலைஞர்களான மூன்று சகோதரர்களான கவேதன் யோகநாதன், பிரவீன் யோகநாதன் மற்றும் தீபன் யோகநாதன் ஆகியோர் சேர்ந்து வயலின் இசைக்கச்சேரி நடத்தி சபையோரை பரவசத்தில் ஆழ்த்தினார்கள்.

இவற்றை தொடர்ந்து கௌரவவிருந்தினர் திரு.சுப்பிரமணியம் இராஜரட்ணம் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் தற்கால மாணவர்கள் ஒரு இடத்தில் பொறுமையாக இருக்கவோ, அல்லது ஒரு விடயத்தில் மனதை ஒருமுகப்டுத்தவோ கஷ்டப்படுகிறார்கள். பல்கலைக் கழகங்களுக்கு பயிலச் செல்லும் மாணவர்களில் 40 வீதமானோர் படிப்பை தொடராமல் இடையில் விட்டு விடுகிறார்கள். நடனம் போன்ற கலைகளை பயிலும் மாணவர்களை விட வயலின் போன்ற இசைகளைப் பயிலும் மாணவர்களுக்கு மொழித்திறன், மனதை ஒருங்கிணைத்தல், ஞாபகசக்தி, பொறுமை என்பன மிகவும் தேவை. இவ்வாறு வயலின் பழகும் மாணவர்கள் தங்களது பாடசாலை கல்வியிலும் திறமையாக இருக்கிறார்கள். தமிழ் மொழித்திறன் அதிகம் தேவைஇல்லாததாலும், இங்கு நடைபெறும் தமிழர் கலை நிகழ்வுகளில் எல்லாம் நடன நிகழ்வுகள் நடப்பதாலும் இங்கு நடனம் பயிலும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை அதிக அளவாக இருக்கிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகள் வயலின் மற்றும் வாய்ப்பாட்டு பழகவும் அதிக அளவில் அனுப்ப வேண்டும். இதற்கு இவற்றை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கலைவிழா நடத்துபவர்கள் வயலின் மற்றும் வாய்ப்பாட்டு பயிலும் மாணவர்களுக்கு மெல்லிசை மற்றும் பண்ணிசை போன்றவற்றை பயிற்றுவித்து இங்கு நடைபெறும் தமிழர் கலை நிகழ்வுகளில் எல்லாம் இவர்களின் நிகழ்ச்சிகளை நடை பெறவைத்து ஊக்குவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

நாதாலயாவில் பலகாலமாக இசைபயின்ற மாணவிகளான பகீரதி செல்வராசாவின் வாய்ப்பாட்டு நிகழ்வும் அர்ச்சனா பாலமோகனின் வயலின் நிகழ்வும் தொடர்ந்தன. இலங்கையில் இருந்து கனடாவிற்கு வருகை தந்துள்ள நாதஸ்வர இசைமேதை அளவெட்டியை சேர்ந்த திரு. M.P பாலகிருஷ்ணன் அவர்களை நாதாலயா இசைகல்லூரி 'நாதஸ்வர இசைப் பேராசான்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது.

இடைவேளையின் பின்னர் கௌரவ விருந்தினரும் இராமநாதன் கல்லூரியில் 38 ஆண்டுகளை ஆசிரியராக பணிபுரிந்து உப அதிபராகவும் இருந்து இளைப்பாறிய

தொடர்ச்சி 40ஆம் பக்கம்



# நாதாலயாவின் 23வது

39 ஆம் பக்கத்தொடர்ச்சி

திருமதி. அங்கயற்கண்ணி சிவப்பிரகாச பிள்ளை உரையாற்றினார். அவர் ஸ்ரீமதி விஜயலஷ்சுமி சீனிவாசகம் இராமநாதன்




கல்லூரியில் கல்விபயிலும் போது இசைத்துறையில் எவ்வாறு சிறந்து விழங்கினார் என எடுத்துக் கூறினார். சிவகௌரி சிவநாதன், அவரது தங்கை சிவசங்கரி சிவநாதனுடன் சேர்ந்து இசைக்கச்சேரி நிகழ்த்தினார். இசைக் கச்சேரிக்கு இவர்களது தமையன் சிவகுமரன் சிவநாதன் மிருதங்கம் இசைத்தார். இவர் மூவரும் கௌரவவிருந்தினர் திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளையின் பேரப்பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களை தொடர்ந்து ஸ்ரீமதி விஜயலஷ்சுமி சீனிவாசகம் தனது உயர்தர வகுப்பு மாணவிகளுடன் சேர்ந்து இசை நிகழ்ச்சி ஒன்றை திறமையாக நடத்தினார். இதில் அவர்கள் பல பாடல்களை பாடி சபையோரை இசைவெள்ளத்தில் மூழ்க வைத்தனர். நாதாலயாவின் எல்லா நிகழ்ச்சிகளிற்கும் மிருதங்கஷேஸ்திரம் மாணவர்கள் மிருதங்கம் வாசித்தனர்.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நாதாலயா மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடந்தது. திருமதி. அங்கயற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை பரிசில்களை வழங்கினார். நாதாலயாவின் கடந்த வருடத்திற்குரிய மிகச்சிறந்த மாணவரிற்கான பரிசு சுகன்யா சிவஜோதிக்கு வழங்கப்பட்டது. சுகன்யாவை பற்றி கூறிய நாதாலயா அதிபர் ஸ்ரீமதி விஜயலஷ்மி சீனிவாசகம், சுகன்யா இசை வகுப்பிற்கு வரும்போது ஒவ்வொரு முறையும் வீட்டுவேலைகளை ஒழுங்காக செய்து கொண்டும் முந்தைய பாடங்களை மனனம் செய்து கொண்டும் வரும் மாணவி என்றார்.

இவற்றை தொடர்ந்து அர்ச்சனா பாலமோகனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் 10.00மணி அளவில் நிறைவெய்தின. இம்முறை நாதாலயாவின் ஆண்டுவிழா நல்ல அரங்கு ஒன்றில் நடை-பெற்றதும் ஒலி, ஒளி அமைப்புகள் நன்றாக இருந்ததும் நடைபெற்ற தரமான நிகழ்ச்சிகளுக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்திருந்தன.



அருந்ததி ஞா.







